# உதயன்

வானிலை

கூ.வெ. 31 °C
கு.வெ. 26 °C
மேகமூட்டம், மழை

சுடர் 30 | கதிர் 150 | வள்ளுவர் ஆண்டு 2046 | சித்திரை 12, சனிக்கிழமை 25.04.2015


## மைத்திரியை சந்திக்க பின்னடிக்கும் மஹிந்த!

கொழும்பு, ஏப். 25
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்திப்பதற்கு, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பின்னடித்துள்ளார். அதனால் இவர்களுக்கிடையில் இன்று நடைபெறவிருந்த சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக, நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

தற்போது எழுந்துள்ள நெருக்கடி தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையே சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கு ஜனாதிபதி மைத்திரியும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவும் இணக்கம் தெரிவித்திருந்தனர். அவர்கள் இருவருக்கும் இடையிலான சந்திப்பு இன்று இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனாலும் தற்போது அது இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த, நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம,
“இன்று இரவு 7 மணியளவில், இந்தச் சந்திப்பு பக்.02




நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் மக்கள் விடுதலை முன்னணியால் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக மாலை 4 மணிக்கு ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் “19ஆவது திருத்தம் உடனடியாக நிறைவேற்றப்படாவிடின் அரசுக்கு எதிராக மக்களை ஒன்றிணைத்து 19ஆவது திருத்தத்தை நிறைவேற்றக்கோரி போராடவுள்ளோம். ஜனாதிபதி, பிரதமர் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாவிடின் அரசுக்கு எதிராகப் போராடவும் மக்கள் விடுதலை முன்னணி தயாராகி வருகின்றது.”– என்று தெரிவித்தனர். (ற–10)

## ‘19’க்கு ஆதரவு சு.க. முடிவு

கொழும்பு, ஏப். 25
19 ஆவது திருத்தச் சட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்குவது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு முடிவு எடுத்துள்ளது. 19 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் இழுபறி நிலைமை தொடர்கின்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதற்கான ஆதரவை வழங்குவதில் ஆரம்பத்தில் பின்னடித்துக் கொண்டிருந்தது. தேர்தல் முறைமை மறுசீரமைப்பைக் பக்.02

## இ.போ.ச. பிரிப்புக்கு எழுந்தது எதிர்ப்பு

### சபை ஊழியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு



யாழ்ப்பாணம், ஏப்.25
இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய டிப்போவை இரண்டாகப் பிரித்ததற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. நேற்று யாழ்.பிரதான பஸ் நிலையத்தில் டிப்போவைப் பிரிக்க வேண்டாம் என்று வலியுறுத்தி சபையின் ஊழியர்கள் பஸ்களைக் குறுக்கே நிறுத்தி பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். பக்.02

# வடக்கு, கிழக்கில் அவயவங்கள் இழந்த 3,000 போராளிகள்

## 900 பேருக்கு விசேட கவனிப்பு தேவை
## புனர்வாழ்வு ஆணையாளர் தகவல்

கொழும்பு, ஏப்ரல் 25
புனர்வாழ்வு வழங்கப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகளில் 3 ஆயிரத்து 402 பேர் போரில் உடல் உறுப்புக்களை இழந்தவர்கள். அவர்களில் 900 பேர் வாழ்நாள் முழுவதும் பராமரிக்க வேண்டியவர்கள். – இவ்வாறு புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் ஜெகத் விஜேதிலக தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் உள்ள உடல் உறுப்புக்களை இழந்த 3 ஆயிரத்து 402 முன்னாள் போராளிகளில் 33 வீதமானவர்களுக்குச் சிறப்புக் கவனிப்புத் தேவைப்படுகின்றது. மோசமான காயங்களுக்கு உள்ளாகி உடல் உறுப்புக்கள் அகற்றப்பட்டவர்கள், முற்றாகப் பார்வைத் திறன் இழந்தவர்கள், பக்.02

## உள்ளக பொறிமுறை ஜூலையில் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 25
உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை எதிர்வரும் ஜூலை மாதம் ஆரம்பிக்கப்படும். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை என்று கூறியுள்ளார் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர.

ஐ.நா.விசாரணை அறிக்கை கடந்த மார்ச் மாதம் வெளியாகவிருந்த நிலையில், அதனை ஒத்திப் போடுமாறு இலங்கை அரசு, ஐ.நா. மனித உரிமைகள் சபையைக் கோரியிருந்தது. அப்போது, ஐ.நா. விசாரணைக்கு சமாந்தரமாக உள்ளக விசாரணையை, சர்வதேச தரத்துடன் மேற்கொள்வோம் என்று ஐ.நாவுக்கு அரசு உறுதியளித்தது. ஆனால் இந்த உள்ளக விசாரணையை ஆரம்பிப்பது தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் அரச தரப்பினரால் தெரிவிக்கப்பட்டு வந்தது.

ஆரம்பத்தில் ஏப்ரல் மாதம் உள்ளக விசாரணை பக்.02

## வடக்கு இ.போ.ச. பிரிப்பை நிறுத்தப் பிரதமர் உத்தரவு

### சரவணபவன் எம்.பியின் தலையீட்டால் உடன் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.25
வடபிராந்திய இலங்கைப் போக்குவரத்துச் சபை யாழ்., வன்னிப் பிராந்தியங்களாகப் பிரிக்கப்பட்ட போதும் அதனை நடைமுறைப்படுத்த வேண்டாம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றிரவு உத்தரவிட்டுள்ளார்.

இந்த விவகாரம் வடக்கில் பூதாகரமாக மாறியிருந்த நிலையில் அது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். – கிளிநொச்சி மாவட்ட நாடாளு பக்.02


தீர்வை கொண்டு வருமா பொதுத் தேர்தல்

பக்கம் 16


## தமிழர் மீள்குடியமர்வை இனவாதமாக்காதீர்கள்

### அர்ஜுன ரணதுங்க கோருகின்றார்

யாழ்ப்பாணம், ஏப். 25
தமிழ் மக்களின் நிலங்கள் விடுவிக்கப்பட்டு, அவர்கள் அங்கு குடியமர்வதை தேசிய பாதுகாப்புடன் முடிச்சுப் போட வேண்டாம். தேவையற்ற இனவாதத்தை தூண்ட வேண்டாம் என்று எச்சரித்துள்ள அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, நாட்டின் சுதந்திரத்துக்காக தமிழ் – முஸ்லிம் மக்களும் அர்ப்பணிப்புச் செய்தவர்கள் பக்.02

11 இளைஞர் கடத்தல் விவகாரம்

## கடற்படையினரை கைவிடுகிறது அரசு

கொழும்பு, ஏப். 25
கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமற்போன சம்பவம் தொடர்பான வழக்கில், கைது செய்யப்பட்டுள்ள கடற்படையினர் சார்பில், சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றத்தில் முன்னிலையாக மாட்டாது என்று, அரச தரப்பு பக்.02


இது வெறும் ஆசையல்ல பேராசை

பக்கம் 17


## புலிகளுக்கு எதிராகவே 60 சதவீத முறைப்பாடு

### ஜனாதிபதி ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை கூறுகிறது!

யாழ்ப்பாணம், ஏப். 25
வடக்கில் இடம்பெற்ற காணாமற்போதல் சம்பவங்களில் 60 சதவீதமான முறைப்பாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும், 30 சதவீதமான முறைப்பாடுகள் அரச படைகளுக்கு எதிராகவும், 5 சதவீமான முறைப்பாடுகள் ஆயுதக் குழுக்களுக்கு எதிராகவும் முன் வைக்கப்பட்டுள்ளன என்று காணாமற் போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

காணாமற் போனோர் பக்.21

## ‘19’ நிறைவேற்றுவதில் தொடர்கின்றது சிக்கல்

கொழும்பு, ஏப்.25
அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டவரைவை எதிர் வரும் 28 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளது. சட்டவரைவுக்கு ஆதரவாக வாக்களிப்பதாக ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன பக்.02

## மைத்திரியை சந்திக்க பின்னடிக்கும் மஹிந்த!

இடம்பெற இருந்தது. ஆனால், மஹிந்த ராஜபக்ஷவுக்கு இறுக்கமான நிகழ்ச்சிகள் உள்ளது. இதனால் அவருக்கு, ஜனாதிபதி மைத்திரியைச் சந்திக்க நேரமில்லை. இதனாலேயே சந்திப்பு இரத்துச் செய்யப்பட்டுள்ளது."– என்று குறிப்பிட்டார். (ற–5)

## '19'க்கு ஆதரவு சு.க. முடிவு

கோரும் 20 ஆவது திருத்தச் சட்டமும் சமர்ப்பிக்கப்பட்டால் மட்டுமே, 19 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவு வழங்குவோம் என்று அவர்கள் கூறிவந்தனர்.

இந்தப் பின்னணியில், சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொழும்பில் ஜனாதிபதியும் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நடந்தது. அதில் தேர்தல் மறுசீரமைப்பு – 20 ஆவது திருத்தச் சட்டம், அமைச்சரவையில் சமர்ப்பிக்கபட்டமை சுட்டிக்காட்டப்பட்டது. அதையடுத்து 19 ஆவது திருத்தச் சட்டத்தைநிறைவேற்றுவதற்கு,சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவு வழங்குவது என்று மத்திய செயற்குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.(ற–5)

## உள்ளக பொறிமுறை ஜுலையில்

ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால கூறியிருந்தார். பின்னர் அது ஜுலை மாதத்திலேயே ஆரம்பிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டிருந்தார். பிரதி வெளிவிவகார அமைச்சர், உள்ளக விசாரணை செப்ரெம்பரிலேயே ஆரம்பமாகும் என்று தெரிவித்திருந்தார். இவ்வாறு உள்ளக விசாரணை ஆரம்பிப்பது தொடர்பில் தெளிவான முடிவு இல்லாத நிலையே காணப்பட்டது.

இந்தநிலையில் தற்போது வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை எதிர்வரும் ஜுலை மாத பிற்பகுதியில் உருவாக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

"உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை உருவாக்குவதற்கு வெளிவிவகார அமைச்சு மும்முரமாக நடவடிக்கை எடுத்து வருகிறது. உள்நாட்டுப் பொறிமுறைக்கான வரையறைகளை தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்கு மூன்று, நான்கு தெரிவுகள் உள்ளன. இவற்றில் எமக்கு எது சிறந்தது என்று நாம் முடிவுசெய்வோம். எதிர்வரும் செப்ரெம்பர் மாதம், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 30 ஆவது கூட்டத் தொடரில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் தமது விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளது. எனவே, செப்ரெம்பரில், எப்படியாவது இந்த உள்நாட்டு விசாரணைப் பொறிமுறையை செயற்படுத்த அரசு தயாராக இருக்க வேண்டும்"– என்று அவர் கூறியுள்ளார். (ற–5)

# வடக்கு, கிழக்கில் அவயவங்கள் இழந்த 3,000 போராளிகள்

முற்றாக கேட்கும் திறன் இழந்தவர்கள், முழுமையாக உடல் செயற்திறன் இழந்தவர்கள் ஆகியோரும் அடங்குகின்றனர்– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் வாழ்நாள் முழுவதும் கவனிக்கப்பட வேண்டியவர்கள். அவர்களில் பெரும்பாலானவர்களின் வீடுகளில் அவர்களைக் கவனிக்கும் வசதிகள் இல்லை. சரியான மருந்துகளைப் பெறுவதற்கு பெரும்பாலானவர்களுக்கு நிதி நெருக்கடிகள் காணப்படுகின்றன. போரின்போது நெருக்கமான உறவுகளை இழந்துள்ள பலருக்கு அவர்களைக் கவனிக்கத் தற்போது வீடுகளில் யாரும் இல்லை.– என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

முன்னாள் போராளிகளுக்கான கவனிப்பு நிலையங்களை அமைப்பதற்கான யோசனை அரசியல் உயர் மட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மோசமான காயங்களுக்குள்ளான முன்னாள் போராளிகள் பிரச்சினை எதிர்காலத்தில் முக்கியமான சமூகப் பிரச்சினையாகக் காணப்படும். அவர்களை நாம் தீவிரவாதிகளாகக் கருத முடியாது. அவர்கள் புனர்வாழ்வு வழங்கப்பட்டு மீண்டும் சமூகத்தில் இணைக்கப்பட்டவர்கள். அவர்களின் சமூகப் பாதுகாப்பு விடயத்தில் அரசுக்குப் பொறுப்பு இருக்கின்றது.– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போரில் உடல் உறுப்புக்களை இழந்த இலங்கை இராணுவத்தினரை கவனிப்பதற்காக அபிமன்சலா நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோன்று, உடல் உறுப்புகளை இழந்த முன்னாள் போராளிகளைப் பராமரிப்பதற்கான நிலையங்களை வடக்கு, கிழக்கில் அமைப்பதற்கான சாத்திய அறிக்கைகளை தயாரித்து வருகிறோம். தேவைக்கு ஏற்ப எத்தனை நிலையங்கள் அமைக்கப்படுவது என்று முடிவு செய்யப்படும். அது கிளிநொச்சியில் அமையுமா? யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படுமா? என்று இன்னமும் முடிவு செய்யப்படவில்லை. – என்றும் அவர் கூறியுள்ளார்.(ற–5)

## வடக்கு இ.போ.ச. பிரிப்பை நிறுத்தப் பிரதமர் உத்தரவு

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொலைபேசியில் கலந்துரையாடினார். அதையடுத்து இலங்கைப் போக்குவரத்துச் சபைத் தலைமையகத்துக்கு இது தொடர்பில் அவர் அறிவித்துள்ளார்.

அதனையடுத்து வடபிராந்திய பிரிப்பை நடைமுறைப்படுத்த வேண்டாம் என்றும் அது தொடர்பில் நாளைமறுதினம் திங்கட்கிழமை நாடாளுமன்றில் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுப்பது என்றும் ரணில் உறுதியளித்துள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார். (ற–4)

## தமிழர் மீள்குடியமர்வை இனவாதமாக்காதீர்கள்

என்பதை மறக்க வேண்டாம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"முப்படைகளின் தளபதிகளின் ஆலோசனை பிரகாரமே தேசிய பாதுகாப்பு தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்படும். இவ்விடயத்தில் ஜனாதிபதியோ பிரதமரோ தலையிடமாட்டார்கள். நாட்டில் இன்று போர் இல்லை. எனவே வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டுள்ளன."– என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

"உயர் பாதுகாப்பு வலயங்களும் நீக்கப்பட்டு வடக்கில் தமிழ் மக்கள் மீளக்குடியமர்த்தப்படுகின்றனர். இதனை இனவாதமாக சிலர் பரப்புரை செய்கின்றனர். தமிழ் – முஸ்லிம் மக்களும் இந்நாட்டு மக்களே. அவர்களும் நாட்டின் சுதந்திரத்திற்காக அர்ப்பணிப்பு செய்தனர். எனவே அந்த மக்களை ஒதுக்கிவிட முடியாது. இன்று நாட்டில் போர் இல்லை. இதன் சுதந்திரத்தை மக்கள் அனுபவிக்க வேண்டும். துப்பாக்கிகளுடன் படையினர் நாட்டுக்குள் நடமாடினால் சுற்றுலாப் பயணிகள் இங்கு வருவார்களா? சுற்றுலாத் துறையை இங்கு அபிவிருத்தி செய்ய முடியுமா?."– என்றும் அவர் அங்கு கேள்வியெழுப்பினார்.

"30 வருடங்களாக இனவாதத்தால் நாமும் நாடும் அழிந்தது போதும். எனவே, இனியும் இனவாதம் வேண்டாம். சில ஊடகங்கள் இனவாதத்தை தூண்டும் விதத்தில் செயற்படுகின்றன. இது மிகவும் கவலையளிக்கும் விடயமாகும். தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் மட்டுமல்ல சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களிலும் படைமுகாம்கள் அகற்றப்பட்டுள்ளன. சில பத்திரிகைகள் வியாபாரத்துக்காக இன வாதத்தை தூண்டுகின்றன. இது கைவிடப்பட வேண்டும். "– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(ற–5)

# இ.போ.ச. பிரிப்புக்கு எழுந்தது எதிர்ப்பு

அதனால் பயணிகள் கடும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

அங்கு சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். – கிளிநாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் குறித்த பிரச்சினை தொடர்பில் மத்திய அரசுடன் கலந்துரையாடி சாதகமான பதிலைப் பெற்றுத் தருவதாகக் கூறியதையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

தமது போராட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த சபையின் ஊழியர்கள், "வடபிராந்திய டிப்போவை இரண்டாகப் பிரித்துள்ளனர். அதனைத் தாம் ஒரு போதும் ஏற்க மாட்டோம். மீண்டும் வடபிராந்திய டிப்போவை இணைக்க வேண்டும்."– என்று கோரினர்.

"இங்குள்ள சில அமைச்சர்கள் தமது சுயலாபத்துக்காக இதனைப் பிரித்துள்ளனர். முகாமையாளர் பதவிக்கு ஆசைப்படுபவர்களும் டிப்போவைப் பிரிப்பதில் தீவிரமாகவுள்ளனர். கிழக்கில் 17 டிப்போக்கள் உள்ள போதும் ஒரேயொரு தலைமையகமே உள்ளது. அவ்வாறிருக்கையில், 7 டிப்போக்களைக் கொண்டுள்ள வடபிராந்தியம் எதற்காகப் பிரிக்கப்பட வேண்டும்?. இதற்கு உரிய தீர்வு வேண்டும்."– என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

"இலங்கை அரசு, தமிழ் மக்களைப் பிரித்தாளும் தந்திரத்தைக் கொண்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியினர் விடுதலைப் புலிகளை எவ்வாறு பிரித்து ஆண்டார்களோ அதே போல வடபிராந்திய டிப்போவைப் பிரித்துள்ளனர். யாழ்., வன்னிப் பிராந்தியம் எனப் பிரித்துள்ளனர். எம்மைக் கூறுபோட்டு அவர்கள் செயற்படுகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனே திட்டமிட்டுச் செயற்பட்டுள்ளார். வடபிராந்திய முகாமையாளராக இருந்த அஸ்கருக்கு அவரே உறுதுணையாக இருந்து பிரித்துள்ளார்."– என்றும் அவர்கள் கூறினார்கள்.

"அஸ்கர் என்பவர் பல மோசடிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார். அவர் பற்றிய அறிக்கைகள் விசாரணைக்காகக் கொடுக்கப்பட்டுள்ளன. இன்னும் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. விசாரணை நடக்கிறது. இந்நிலையிலேயே விஜயகலா மகேஸ்வரன் ஊழல் பேர்வழியான அஸ்கரை திட்டமிட்டு மறைத்து வைத்திருக்கிறார். விஜயகலா மகேஸ்வரன் இதனை உணர்ந்து எனியாவது திருந்தி நடக்க வேண்டும். வடக்கிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்."– என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பால் பயணிகள் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது. அதனால் சம்பவ இடத்துக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன், ஊழியர்களுடன் கலந்துரையாடினார். எதிர்வரும் புதன்கிழமையன்று அல்லது அதற்கு முன்னர் அது தொடர்பில் சாதகமான பதிலைத் தருவதாகவும் அது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசுடன் பேசி வருகின்றனர் என்று கூறியதையடுத்து பணிப்புறக்கணிப்புக் கைவிடப்பட்டது. அதற்கிடையில் சாதகமான பதில் கிடைக்கத் தவறின் எதிர்வரும் வியாழக்கிழமையிலிருந்து பணிப்புறக்கணிப்புத் தொடரும் என்று ஊழியர்கள் தெரிவித்தனர்.

ஊழியர்களின் குற்றச்சாட்டுத் தொடர்பில் பிரதி அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, அது பற்றித் தனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தார். (ற–4)

## கடற்படையினரை கைவிடுகிறது அரசு

சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்துள்ளார். கடத்தப்பட்ட இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகச் சொல்லப்படும் திருகோணமலை கடற்படை முகாம் தொடர்பில் விசாரணை நேர்கொள்ளப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டிருந்தனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாக கடற்படையின் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட 8 கடற்படையினர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பிலான வழக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர், காணாமற்போன இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் திருகோணமலையில் அமைந்துள்ள முகாம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக அதிகாரிகள் குழுவொன்று அங்கு சென்றுள்ளது என்று தெரிவித்தனர்.

இதேவேளை– இந்த வழக்கு விசாரணைக்காக எதிர்காலத்தில் கடற்படையினர் தரப்பில் சட்ட மாஅதிபர் திணைக்களம் நீதிமன்றத்தில் முன்னிலையாக மாட்டாதென சட்ட மா அதிபர் சார்பாக நீதிமன் றத்தில் முன்னிலையாகியிருந்த அரச தரப்பு சட்டத்தரணி தெரிவித் தார்.

அதேவேளை, இந்த வழக்கிலிருந்து தாம் ஒதுங்கிக்கொள்வதாக கடற்படை சார்பாக பிரசன்னமாகியிருந்த சட்டத்தரணி நீதிமன்றத்தில் அறிவித்தார். எனினும், கடற்படை தளபதி சார்பாக மன்றில் முன்னிலையாக வேண்டும் என்று நீதிவான் இதன்போது அறிவித்தல் விடுத்தார். எவ்வாறாயினும், சட்ட மா அதிபர் மற்றும் பொலிஸ் மா அதிபர் இருவர் சார்பாகவும் சட்ட மா அதிபர் திணைக்களம் பிரசன்னமாவதாக அரசதரப்பு சட்டத்தரணி கூறினார்.

இந்த வழக்கு விசாரணை ஜுன் மாதம் 3 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ற–5)

## '19' நிறைவேற்றுவதில் தொடர்கின்றது சிக்கல்

தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்தியகுழு நேற்று முன்தினம் தீர்மானித்துள்ள நிலையில், அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் நேற்றும் '19' இற்கு தமது எதிர்ப்பை வெளியிட்டமையாலேயே இந்நிலை உருவாகியுள்ளது.

19 இற்கு ஆதரவாக வாக்களித்து, அதை நிறைவேற்றுவதற்கு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் கோரிக்கை விடுத்திருந்தார். இந்நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சட்டவரைவுக்கு ஆதரவளிப்பது குறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை என்றும், தாம் முன்வைக்கும் திருத்தங்களை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். என்றும் நேற்று உறுதிபடத் தெரிவித்தனர். மைத்திரி அரசின் 100 நாள்கள் நிறைவடைந்துள்ளதால், வாக்குறுதியளித்தவாறு நாடாளுமன்றத்தைக் கலைக்கவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யின் விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. அதில், தினேஷ் குணவர்த்தன, பந்துல குணவர்த்தன, ஜீ.எல்.பீரிஸ், டலஸ் அழகப்பெரும, குமார வெல்கம, வாசுதேவநாணயக்கார ஆகியோர் கலந்து கொண்டனர். (ற–சி)

# அவல வாழ்வு வாழும் மக்களுக்கு உதவுங்கள்

## பாகிஸ்தான் பிரதித் தூதுவரிடம் யாழ்.வர்த்தகர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 25
போரின் போது இலங்கை அரசுக்கு உதவிய பாகிஸ்தான், போரினால் பாதிக்கப்பட்டு இன்னும் அவலத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு உதவப் பாகிஸ்தான் முன்வர வேண்டும் என்று பாகிஸ்தான் நாட்டு இலங்கைக்கான பதில் தூதுவரிடம் யாழ். வர்த்தக சங்கம் கோரியுள்ளது.
பாகிஸ்தானின் இலங்கைக்கான பிரதித் தூதுவர் கலாநிதி எஸ். அஹமட் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். அவர் யாழ்.வர்த்தக சங்கத்தில், யாழ்.வர்த்தகர் சங்கத்தினரைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது இந்த விடயத்தைத் தூதுவரிடம் சுட்டிக் காட்டியதாக யாழ்.வர்த்தகர் சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவித்தார்.
முன்னர் பாகிஸ்தான் சென்றிருந்த இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருநாட்டு சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தார். அதனைச் சிறப்பாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராயத் தூதுவர் இங்கு வந்திருந்தார். அது பற்றிய விளக்கக் கருத்தமர்வை ஒன்றை யாழ்ப்பாணத்தில் வர்த்தகர்களுக்கு நடத்தவுள்ளதாகவும், அதற்கான ஏற்பாடு ஒன்றைச் செய்ய ஆர்வமாக உள்ளதாகவும் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.
பொருள்கள் ஏற்றுமதி, இறக்குமதிக்கு அது உதவும். அதனை வலுப்படுத்துவது பற்றியும் அதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது என்று ஜெயசேகரம் மேலும் தெரிவித்தார். (த-4)

## உணவகத்தில் வாள்வெட்டு இருவர் காயம்: மூவர் கைது



கொடிகாமம், ஏப்.25
சாவகச்சேரியில் உணவகம் ஒன்றில் நடந்த வாள் வெட்டில் இருவர் படுகாயமுற்ற நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அருகில் உள்ள உணவகம் ஒன்றிலேயே மாலை 6 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. உணவகத்தில் பணி யாற்றிய மல்லாவி தேறாங்கண்டலைச் சேர்ந்த மருது லோஜன் (வயது–28), அதே இடத்தைச் சேர்ந்த சேவுகன் றஞ்சித் (வயது–37) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.
உணவகத்துக்கு மதுபோதையில் வந்த நால்வர் உணவுக்கு ஓடர் கொடுத்துவிட்டு இருக்கையிலிருந்து கொண்டு தாகாத வார்த்தைகளால் பேசியவாறு குழப்பங்களை உண்டாக்கினர் என்றும் உணவக உரிமையாளர் அவர்களை வெளியில் செல்லுமாறு கூறியதனால், வாக்குவாதம் இடம்பெற்று கைகலகலப்பாக மாறியது என்றும் தெரிவிக்கப்பட்டது.
உணவுக்காக வந்தவர்கள் திடீரென வாள்களை எடுத்து வெட்டி பெரும் கலவரத்தையுண்டு பண்ணியுள்ளனர். இதனால் உணவகத்தின் கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டும் மென்பான போத்தல்கள் பலவும் உடைத்து நாசமாக்கப்பட்ட நிலையில், பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து வந்தவர்கள் வாள் ஒன்றை விட்டுவிட்டு ஓடியுள்ளனர்.
சம்பவ இடத்திற்கு வந்த சாவகச்சேரிப் பொலிஸார் வாள்களைக் கைப் பற்றியுள்ளதுடன் தகராறில் ஈடு பட்ட மூவரையும் கைதுசெய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-105)

## யாழ்.பல்கலை மருத்துவபீடத்தின் நாடக விழா நாளை



யாழ்ப்பாணம், ஏப்.25
யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் 34ஆவது அணி மாணவர்களின் ஏற்பாட்டில் நடத்தப்படும் நாடக விழா நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.
யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் கூவர் கேட்போர் கூடத்தில் மாலை 5.30 மணிக்கு இந்த நாடக விழா ஆரம்பமாகவுள்ளது. மருத்துவ பீட மாணவர்களின் தயாரிப்பு மற்றும் நெறியாள்கையில் உருவான 4 நாடகங்கள் இந்த விழாவில் மேடையேற்றப்படவுள்ளன.
வருடாவருடம் இந்த நாடக விழா யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் நடத்தப்பட்டு வருகின்றது என்றும், நாடக விழாவில் பல்துறை சார்ந்தவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர் என்றும் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (ற)

## சாந்தைச் சந்தி வரை பஸ் சேவை நடத்துக

### பொதுமக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 25
மாவிட்டபுரம் வரையில் தற்போது நடத்தப்படும் பஸ் சேவையை, அண்மையில் வலி.வடக்கில் விடுவிக்கப்பட்ட சாந்தைச் சந்தி வரையில் நடத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த பகுதிகளில் ஒரு தொகுதி விடுவிக்கப்பட்டுள்ளது. விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மக்கள் துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். மேலும் இந்தப் பகுதிகளுக்குச் சென்று வருவதற்குரிய போக்குவரத்து வசதிகள் இன்னமும் ஏற்படுத்திக்கொடுக்கப்படவில்லை.
அதனால் மக்கள் மாவிட்டபுரம் கோயிலிருந்து சுமார் 2 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட தூரம் வரையில் நடந்து சென்றே, தமது வீடுகளைத் துப்புரவு செய்ய வேண்டிய நிலையில் உள்ளனர். தினமும் நூற்றுக் கணக்கான மக்கள், தமது வளவுகளைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். குறித்த பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டு இரண்டு வாரங்கள் கடந்துள்ள நிலையிலும் போக்குவரத்துச் சேவை இன்னமும் ஏற்படுத்திக் கொடுக் கப்படவில்லை.
தற்போது மாவிட்டபுரம் வரையில் இடம்பெறும் பஸ் சேவையை, விடுவிக்கப்பட்ட பிரதேசத்தின் எல்லைப் பகுதியான சாந்தைச் சந்தி வரையில் நீடிக்க வேண்டும் என்று துப்புரவுப் பணிக்குச் சென்று வரும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-5)

## ஒரு வாரத்தில் கஞ்சாவுடன் ஏழு பேர் மன்னாரில் கைது



மன்னார், ஏப்.25
மன்னாரில் வெவ்வேறு பிரதேசங்களில் கடந்த ஒரு வாரத்தில் கஞ்சா பக்கெற்றுக்களுடன் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
மன்னார் மதுவரித்திணைக்களத்தின் பொறுப்பதிகாரி என்.நந்தகுமார் தலைமையில் மதுவரிப் பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனை நடவடிக்கைகளின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மன்னார் நகர்ப்பகுதி, எருக்கலம்பிட்டி, சிலாவத்தை, பள்ளிமுனை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது இந்த 7 பேரும் கைது செய்யப்பட்டனர்.
7 பேரிடமும் இருந்து மொத்தமாக 22 கிராம் நிறையுடைய கஞ்சா பைக்கற்றுக்கள் கைப்பற் றப்பட்டுள்ளன. கைது செய்யப் பட்ட 7 பேரும் நீதிமன்றில் முற் படுத்தப்பட்டபோது 81 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட் டிருந்தது.
மன்னார், மாவட்டத்தில் தற் போது கஞ்சா பைக்கற்றுக்கள் விற்பனை செய்யப்படுவதாகவும் மதுவரி பரிசோதகர்கள் தொடர்ந்து சோதனை நடவடிக் கைகளில் ஈடுபட்டுள்ளனர் என் றும் மன்னார் மதுவரித்திணைக் களத்தினர் தெரிவித்துள்ளனர்.(ற-14)

## பண்ணையில் புதிதாக பாலம்

யாழ்ப்பாணம், ஏப்.25
யாழ்ப்பாணம் பண்ணை அல்லைப்பிட்டி வரையான பண்ணை வீதியிலுள்ள இரும்புப் பாலம் அகற்றப்பட்டுஅதற்குப்பதிலாகபுதிதாக கொங்கிறீற் பாலம் அமைக்கப் படவுள்ளது.
தற்போது உள்ள இரும் புப் பாலம் அடிக்கடி பழுதடைவதால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படு கின்றது.
இரும்புப்பாலத்தைகழற்று வதற்காக வேலைகள் பெரும்பா லும் அடுத்த மாதத்தில் ஆரம்பிக்கப் படும் எனவும் கூறப்படுகின்றது.
பண்ணைப் பாலம் வீதி தற்சமயம் காப்பெற் வீதியாக மாற்றும் நடவடிக்கைகளின் ஒன்றாகவே இரும்புப் பாலம் அகற்றப்பட்டு, அவற்றுக்குப் பதிலாக கொங்கிறீற் பாலம் அமைக்கப்படுகிறது. மண்டைதீவுக்கு அண்மையாக பண்ணை வீதியில் மற்றும் ஒரு புதிய கொங்கிறீற் பாலம் அமைக்கப்பட்டு வருகின்றது. தற்போதுள்ள இரும்புப்பாலம் மற்றும் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கொங்கிறீற் பாலத்தின் கீழாக மீன்பிடிப் படகுகள் செல்லக் கூடியதான கடற்பாதைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.(ற-7)

## கஞ்சாவுடன் கைதானவருக்கு அபராதம்

வவுனியா, ஏப்.25
வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் வைத்து கேரளா கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட ஒருவருக்கு நீதிமன்று தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபரா தம் விதித்துள்ளது.
மதுவரித் திணைக்களத்தின் வடமாகாண உதவி ஆணையாளர் சுமேத வசந்த சிறியின் பணிப்புரைக்கமைய வவுனியா மாவட்ட மதுவரித் திணைக்களத்தால் வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் வைத்து கடந்த திங்கட்கிழமை 830 கிராம் கேரளா கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போதே அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. (ற-402)

## ஓட்டுத் தொழிற்சாலையை மீண்டும் இயங்குங்கள்

### மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஏப்.25
விடுதலைப் புலிகள் காலத்தில் இயக்கப்பட்ட ஓட்டுத் தொழிற்சாலையைத் தற்போது அரசால் ஏன் இயக்க முடியாதுள்ளது? –என்று மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டம் மட்டுமல்லாது அனைத்து மாவட்ட மக்களுக்கும் பயன்படக் கூடியதாகவும் 200–300 குடும்பங்களுக்கு வாழ்வாதாரமாக விளங்கிய இத்தொழிற்சாலையானது இன்று காடு படர்ந்து இயங்காத நிலையில் உள்ளது.
விடுதலைப்புலிகள் காலத்தில் இயங்க வைத்த தொழிற்சாலை இன்று அரசால் இயக்க வைக்க முடியாதது ஏன் எனப் புரியவில்லை. தொழிற்சாலையை மீண்டும் இயங்க வைத்து மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஆவன செய்யப்பட வேண்டும்.– என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-500)

## விசிறப்பட்ட களை நாசினிகள் எவையும் பயனளிக்கவில்லை

### முல்லை மாவட்ட விவசாயிகள் கவலை

முல்லைத்தீவு, ஏப்.25
முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாயத்துக்கு விசிறப்படும் களை நாசிகள் எவையும் பயனளிக்கவில்லை என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர். அதனால் தமக்கு 7 ஆயிரம் ரூபா முதல் 8 ஆயிரம் ரூபா வரையில் நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.
கோரை மற்றும் நெற்சப்பி, கோழிச்சூடன், நீர்ப்புல்லு என்பனவற்றுக்கு களை நாசினிகளை அடித்தும் பயன் ஏற்படவில்லை. அதனால் களை நாசினிகளை விற்பனை செய்வதை நிறுத்தப்பட வேண்டும். நல்ல விளைச்சலையும் பெறமுடியாது போய்விட்டது. உரிய நிறுவனம் முகவர்களும் பார்வையிட்டு, அவர்கள் பரிந்துரைப்படி மருந்துகள் விசிறப்பட்டும் அவை பயனளிக்கவில்லை என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.
தமது நஷ்டத்துக்கு நிறுவனம் முகவர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.(ற-500)

## சட்டவிரோத மீன்பிடி: 12 மீனவருக்கு அபராதம்

வலி.தென்மேற்கு,ஏப்.25
நாயாறு கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி சட்ட விரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபட்ட 13 மீனவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 12 மீனவர்களுக்கு 64 ஆயிரம் ரூபா விதித்த முல்லைத்தீவு மாவட்டநீதிவான் கைப்பற்றப்பட்ட வலைகளையும் கடலுணவுகளையும் அழிக்குமாறு உத்தரவிட்டதுடன் 15 வயது சிறுவனை எச்சரிக்கை செய்து விடுதலை செய்தார்.

முல்லைத்தீவு கடற்பரப்பில் நாயாறு கடலேரியில் கடந்த புதன்கிழமை அதிகாலை தடை செய்யப்பட்ட தங்கூசி முக்கூட்டு வலைகளைப் பயன்படுத்தி சட்ட விரோதமான முறையில் சிலர் கடற்றொழிலில் ஈடுபடுவதாக முல்லை மாவட்ட கடற்றொழில் திணைக்களத்துக்கு கிடைத்த தகவலை அடுத்து ஒரு சிறுவன் உட்பட 13 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து தடை செய்யப்பட்ட வலைகளும், கடலுணவுகளும் கைப்பற்றப்பட்டன. கைதானவர்கள் முல்லைமாவட்ட நீதிவானிடம் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

நீதிமன்றில் 13 மீனவர்களும் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து 8 மீனவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதமும் 4 மீனவர்களுக்கு தலா 6 ஆயிரம் ரூபா வீதமும் 64 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான் கைப்பற்றப்பட்ட வலைகளையும் கடலுணவுகளையும் அழிக்குமாறு உத்தரவிட்டார். அத்துடன் சிறுவனை இந்தத் தொழிலில் ஈடுபட வேண்டாம் என்றும் பாடசாலைக்கு செல்லுமாறும் புத்திமதி கூறி எச்சரித்து விடுவித்துள்ளார். (ற–115)



# ஏழு உவர் நீர் தடுப்பணைகள் ஆபத்தில்

### அவசியம் புனரமைக்கப்பட வேண்டி உள்ளன என யாழ்.மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.25
தீவகப் பகுதியில் பல தசாப்தங்களாகப் புனரமைக்கப்படாத 7 உவர் நீர்த் தடுப்பணைகள் அவசியம் புனரமைக்கப்படவேண்டியுள்ள. அதற்கு 140 மில்லியன் ரூபா தேவையாகவுள்ளது. நிதி கிடைக்காததால் அதனைச் செய்ய முடியவில்லை. – இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ்.சர்வராஜா.

தீவகப் பகுதியில் உள்ளடங்கும் காரைநகரில் 3 தடுப்பணைகளும், ஊர்காவற்துறையில் 2 தடுப்பணைகளும், வேலணையில் 2 தடுப்பணைகளும் புனரமைக்கப்பட வேண்டியுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

"யாழ்.மாவட்டத்தில் 27 தடுப்பணைகள் உள்ளன. அவற்றில் 7 தடுப்பணைகள் பல தசாப்தங்களாகப் புனரமைப்பின்றி உள்ளன. அவை அவசரமாகவும் அவசியமாகவும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. 20 தடுப்பணைகளில் பெரும்பாலானவை புனரமைப்புச் செய்யப்பட்டுவிட்டன. ஒருசிலவற்றில் புனரமைப்புப் பணிகள் நிறைவடையும் தறுவாயில் உள்ளன. புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்த பின்னர் அவற்றைப் பராமரிக்கும் நடவடிக்கையே இருக்கும். ஆனால் புனரமைப்பின்றி உள்ள தடுப்பணைகளைப் புனரமைப்புச் செய்வதன் மூலமாகவே கடல் நீர் நிலப் பகுதிக்கு வருவதனைத் தடுக்க முடியும். கடல்நீர் நிலப்பகுதிக்கு வருமாக இருந்தால் நிலப்பகுதி நீர் உப்பு நீராக மாற வாய்ப்புள்ளது. எனவே அதனைத் தடுக்க வேண்டும்.

அந்தத் தடுப்பணைகள் ஒவ்வொன்றுக்கும் சுமார் 20 மில்லியன் ரூபா பணம் தேவை. தற்போதைக்கு 100 மில்லியன் ரூபா நிதி கிடைத்தாலும் அந்தத் தடுப்பணைகளைப் புனரமைக்க முடியும்."– என்றும் அவர் தெரிவித்தார். (ற–4)




*மன்னார் மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெண்களை தலைமைத்துவமாக கொண்டு இயங்கும் குடும்பங்களுக்கு வட மாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரனின் குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட தையல் இயந்திரங்கள் நேற்று வழங்கப்பட்டன. மன்னார் மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வரும்,மற்றும் பெண்களை தலைமைத்துவமாக கொண்டு இயங்கும் குடும்பப் பெண்கள் 16 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் குறித்த தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.* (ற–56)

## வலி.வடக்கில் குடியமர்ந்த குடும்பமொன்றுக்கு உதவி

### வட மாகாண சபை – தனிநபர் இணைந்து வழங்கினர்

யாழ்ப்பாணம், ஏப். 25
வலி.வடக்கில் மீளக்குடியமர்ந்த குடும்பத்துக்கு, அரச உதவிகள் எதுவும் வழங்கப்படாத நிலையில், வடக்கு மாகாண சபையும் – தனிநபர் ஒருவரும் இணைந்து தற்காலிக வீடமைப்பதற்குரிய உதவிகளை முதல்கட்டமாக வழங்கியுள்ளனர். பளை – வீமன்காமம் வடக்கில் குடியமர்ந்த பாலேஸ்வரனின் குடும்பத்துக்கே கடந்த புதன்கிழமை இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

வலி.வடக்கில் இறுதியாக விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இரண்டு குடும்பங்கள் மாத்திரமே மீளவும் வந்து அங்கு குடியமர்ந்துள்ளன. பளை வீமன்காமம் வடக்கில் ஒரு குடும்பமும், வறுத்தலைவிளானில் ஒரு குடும்பமுமே இதுவரையில் மீளக் குடியமர்ந்தவர்களாவர். இவர்களுக்கு அரச உதவிகள் எவையும் வழங்கப்படவில்லை.

அவர்களின் வீடுகள் முழுமையாக இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. அதனால், மீளக்குடியமர்வதற்கான அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். தற்காலிகமாக, கட்டடமாக மாத்திரம் எஞ்சியுள்ள சனசமூக நிலையத்தில் தங்கியிருந்து, தமது காணிகளைத் துப்புரவு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்களது அவல நிலை தொடர்பில் ஊடகங்களின் வாயிலாக சுட்டிக்காட்டப்பட்டது.

அதையடுத்து, சங்கானையைச் சேர்ந்த பசுமைப் புரட்சியாளன் செ.கோபாலகிருஷ்ணன் தற்காலிகவீடமைப்பதற்கான ஒருதொகுதி உதவியையும், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவின் நிதிப் பங்களிப்புடன் ஒரு தொகுதி உதவியுமாக, முதல் கட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உதவி வழங்கும் நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன்,பசுமைப்புரட்சியாளன்செ.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற–5)

## போத்தல் கள் உற்பத்தியை அதிகரிப்பதற்குத் திட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.25
யாழ். குடாநாட்டில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இம்முறை கூடுதலாக போத்தல் கள் உற்பத்தி செய்யவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்பான முறையில் போத்தலில் அடைக்கப்படும் இந்தக் கள் வெளிமாவட்டங்களில் சந்தைப்படுத்துவதற்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இலங்கை நுகர்வோர் கூட்டுறவு சம்மேளனத்தின் உதவியுடன் இந்தப் போத்தல் கள் ஏற்றுமதி செய்யப்படவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. யாழ். குடாநாட்டில் கடந்த ஆண்டில் இருபது லட்சம் வரையான போத்தல் கள் சந்தைப்படுத்தப்பட்டன. இந்த ஆண்டில் அதை மேலும் அதிகரிப்பதற்கும் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுக் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் என்.கணேசன் தெரிவித்தார்.

தற்போதைய பருவப் பெயர்ச்சிக் காலம் ஆகையால் போத்தலில் கள் அடைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற–17)

## காணியை விடுவிக்கக் கோரி மூதாட்டி மீண்டும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.25
அம்மா தந்த காணி என்பதால் எனக்கு இது பெறுமதியானது. என்னுடைய சொந்தகாணியை இராணுவத்தினர் விடுக்கவேண்டும் இல்லை என்றால் தற்கொலை செய்து கொள்வேன். – இவ்வாறு கனேடிய பிரஜையான 65 வயதுடைய மூதாட்டி ஒருவர் இரண்டாவது தடவையாக நேற்றும் கிளிநொச்சி பரந்தனில் சாகும் வரையான உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார். காரைநகரைப் பிறப்பிடமாக கொண்ட இந்திரா யோகேந்திரன் என்னும் 65 வயதுடைய மூதாட்டியே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டார்.

பரந்தன், முல்லைதீவு வீதியில் மதகடியில் உள்ள தனது 7 ஏக்கர் கொண்ட உறுதிக்காணியை இராணுவத்தினர் சுவீகரித்து வைத்திருக்கின்றார்கள். நான் கனடாவில் வசித்து வந்தாலும் இது எனக்கு அம்மா தந்த காணி. அதனால் தான் எனக்கு [illegible] பெறுமதியாக இருக்கின்றது. எனது உயிர் போவதற்குள் இந்த காணிக்குள் ஒரு முறையாவது குடியமர வேண்டும். – என்று அவர் தெரிவித்தார்.

மூதாட்டியின் காணியில் இராணுவத்தினரின் மக்கள் தொடர்பாடல் அலுவலகம் அமைந்திருக்கின்றது. இந்த காணியை விடுவிப்பதற்கு இவர்கள் ஏன் தயங்குகின்றார்கள்? இதற்கு பின்னால் நிறைய சதி வேலைகள் நடைபெற்றிருக்கின்றன. எனது மச்சான், நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் ஆகியோருக்கும் இதில் தொடர்பு உண்டு. நான் தோற்றுப் போய்விட்டேன். எனது உயிர் பிரிவதற்கு முன் இந்தக் காணியில் நான் வாழ வேண்டும்.– என்றும் அவர் தெரிவித்தார்.



தகவலை அறிந்து குறித்த இடத்திற்கு வருகை தந்த கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜயந்த டி செல்வா இன்னும் ஒரு மாதத்தில் தான் இந்தக் காணியைப் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும் தன்னை நம்பி உண்ணாவிரதத்தை கைவிடுமாறும் கோரினார். இது எங்களுடைய பிரச்சினை அல்ல. இராணுவத்தினருடைய பிரச்சினை. நாங்கள் உங்களுடைய உடல் நலத்தை கருத்திற் கொண்டே இங்கு வந்தோம் என்றும் கூறினார்.

ஆனால் மூதாட்டி, 2010ஆம் ஆண்டில் இருந்து கேட்டுக்கேட்டு தோற்றுப் போய்விட்டேன். எப்போது காணியை விடுவிப்பீர்கள் என்று அறியத்தர வேண்டும். இல்லை என்றால் நான் தற்கொலை செய்வேன் எனவும் கூறிப்போராட்டத்தைத் தொடர்ந்தார். பின்னர் பிற்பகல் ஒரு மணியளவில் மீண்டும் குறித்த இடத்திற்கு வருகை[illegible]யின் கடவுச்சீட்டை வாங்கிப் பார்த்துவிட்டு கனேடிய பிரஜையான மூதாட்டி சுற்றுலா வீஸாவில் இலங்கைக்கு வருகை தந்து போராட்டம் நடத்துவது சட்டப்படி தவறு, ஆகவே கைது செய்யப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என மூதாட்டியிடம் கூறினர்.

மூதாட்டியும் கைது செய்யுங்கள். நீதிமன்றம் கொண்டு செல்லுங்கள். அங்கே நடந்தவற்றை கூறுகின்றேன் என்று கூறிப் போராட்டத்தைத் தொடர்ந்தார். அதன் பின்னர் பொலிஸார் மூதாட்டிக்கு ஆலோசனைகள் கூறி 573 படைப்பிரிவு இராணுவ அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றனர். அங்கு இருந்த இராணுவத் தளபதி மேலிடத்தில் இருந்து உத்தரவு வந்ததன் பின்னரே காணி விடுவிக்கப்படும் என்றும் தற்போது எதுவுமே செய்ய முடியாது என்றும் கூறியதை அடுத்து மூதாட்டி எந்த விதமான பயனும் இல்லாமல் போராட்டத்தை கைவிட்டு திரும்பிச் சென்றார். (ற–21)

## 18 லட்சம் பெறுமதியான மோதிரத்தை சபைக்குள் கைநழுவ விட்டார் எம்.பி

கொழும்பு, ஏப் 25

நாடாளுமன்றத்தில் நள்ளிரவுப் போராட்டத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினரொருவரின் 18 இலட்சம் ரூபா பெறுமதியான மோதிரம் காணாமற் போயுள்ளதாகக் கூறப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுக்கு ஆதரவாக கடந்த 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் போராட்டமொன்றை நடத்தி அங்கு இரவைக் கழித்த நாடாளுமன்ற உறுப்பினொருவருக்குச் சொந்தமான பெறுமதிமிக்க மோதிரமொன்றே இவ்வாறு காணாமற் போயுள்ளது. பின்னர் அது நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியை நிர்வகிக்கும் பிரிவின் ஊழியர் ஒருவரால் அதிகாலையில் கண்டெடுக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடைமாற்றும் அறை சுத்தப்படுத்தப்பட்டபோதே அது கண்டெடுக்கப்பட்டிருந்து. பயன்படுத்திய துவாய் ஒன்றில் சிக்குண்டிருந்தபோதே எதிர்பாராத விதமாக ஊழியரொருவரால் அது கண்டெடுக்கப்பட்டதோடு அதன் சொந்தக் காரரையும் தேடிக்கண்டறிய முடிந்தது.

அந்த மோதிரத்தை அதன் உரிமையாளரான நாடாளுமன்ற உறுப்பினரிடம் ஒப்படைத்த ஊழியரின் நேர்மையான குணம் பெரிதும் பாராட்டப்பட்டது. அவருக்கு நன்றி கூறி அன்பளிப்பொன்றை வழங்குவதற்கு அந்த நாடாளுமன்ற உறுப்பினர் முற்பட்டார். ஆனாலும் அதை ஏற்றுக் கொள்வதற்கு அந்த ஊழியர் மறுப்புத் தெரிவித்தார்.

ஆனாலும் சம்பவத்தைத் தெரிந்து கொண்ட அங்கிருந்த பலரதும் வேண்டுகோள்களுக்கு அமைய ஊழியர் அந்த நன்றிப் பரிசைப் பெற்றுக்கொண்டார். (த-22)

# தேர்தல் திருத்தம் சிறுபான்மைக்கு பெரும் பாதிப்பு

### தேர்தல் ஆணையாளரிடம் கட்சிகள் முறையீடு

கொழும்பு, ஏப் 25

சுதந்திரக் கட்சி முன் வைத்துள்ள தேர்தல் திருத்த யோசனையானது சிறுபான்மை இன மற்றும் சிறு கட்சிகளின் பிரதிநிதித்துவத்தைப் பாதிப்பதாகவுள்ளது. அதனை நாம் நிராகரிக்கின்றோம் – என்று ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்கூட்டாகதேர்தல்கள்ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவிடம் எடுத்துரைத்துள்ளன.

அத்துடன் தற்போதுள்ள தேர்தல் முறைமையில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்படுவதாயினும் சரி புதிய தேர்தல்முறைமையை உருவாக்குவதாயினும் சரி அனைத்துக் கட்சிகளினுடைய பொது இணக்கப்பாட்டிலேயே மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் அக்கட்சிகள் தேர்தல்கள் ஆணையாளரிடம் வலியுறுத்தியுள்ளன.

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய உட்பட தேர்தல்கள் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளுக் கும் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப் பொன்று திங்கட்கிழமை இராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் திணைக்களத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அமைச்சர்களான கரு ஜயசூரிய, லஷ்மன் கிரியெல்ல, விஜய தாஸ ராஜபக்ஷ, பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித்பி.பெரேரா, அக்கட்சி யின் சட்டச் செயலாளர் தயாபெல்பொல ஆகியோரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக அதன் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், இராஜாங்க அமைச்சர் எம்.ரி. ஹசனலி, பிரதி பொதுச் செயலாளர் நிஷாம் காரியப்பர், நாடாளுமன்ற உறுப்பினர் முத்தலிப் பவா பாரூக் ஆகியோரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனும்பங்கேற்றிருந்தனர்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக அமைச்சர்ரவுப்ஹக்கீம்தெரிவித்திருப்பதாவது:– தேர்தல்கள் ஆணையாளரை சிறுபான்மைக் கட்சிகளும் ஐக்கிய தேசியக் கட்சியும் சந்தித்திருந்தன. இதன்போது தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

குறிப்பாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினால் முன்வைக்கப்பட்டுள்ள தேர்தல் திருத்த யோசனையானது சிறுபான்மை இன மற்றும் சிறு கட்சிகளின் பிரதிநிதித்துவங்களை பாதிப்பதாகவே உள்ளது. ஆகவே, அதனை ஏற்றுக்கொள்வதென்பது யதார்த்தமான விடயமொன்றல்ல. அதனை நாம் நிராகரிக்கின்றோம்.

அதேநேரம், தேர்தல் சீர்திருத்தம் தொடர்பாக கவனம் செலுத்தப்படும் போது கலப்புத் தேர்தல் முறைமை தொடர் பாக அதிகம் பேசப்படுகின்றது. விகிதா சார மற்றும் தொகுதிவாரி ஆகிய முறைமைகளை உள்ளடக்கிய கலப்பு முறைத் தேர்தல் முறைமையொன்று கொண்டுவரப்படும் பட்சத்தில் இரண்டு முறைமையிலும் ஐம்பதுக்கு ஐம்பதாக இடம்பெற வேண்டும். அதன் மூலமே சிறுபான்மை மற்றும் சிறு அரசியல் கட்சிகளின் பிரதி நிதித்துவம் பாதிக்காதவாறு அமையும்.

அதேபோன்று தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தும் அவசர யோசனைகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமுடியாது. மேலும் அவசரமாக எல்லை நிர்ணயக் குழுவொன்றை அமைத்து சரியான ஆய்வுகளுக்குப் பின்னர் அதன் அறிக்கை யைப் பெற்று தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தி தேர்தலொன்றை நடத்துவதற்கு குறிப்பிடத்தக்களவுகால அவகாசம் தேவையாகவுள்ளது.

அவசரமான தேர்தலொன்றுக்குச் செல்வதானால் தற்போதுள்ள விகிதாசார முறைமையில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அம் முறைமையின் கீழ் தேர்தலை நடத்த முடியும்.

அதேநேரம், தேர்தல் முறைமையில் சீர்திருத்தத்தை மேற்கொள்வதென்றாலோ அல்லது புதிய தேர்தல் முறைமையை ஏற்படுத்துவதென்றாலோ கொள்கையளவில் அனைத்துக் கட்சிகளினதும் பொது இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படவேண்டும். அதன் பின்னரே அம் முறைமையானது அரசியல் அமைப்பில் உள்வாங்கப்படவேண்டும் என்பதையே நாம் எடுத்துக் கூறினோம் – என்றார்.

மேற்படி சந்திப்பு தொடர்பில் பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பி. பெரேரா கருத்து வெளியிடுகையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன் வைத்துள்ள தேர்தல் திருத்த யோசனையை கவனத்தில் கொண்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக நாம் தேர்தல்கள் ஆணையாளரின் துணையுடன் மீளாய்வு செய்தோம். குறிப்பாக இந்தத் திருத்த யோசனை யானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற சிறுபான்மை இனங்களின் கட்சிகளையும், ஜே.வி.பி. போன்ற சிறு அரசியல் கட்சிகளையும் பாதிப்பதாக உள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தவரையில் எந்தவொரு கட்சியையும் பாதிக்கும் வகையில் தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்துவ தற்கு இடமளிக்கமுடியாது. அது ஜனநாயகத்தைமீறும்செயற்பாடாகும். ஆகவே, அனைத்துக் கட்சிகளாலும் ஏற்றுக்கொள்ளும் திருத்தமொன்றையோ அல்லது புதிய முறைமையொன்றையோ நாம் மேற்கொள்வோம்.

அதேநேரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்துள்ள தேர்தல் யோசனையையோ அல்லது வேறுபட்ட தேர்தல் யோசனையையோ மேற்கொள்வதற்கு குறிப்பட்டளவு கால அவகாசம் தேவையாகவுள்ளது. வெறு மனே இன்று தீர்மானம் எடுத்து நாளை திருத்தமொன்றை மேற்கொள்ளமுடியாது. ஆகவே அனைத்துவிடயங்களையும்ஆராய்ந்து உரிய வகையில் தேர்தல் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை நாம் ஆணையாளரிடத்தில் குறிப்பிட்டோம் – என்றார்.

இந்நிலையில் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய குறித்தவிடயங்கள் தொடர்பாக உரிய கவனம்செலுத்துவதாகவும் அவை தொடர்பாக அரசுடன் பேச்சு நடத்துவதென குறிப்பிட்டதுடன் அவர் எதிர்கொள்ளும் நிர்வாகநடைமுறைச் சிக்கல்கள் தொடர்பாகவும் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## இ.போ.சவால் இடையூறுகள்

### தனியார் பஸ் உரிமையாளர் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, ஏப் 25

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள் தங்களது சேவைக்கு இடையூறு ஏற்படுத்துவதாகக் கூறி, மட்டக்களப்பு, பட்டிப்பளை பிரதேச செயலகத்துக்குட்பட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபட்டதுடன், ஆர்ப்பாட்டத்தையும் மேற்கொண்டனர்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை பட்டிப்பளை பொது விளையாட்டு மைதானத்தில் தங்களது பஸ் வண்டிகளை நிறுத்திவைத்து, பணிப்புறக்கணிப்பையும் ஆர்ப்பாட்டத்தையும் மேற்கொண்டனர். கொக்கட்டிச்சோலையிலிருந்து மட்டக்களப்புக்கு சேவையில் ஈடுபடும் சுமார் 25க்கும் மேற்பட்ட பஸ் உரிமையாளர்கள், ஊழியர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோர் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய சுலோகங்களையும் கைகளில் ஏந்தியிருந்தனர். கொக்கட்டிச்சோலைவரை மட்டுப்படுத்தப்பட்டுள்ள தங்களது சேவையை அம்பிளாந்துறைவரை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கையை உரிய தரப்பினர் மேற்கொள்ளவேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

மிக முக்கியமாக இப்பகுதியில் போக்குவரத்தில் ஈடுபடும் காத்தான்குடி இலங்கைப் போக்குவரத்து சபையின் பஸ்கள், நேர அட்டவணையின்றித் தங்கள் விருப்பத்திற்கேற்றாற்போல் சேவையில் ஈடுபடுவதன்காரணமாகதம்மால்சேவையை முறையாக நடத்தமுடியாத நிலையேற்பட்டுவருவதாகவும் இங்கு கவலை தெரிவித்தனர்.

மண்முனைப் பாலம் அமைப்பதற்கு முன்னர் மண்முனையிலிருந்து மட்டக்களப்புவரையில் தனியார் பஸ்கள் மட்டுமே பொதுமக்களுக்கு சேவை வழங்கிவந்தன. எப்போதாவது ஒரு தரமே இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்கள் சேவையை வழங்கும். ஆனால், பாலம் அமைக்கப்பட்டதன் பின்னர் தொடர்ச்சியான சேவையை வழங்கி எமக்கு அநீதியை இழைத்துவருகின்றனர். ஒரு நேர அட்டவணையை இரு தரப்பினரும் இணைந்து செயற்படுத்தவேண்டும். அது தொடர்பில் நாங்கள் கோரிக்கை விடுத்தும் அது இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் இங்கு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். (த)

## கைதுசெய்யப்படும் அரசியல் தலைவர்களை வைத்தியசாலையில் அனுமதிப்பது அநீதி

### முதலீட்டு அபிவிருத்தி பிரதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 25

அரசியல்வாதிகள் மற்றும் தலைவர்கள் சிறையில் அடைக்கப்படும்போது அவர்கள் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றமை அநீதியானது என்று முதலீட்டு அபிவிருத்தி பிரதி அமைச்சர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தில் (திவிநெகும) இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பில், முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் கடுவெல நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு வெலிக்கடைச் சிறையில் நேற்று முன்தினம் அடைக்கப்பட்டனர்.

நேற்றுக்காலை, முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் – முன்னாள் ஜனாதிபதியின் சகோதரருமான பஸில் ராஜபக்ஷ சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையின் கட்டணம் செலுத்திச் சிகிச்சை பெறும் பிரிவுக்குத் தன்னை மாற்றுமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே, கருத்துத் தெரிவித்த பிரதி அமைச்சர், அரசியல்வாதிகள் மற்றும் தலைவர்கள் சிறையில் அடைக்கப்படும்போது அவர்கள் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகின்றமை அநீதியானது என்று குறிப்பிட்டுள்ளார். (த-5)

## நுவரெலியாவில் மழை; மக்கள் இடம்பெயர்வு

கொழும்பு, ஏப் 25

நுவரெலியா பிரதேச சபைக்குட்பட்ட டயகம வேவர்ள்ளி தோட்டத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் பெய்த கடும்மழை காரணமாக குடியிருப்புப் பகுதியில் உள்ள ஆற்றுநீர் பெருகெடுத்து வெள்ளம் குடியிருப்புப் பகுதிகளில் புகுந்ததால் 28 குடும்பங்களைச் சேர்ந்த 126 பேர் தோட்டத்தில் உள்ள முத்துமாரியம்மன் ஆலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நிவாரண் உதவிகளை தோட்ட நிர்வாகமும் பிரதேச செயலகமும் வழங்கி வருகின்றது. அத்தோடு இப்பகுதியில் மழை காலங்களில் ஆற்றுநீர் பெருக்கெடுப்பதால் பல இடர்களைச் சந்தித்து வருவதாக இந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

பெய்த மழை காரணமாகப் பெறுமதி மிக்க சொத்துக்கள் சேதமடைந்துள்ளன.

இதேவேளை குடியிருப்புப் பகுதியில் உள்ள வீடுகளில் கூரைத் தகடுகள் சேதமடைந்து மழைநீர் வீட்டினுள் வடிவதால் இவர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின் றனர்.

இப்பகுதியில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களில் வீடுகளை அமைத்துத் தருமாறு மலையக அரசியல்வாதிகளிடம் கோரிக்கை விடுத்தபோதிலும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவர்கள் விசனம் தெரிவித்தனர். (த)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** மேலதிகாரிகளால் உத்தியோகத்தர்களுக்கு நன்மை உண்டாகும். வாழ்க்கை துணை மூலம் ஆதாயம் கிடைக்கப் பெறுவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் மூலம் தக்க தருணத்தில் உதவிகள் கிடைக்கும்.

**இடபம்:** மறைமுக எதிர்ப்புகள் விலகும். எதிரிகளும் நண்பராவார்கள். உங்களுக்கு பின்னால் உங்களைப் பற்றி புறம் பேசியவர்கள் உங்களிடம் சரண் அடைவார்கள். எதிர்பார்த்த காரிய வெற்றி உண்டாகும். கடன் பிரச்சினை நீங்கும்.

**மிதுனம்:** முன்கோபத்தைத் தவிர்ப்பது முன்னேற்றத்துக்கு உதவும். மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். எதிர்ப்புகள் நீங்கும். உத்தியோகத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

**கடகம்:** உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வெளியூர் மாற்றங்கள் உண்டாகலாம். சக ஊழியர்களிடம் பேசும்போது கோபப்படாமல் இருப்பது நன்மை தரும்.

**சிங்கம்:** உறவினர்களிடம் பேசும்போது நிதானமாகப் பேசுவது நல்லது. மற்றவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். எதிர்ப்புகள் நீங்கி எதிலும் உற்சாகம் உண்டாகும்.

**கன்னி:** நீங்கள் எல்லோராலேயும் நேசிக்க கூடியவராகவும் இருப்பீர்கள். நண்பர்கள் பலவிதங்களிலும் ஆதரவாக இருப்பார்கள். தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த இடையூறுகள் குறையும்.

**துலாம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் திருப்தியாக உணர்வார்கள். பணவரத்தும் இருக்கும் சக ஊழியர்களின் உதவியும் கிடைக்கும். அவர்களுக்குத் தேவையானவற்றை வாங்கிக் கொடுத்து மகிழ்வீர்கள்.

**விருச்சிகம்:** தடைப்பட்ட காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். மனதெளிவு உண்டாகும். சக ஊழியர்கள் ஆதரவாக இருப்பார்கள். எந்த ஒரு காரியத்தையும் துணிவுடன் செய்து அதிக நன்மை அடைவீர்கள்.

**தனுசு:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் கோபப்படாமல் மேல் அதிகாரிகள் சொன்ன வேலையைச் செய்து முடிப்பது நல்லது. சக ஊழியர்கள் பேச்சைக் கேட்டு நடப்பதை தவிர்ப்பது நன்மை தருவதாக இருக்கும்.

**மகரம்:** வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. உறவினர்களுடன் பேசும்போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. மனதில் இருந்த பயம் நீங்கி துணிவு உண்டாகும். வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** அடுத்தவர்களுக்கு ஆதரவாகச் செயற்படும்போது கவனம் தேவை. தடைப்பட்ட காரியங்களில் இருந்த தடைநீங்கும். அனைவரையும் அனுசரித்துச் செல்வீர்கள். மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

**மீனம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் செய்தொழிலில் முன்னேற்றம் காண்பார்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். விரிவாக்கம் செய்வது தொடர்பான ஆலோசனைகளில் ஈடுபடுவீர்கள்.



## வெள்ளி விழா


விண்வெளி குறித்து அரிய தகவல்களை அனுப்பி வரும் நாசாவின் 'ஹப்பிள் தொலைநோக்கி' நேற்று வெள்ளிவிழாவைக் கொண்டாடியது.
கடந்த 1990 ஆம் ஆண்டு விண்வெளியில் ஏவப்பட்டது நாசாவின் ஹப்பில் தொலைநோக்கி.
பூமிக்கு மேலே 350 கிலோ மீற்றர் உயரத்தில் பறந்த டி தொடர்ந்து 25 வருடங்களாக விண்வெளி பற்றிய பல அரிய தகவல்களை வழங்கி வருகிறது.

# 4 கோடி

## ஆண்களுக்கு திருமணத்துக்கு பெண் இல்லை

தலைப்பைப் பார்த்தவுடன் ஆண்கள் பதறியடிக்க வேண்டாம். இந்தியாவில்தான் இவ்வாறான நிலைமை இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தியாவில் 4.12 கோடி ஆண்கள் திருமணம் செய்யப் பெண் இன்றித் தனிமையில் வாழ்கின்றனர். இந்தியாவில் ஆண்களை விட மிக குறைந்த அளவே பெண்கள் உள்ளனர்.
இந்தியாவில் உள்ள 6.5 கோடி திருமணமாகாத ஆண்களுக்கு 2.38 கோடி மணப் பெண்களே உள்ளனர். அதனால் 5 இல் ஒரு ஆண் வேறு வழியின்றி திருமணம் செய்து கொள்ளாமல் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
1970 ஆம் ஆண்டுகள், 80 ஆண்டுகள் மற்றும் 90 ஆம் ஆண்டுகளில் கோடிக் கணக்கான பெண் குழந்தைகள் கருவிலேயே அழிக்கப்பட்டுள்ளனர். இதனால் தான் ஆண், பெண் விகிதம் சமமாக இல்லை என்று கூறப்படுகிறது.

ஐ.பி.எல். பாதி சீரியல் மீதி கலந்து இங்கே நடக்கிறதே. சீரியல் கொன்று சீரியல் கொன்று ஐ.பி.எல். மட்டும் பார்க்கப் பார்க்கின்றேன்... ஆனால்....



அம்மா வந்து செருப்பால் அடிக்க சீரியல் மட்டும் ஓடுகிறதே. நந்தகுமாரா நந்தகுமாரா சீரியல் மட்டும் கொல்வாயா ? சீரியல் கொன்று ரிமோல்ட் வென்று, ஐ.பி.எல். நிம்மதியாய் பார்ப்பாயா ?



## நெட்டையும் குட்டையும்

உலகிலேயே மூன்றாவது உயரமான நபராக விளங்கும் 7 அடி 8 அங்குல உயரமுடைய இளைஞரும் 5 அடி மட்டுமே உயரமுடைய குள்ளமான பெண்ணும் ஒருவரிடம் ஒருவர் மனதைப் பறிகொடுத்து திருமண்ம் செய்த சம்பவம் பிரேசிலில் இடம்பெற்றுள்ளது.
ஜோலிஸன் பெர்னாண்டெஸ் டா சில்வா (வயது–28) என்ற நபரும் ஈவம் மெடியரோஸ் (வயது–21) என்ற பெண்ணும் பேஸ்புக் மூலம் ஒருவரையொருவர் காதலித்துள்ளனர்.
ஜோலிஸனை விடவும் சுமார் 3 அடி உயரம் குறைவாகவுள்ள ஈவம், அவரது இடுப்பளவு உயரத்தை மட்டுமே கொண்டுள்ளார்.
இது தொடர்பில் ஜோலிஸன் விபரிக்கையில், தனது அளவுக்கதிகமான உயரம் காரணமாக தனது வாழ்வில் அரைப் பகுதி மற்றவர்களின் கேலிப் பேச்சுகளுக்கு ஆளாகி துன்பத்தில் வாழ நேர்ந்ததாகவும் ஈவமை முதன்முதலாக சந்தித்த போது முதல் பார்வையிலேயே காதல் கொண்டதாகவும் தெரிவித்தார்.
நான் முதல் பார்வையிலேயே அவள் பால் கவரப் பட்டேன். அவளுடனேயே அனைத்து நேரத்தையும் கழிக்க விரும்பினேன். அவரது உயரம் எனக்கு ஒரு பொருட்டாக தோன்றவில்லை, என்று அவர் கூறினார்.

## கொஞ்சம் சிரிங்க பாஸ்....



'அவதார்' படத்தை 3டியில பார்த்தா தான் நல்லாருக்கும் என்று சொன்னாங்க.
படத்துக்கு போனா தியேட்டரிலேயே 3டி கண்ணாடி கொடுத்தாங்க. இப்ப 'ஓ காதல் கண்மணி' படத்தை லவ்வரோட பார்த்தா தான் நல்லாருக்கும் என்று சொல்றாங்க. அப்ப தியேட்டரிலேயே ஒரு லவ்வர் தரனும் தானே? அதானே முறை? என்னது நான் கேக்கிறது சரிதானே ?

## இவர் திருந்த மாட்டார்

தோனி, அழகுராஜா, வெற்றி செல்வன் என்று தமிழ் படங்களில் இழுத்துப் போர்த்திக் கொண்டு அமைதியான – குடும்பப்பாங்கான நடிகையாக நடித்தவர் ராதிகா ஆப்தே.
அண்மையில் இவர் நடித்த ஹண்டர் ஹிந்தி படம் திரைக்கு வந்தது. இதில் படுகவர்ச்சியாக நடித்தார். இந்தப் படம் பற்றிய முன்னோட்டதுக்காக இவர் பேசும் போது, திருமணத்துக்கு முன் செக்ஸ் வைத்துக் கொள்வது தவறில்லை என்று சொல்லி அதிர்ச்சியை ஏற்படுத்தினார். இது பலத்த சர்ச்சையை உருவாக்கியிருந்தது.
அந்தச் சர்சை முடிந்துள்ள நிலையில் மீண்டும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளார். அண்மையில் அவர் வழங்கிய பேட்டியில், பசி எடுக்கும் போது உணவு தேவைப்படுகிறது. அதுபோல் உணர்ச்சிகள் பெருகும் போது செக்ஸ் தேவைப்படுகிறது. அதில் தவறு இல்லை, என்று மீண்டும் புதிய சர்ச்சையைத்தோற்று வித்திருக்கின்றார்.



# சாய்ந்தமருதுக்கு தனி உள்ளூராட்சிச் சபை

## உறுதியளித்தார் அமைச்சர் கரு ஜயசூரிய



கொழும்பு, ஏப்.25
சாய்ந்தமருதுக்கு தனியான உள்ளூராட்சி சபையை மிக விரைவில் பெற்றுக் கொடுப்பதாக புத்தசாசன, பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கரு ஜயசூரிய உறுதியளித்துள்ளார்.

அமைச்சர் கரு ஜயசூரியவுக்கும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலானகுழுவினருக்கும்இடையிலான சந்திப்பொன்று புதன்கிழமை நடைபெற்றது. இதன்போதே மேற்படி உறுதியளித்துள்ளார்அமைச்சர்கருஜயசூரிய. இந்தச்சந்திப்பில் 9 சதுரக்கிலோ மீற்றர் பரப்பளவையும், 17 கிராம அலுவலர்கள் பிரிவுகளையும் உள்ளடக்கிய சாய்ந்த மருது பிரதேசத்திற்கு தனியான உள்ளூராட்சி சபை ஒன்றை ஏற்படுத்துவதற்கான நியாயங்களை அமைச்சர் ஹக்கீம், அமைச்சர் கரு ஜயசூரியவிடம் விளக்கிக் கூறினார்.

1987ஆம் ஆண்டுக்கு முன்னர் 18ஆம் நூற்றாண்டு காலப் பகுதியிலிருந்தே சாய்ந்தமருது தனித்து இயங்கியதாகவும் அதற்கான வர்த்தமானி பிரகடனம் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும் பின்னர் நிலைமை மாற்றமடைந்து கல்முனையின் கீழ் கொண்டு வரப்பட்டதாகவும், தற்பொழுது சாய்ந்தமருது, கல்முனை மாநகர சபையின் கீழ் உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சரிடம் எடுத்து விளக்கப்பட்டது.

அமைச்சர் ஹக்கீம், இராஜாங்க அமைச்சர் ஹஸனலி, நாடாளு மன்ற உறுப்பினர்களான எச்.எம். எம்.ஹரீஸ், பைசல் காசிம், சாய்ந்த மருது – மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் பரிபாலன குழுத் தலைவர் வை.எம். ஹனீபா ஆகியோர் உட்பட முக்கியஸ்தர்கள் அமைச்சர் கரு ஜய சூரியவிடம் சாய்ந்த மருதுக்கான உள்ளூராட்சி அமைப்பு பற்றி தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

தம்மிடம் முன்வைக்கப்பட்ட சாய்ந்த மருதுபிரதேசசபைக்கான வேண்டுகோளைக் கேட்ட அமைச்சர் கரு ஜயசூரிய, தாம் முன்னர் அமைச்சராக இருந்த 2007, 2008ஆம் காலப் பகுதியிலும் இதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்ததாகவும், உரிய முன்னேற்பாடுகளை துரிதமாக மேற்கொண்ட பின்னர் மிக விரைவில் சாய்ந்தமருது தனியான உள்ளூராட்சி சபையாக பிரகடனப்படுத்தப்படும் என்றும் உறுதியளித்தார். (வ–10)

# இயக்கச்சி சந்தைப் பகுதியை துப்புரவு செய்யக் கோரிக்கை

பளை.ஏப்.25
பளைப் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட இயக்கச்சி சந்தை மற்றும் வர்த்தக நிலையப் பகுதி ஆகியவற்றை தினமும் துப்புரவு செய்ய பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

இயக்கச்சி சந்திப் பகுதி பெரிய மரங்களை கொண்டுள்ளதால் வாகனங்களில் வருவோரில் பெருமளவிலானோர் அங்குள்ள மரங்களின் நிழலில் தங்கிச் செல்கின்றனர். அத்துடன் அந்தப் பகுதியில் உணவு சமைத்துவிட்டு கழிவுகளைக் கைவிட்டுச் செல்கின்றனர்.

இயக்கச்சிச் சந்தியில் பாடசாலை, பொதுச் சந்தை, வர்த்தக நிலையங்கள் போன்றவை காணப்படுவதால் அந்தப்பகுதியை சுத்தமாக வைத்திருக்க வேண்டிய கடப்பாடு பிரதேச சபைக்கு உண்டு. தினமும் மரங்களில் இருந்து இலைகள் அந்தப் பகுதியில் குவிந்த நிலையில் காணப்படுகின்றன.

பிரதேச சபையினர் தமது தொழிலாளர் ஒருவரை நிரந்தரமாக நியமித்து தினமும் அந்தப் பகுதியை துப்புரவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளனர். (வ–9)


காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம் நடத்தும்
கலைவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

இடம் : மனோன்மணி கலையரங்கு, கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.
காலம் : 26.04.2015 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணி

தலைவர்: ந.சோதிநாதன் (தலைவர், கிழவன்காடு கலாமன்றம்-காரைநகர்)
பிரதம விருந்தினர் நாகலிங்கம் வேதநாயகன்
(அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்)
சிறப்பு விருந்தினர்கள் திருமதி தேவநந்தினி பாபு
(பிரதேச செயலர், பிரதேச செயலகம், காரைநகர்)
இராகசுரபி, கலா பரமேஸ்வரி கணேசன்
(சிரேஷ்ட விரிவுரையாளர், இசைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
கௌரவ விருந்தினர்கள்
கல்விக் காருண்யன் திரு.திருமதி. E.S.P நாகரத்தினம் தம்பதியினர்
கலையாடக்கோன். சண்முகம் சிவஞானம்
தொழிலதிபர் கனகசபை அருள்நேசன்

கலாமன்ற அறநெறித்துறையினர் வழங்கும் பேச்சு, இசைக்கச்சேரி, மிருதங்க இசை, வயலின் இசை, அரங்க ஆற்றுகை, நாட்டியாஞ்சலி, பரிசில் வழங்கல்.

சிறப்பு நிகழ்ச்சி
கலாமன்ற நாடகத்துறையினரும், யாழ் மாவட்ட பிரபல நாடக கலைஞர்களும் இணைந்து பெருமையுடன் வழங்கும் "ஒண்டுக்கும் யோசியாதேயுங்கோ" -சமூக நாடகம்

* நன்றியுரை: ச.இராசநாயகம் (உபதலைவர், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)

குறிப்பு: நிகழ்விற்கான போக்குவரத்து சேவை யாழ். கஸ்தூரியார் வீதி, இல.11. உதயன் பத்திரிகை நிறுவன அருகில் உள்ள ஒழுங்கையில் இயங்கும் கலாமன்ற யாழ். கிளையிலிருந்து பி.ப 2.00 மணிக்கு ஆரம்பமாகும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்.




ANGEL INERNATIONAL SCHOOL :
A School of Excellence

வடமாகாணத்தின் எதிர்கால ஆங்கிலம் பேசும் சமுதாயத்திற்கான அடித்தளம்.

3+ முதல் A/L வரை அனைத்து வகுப்புக்களும் ஆங்கில மொழிமூலம் கற்பிக்கப்படுகின்றன.
தமிழ், சிங்களம், ஜேர்மன் ஆகிய பாடங்கள் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படுகின்றன.
Chemistry, Biology, Physics, Computing ஆகிய பாடங்களிற்கு ஆய்வுகூட வசதிகளும் Audiovisual கற்பித்தல் முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

* உயர்தர கல்வியை நிறைவு செய்தவர்களுக்கான கற்கைநெறிகள்:
AAT : உயர்தரத்தில் வணிகத்துறையில் பயின்றவர்களுக்கான கற்கை நெறி.
Avaition : விமானத்துறையில் பணியாற்ற விரும்புபவர்களிற்கான கற்கை நெறி.
English Diploma : தொழில் வாய்ப்புக்களிற்கான விசேஷ ஆங்கில கற்கை நெறி.
Teacher Training : ஆங்கில மொழியில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி.

Autism
ANGEL INTERNATIONAL SCHOOL offers essential and evidence-based therapy to help improve the quality of life for individuals with autism spectrum disorder (ASD). We are offering private Speech Therapy during the course of the day.





Special Care Education for children with Autism has already began at ANGEL INTERNATIONAL SCHOOL with highly trained professionals.
Admissions are open.
தொடர்புகளிற்கு: 077 30 68 997, 021 225 5628



P.P.T எக்ஸ்பிறஸ்






இதுவரைகாலமும் யாழில் இருந்து கொழும்புக்கு அதிநவீன சொகுசு பஸ் (பயணிகள் போக்குவரத்து) சேவையை நடத்திய P.P.T எக்ஸ்பிறஸ் இன்று முதல் தனது சேவையை விரிவுபடுத்தி மானிப்பாய் - சுழிபுரம் - பண்டத்தரிப்பு ஊடாக தெல்லிப்பழை - சுன்னாகம் பாதை ஊடாக யாழ்ப்பாணம் வந்து கொழும்பு பயணத்தை தொடர்கின்றது என்பதை பயணிகளுக்கு அறியத்தருகின்றோம்.
மேலும் எமது பருத்தித்துறை சேவை வழமைபோல் நடைபெறுகின்றது.

தொடர்புகளுக்கு:-
யாழ்ப்பாணம் 0775731318
கொழும்பு 0775755175

Colombo - 06
296,A1, Gall Road, Wellawatte, Colombo - 06.
(+94) 112364999

Colombo - 13
16, Sangamitha Mw, Colombo-13,
(+94) 114375790

Jaffna
183, K.K.S. Road, Jaffna.
(+94) 214923240

Point Pedro
Arasadi Lane, Point Pedro.
(+94)214923724

அமரர் கந்தையா ஆறுமுகம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
அவர்கள் சிவப்பேறு அடைந்த
12ஆம் ஆண்டு சிரார்த்த தினம்

தவப்பேறு 21.12.1918
சிவப்பேறு 08.05.2003



திதி: 25.04.2015

"இகபர நலம் பெற வழிகாட்டி
இலுப்பையடிப் பிள்ளையார் பதம் அடைந்த
இனிய எம் தந்தையே - உம்மை
இமைப்பொழுதும் நாம் மறவோம்"

திருமதி சரஸ்வதி
ஆறுமுகம்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டன்.

---

45ஆம் நாள் நீங்காத நினைவுகள்



5ஆம் வட்டாரம் வேலணையைப்
பிறப்பிடமாகவும் முழங்காவிலை
வசிப்பிடமாகவும் கொண்ட
திருமதி நவமீனா (வனிதா)
ஞானசேகரம்

தோற்றம்
31.07.1965

மறைவு
12.03.2015

நாற்பத்தைந்து நாள்கள் சென்றிடினும்
மறைந்திடுமா உங்கள் நினைவு
பரிதவிக்குதம்மா எம் நெஞ்சம்
உங்கள் புன்சிரிப்பைக்காண
விழியோரக் கண்ணீருடன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

இளநிலா குடியிருப்பு,
முழங்காவில்.

குடும்பத்தினர்.

---

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
தவமணிதேவி
செல்லத்துரை



தோற்றம்
22.11.1942

மறைவு
25.04.2014

ஆண்டொன்று ஆனதுவோ ஆனாலும் ஆறவில்லை எம்துயரம்
மாறாத நினைவுகளால் மனம்நொந்து மாய்கின்றோம்
அழகிய உங்கள் சிரித்த முகம் என்றும் மறையாது
ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

"ஈஸ்வரி வாசம்'
உரும்பிராய் மேற்கு,
கந்தசாமி கோயிலடி, உரும்பிராய்.

என்றும் நினைவில்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

31ஆம் நாள் நினைவஞ்சலியும்
நன்றிநவிலலும்

அமரர்
வள்ளிப்பிள்ளை
வைத்திலிங்கம்



தோற்றம்
16.07.1929

மறைவு
24.03.2015

அராலியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட எமது குடும்பத்தலைவி அமரர் வள்ளிப்பிள்ளை வைத்திலிங்கம் அவர்கள் அமரத்துவம் அடைந்ததைக் கேள்வியுற்று நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் அனுதாபங்களைப் பகிர்ந்து ஆறுதல் கூறி இறுதிச்சடங்கிலும் கலந்துகொண்டு மற்றும் பல வழிகளிலும் எமக்கு உறுதுணையாக நின்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி நவில்கிறோம். அத்துடன் இன்று (25.04.2015) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஐயன்னா வீதி,
சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.
M.T.S. நகைத்தொழிலகம்.

---

10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி சோதியம்மா
முருகையா
திதி: ஸப்தமி

அன்பிற்கும் பண்பிற்கும்
இலக்கணமாய் வாழ்ந்து
எமை அவனியிலே வாழ்வாங்கு
வாழவைத்த தெய்வமே!
நித்தமும் உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

மலர்வு 17.09.1951
உதிர்வு 14.05.2005

காளிகோயிலடி,
மல்லாகம்.

---

31ஆம் நாள் நினைவஞ்சலியும்
நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

திருமதி அன்னம்மா
அப்புத்துரை



கண்மகிழ 12.08.1932
கண்நெகிழ 26.03.2015

பாரம் தலை சுமந்து
நல்வாழ்வு எமக்களித்து உடல்
தளர்ந்து முகம் மறைத்தீர்கள்
எங்கள் உயிர் நெஞ்சினிலே
உங்கள் நினைவு எமக்குப் பாரந்தான்

எங்கள் குடும்பத் தலைவியின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து உதவிகள், ஒத்தாசைகள் புரிந்து அஞ்சலி ஆறுதல் தெரிவித்து இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (25.04.2015) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"கமலதாரகை"
அல்வாய் தெற்கு, அல்வாய்.
தொ.பே. 021 490 5271

குடும்பத்தினர்.

---

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
06.04.1939



உதிர்வு
28.04.2012

திருமதி சிவரூபராணி (இந்திரா) செந்திவடிவேலு
திதி: ஸப்தமி (25.04.2015)

அன்பின் உறைவிடமாய்
எமை அன்போடு அணைத்து
நாங்கள் எல்லோரும்
நலமோடு வாழ அன்பு
மழைபொழிந்து எமை வாழ வைத்த தெய்வமே!
ஆண்டுகள் மூன்று கடந்தாலும்
உன் நாமம்
எந்நாளும் எம்நெஞ்சங்களை விட்டகலாது
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மாதர் வளவு,
மல்லி ஓடை ஒழுங்கை,
வல்வெட்டி, வல்வெட்டித்துறை.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

---

## துணிச்சற்காரன் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப்.25

யாழ் இலக்கியக்குவியத்தின் ஏற்பாட்டில் நெடுந்தீவு நேதா மோகனின் முதலாவது கவிதைத் தொகுப்பான "துணிச்சற் காரன்" என்னும் கவிதை நூல், நாளை ஞாயிற்றுக் கிழமை வெளியிடப்படவுள்ளது.

திருமறைக்கலாமன்றம் கலைத்தூது கலையகத்தில் பி.ப 3 மணிக்கு ஜீவநதி வெளியீடாக வெளிவரும் இந்த நூல் வெளி யீட்டு விழாவுக்கு'ஜீவநதி' கலை இலக்கிய சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் க. பரணீதரன் தலைமை வகிக்கவுள்ளார்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினர் களாக வடமாகண சபை உறுப் பினர் விந்தன் கனகரத்தினம், புலவர் ஏ.டபிள்யூ அரியநாய கம், ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலய அதிபர் சத்தியவரதன், யாழ். உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. மீரா அருள்நேசன் ஆகியோர் கலந்துகொள் ளவுள்ளனர்.

நிகழ்வில் நூல் வெளியீட்டு ரையை யாழ். இலக்கியக் குவியத் தலைவர் வேலணையூர் தாஸ் நிகழ்த்தவுள்ள துடன் கவிதைத்தொகுப்பின் முதற் பிரதியை நிஷானந்தா ஜுவலரி உரிமையாளர் ஏ.ஆனந்தன் பெற்றுக்கொள் ளவுள்ளார். நூலின் மதிப்பீட்டு ரையை யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ம. இரகுநாதன் வழங்குவார். (வ-10)

## வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி

தென்மராட்சி, ஏப். 25

மட்டுவில் பிரதேச வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி மருந்து எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் ஏற்றப்படும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

நுணாவில் சந்தி தொடக்கம் கனகன் புளியடிச் சந்தி வரையிலான மட்டுவில் பிரதேசத்தில் உள்ள வளர்ப்பு நாய்களுக்குத்தடுப்பூசி மருந்து ஏற்றப் படவுள்ளதாகவும் சுகாதாரத்திணைக்களத்தினால் அறிவிக்கப்படும் பிரதேசத்தில்உள்ளபொது அமைப்புக்களின் நிலையங்களுக்குத் தமது வளர்ப்பு நாய்களைக் கொண்டு வந்து தடுப்பூசி மருந்து ஏற்றிக் கொள்ளுமாறும் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினர் அறிவித் துள்ளனர்.

இதுவரை கைதடி, நாவற்குழி, மீசாலை வடக்கு, மந்துவில், வரணி, கொடிகாமம் போன்ற பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தடுப்பூசி ஏற்றப்பட்ட போது தவறவிட்டவர்கள் மட்டுவில் பகுதியில் இடம் பெறும் தடுப்பூசி மருந்து ஏற்றும் நிலையங் களுக்குக் கொண்டு வந்து தடுப்பூசி ஏற்றிக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஏப்.25

கோப்பாய் வடக்கு முதியோர்சங்கத்தின்மாதாந்த ஒன்றுகூடல்நாளைஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. முற்பகல் 10 மணிக்குகோப்பாய்வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் உரியவர்களைக் கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் ந.கனகலிங்கம் தெரிவித்துள்ளார். (வ-10)

# மன்னார் ஆயரின் பவள விழா மலருக்கு ஆக்கங்கள் கோரல்

மன்னார், ஏப்.25

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை தனது 75 ஆவது அகவையில் காலடி பதித்துள்ள இந்தவேளையில் அவர் தனது சமயப் பணிகளோடு தமிழ் மக்களுக்கு ஆற்றிவரும் மகத்தான பணிகளைக் கௌர விக்கும் வகையில் மன்னார் மக்கள் சார்பாக அவருடைய பவள விழாவை எதிர் வரும் 23 ஆம் திகதி சிறப்பான முறையில் மன்னாரில் கொண் டாடு வதற்குத் தீர்மானிக்கப்பட் டுள்ளது.

பவள விழா ஒழுங்குகளை மேற் கொள்வதற்காக 'மன்னார் ஆயரின் பவள விழா ஒருங்கி ணைப்புக் குழு' என்ற பெயரில் அனைத்து மக் களையும் உள்ளடக்கிய மக்கள் பிரதி நிதிகள் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு இந்த விழாவுக்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

விழாவின் போது பவள விழா மலர் ஒன்றையும் வெளியிடத் தீர் மானிக் கப்பட்டுள்ளது. எனவே இந்த மல ரில் இடம் பெறுவதற்கான தத்தமது செய்தியை வாழ்த்துரை யாகவோ, கட்டுரையாகவோ, அனுபவப் பகிர் வாகவோ, கவிதையாகவோ அனுப்பி வைக்கு மாறு பவள விழா மலர்க் குழுவினர் வேண்டு கோள் விடுத் துள்ளனர்.

தத்தமது ஆக்கத்தை எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் மலர்க்குழுவுக்கு அனுப்பி வைக்கு மாறும், இந்தத் திகதிக்குப் பின்னர் வரும் ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது என்பதையும், கிடைக் கப்பெறும் ஆக்கங்களை பரிசீலித்து மலரில் இடம் பெறச்செய்வதா இல் லையா என்பதை மலர்க் குழுவே தீர் மானிக்கும் என்பதையும் மலர்க் குழு தெளிவாகக் குறிப் பிட்டுள்ளது.

ஆக்கங்களை தபால் மூலமாக அனுப்புவதாயின் அருட்திரு தமிழ் நேசன், மன்னார் ஆயரின் பவள விழா மலர்க்குழுத் தலைவர், கலை யருவி, 116/3, புனித சூசையப்பர் வீதி, பெற்றா, மன்னார்' என்ற முகவரிக்கும், மின்னஞ்சல் மூலம் அனுப்புவ தாயின் nesanmnr gmail.com என்ற முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம். (வ.-56)

# வடலியடைப்பில் அபிவிருத்திக்கு உதவுமாறு அரச அதிபருக்கு கோரிக்கை

வலி.தென்மேற்கு, ஏப்.25

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள வட லியடைப்புக் கிராமத்தின் அபிவி ருத்தியில் அக்கறை கொண் டுள்ள அந்தக்கிராமத்தைப் பிரதி நிதிப்படுத் தும் வலி.தென் மேற்குப் பிரதேச சபை உறுப்பி னரான த.குமணன் மக்கள் நலன் சார்ந்த பல அபி விருத்தி வேலைத்திட்டங்களுக்கு கைகொடுத்து உதவுமாறு யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுத் துள்ளார்.

கிராமத்தின் வளர்ச்சியைக் கருத் தில் கொண்டு பிரதேச சபை உறுப் பினராக தம்மைத் தெரிவு செய்த மக்களுக்கு சபையின் ஆயுட்காலம் முடிவடைவதற் குள் அவர்களைத் திருப்திப் படுத்த வேண்டிய பொறுப்பு தமக்கு இருப்பதாக அரச அதிபருக் குச் சுட்டிக் காட்டி யுள்ள உறுப்பினர் மேற்கொள்ள வேண்டிய 10 வேலைத் திட்டங்கள் குறித்து குறிப் பிட்டுள்ளார்.

வட லியடைப்பு கிராம அபிவிருத் திக்கான செயற் றிட்டங்கள்" என்ற தலைப்பில் அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக் கப்பட்டிருப்பதாவது:

வடலியடைப்பு கிராம அபிவி ருத்தி சார் வேலைத்திட்ட முன் மொழிவு கள் குடி தண்ணீர் (நிரந் தரமானது), வீதி (உள்ளக வீதிகள் புனரமைப்பு), மாதிரி முன்பள்ளி, பாடசாலைக் கான கட்டடவசதி (வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலை), ஆரம்ப சுகா தார நிலையம், விவ சாய அமைப்பை வலுப்படுத்துவ தற்கான உதவித் திட்டங்கள், பெண் கள் தலைமை தாங்கும் குடும் பங்கள் மற்றும் வறிய குடும்பங் களுக்கான வாழ் வாதாரச் செயற் பாடுகள், படித்து தொழில் வாய்ப்பற் றுள்ள இளை ஞர், யுவதிகளுக்கான தொழிற் பயிற்சித் திட்டங்கள், விளை யாட்டுக் கழகத்தின் வளர்ச்சி கருதி விளையாட்டு உபக ரணங் கள், பரிந்துரை செய்யப் பட்டவர் களுக் கான வீடமைப்பு உதவி ஆகிய வேலைத்திட் டங்கள் குறிப் பிடப்பட் டுள் ளன. (வ-115)



அன்னை பூபதியின் 27 ஆம் ஆண்டு நினைவு நாளும் நாட் டுப்பற்றாளர்கள் நினைவு தினமும் ஜேர்மனி, பேர்லின் மற்றும் பொன் நகரிலும் உணர்வு பூர்வமாக நடை பெற்றன. பொதுச்சுடர் நிகழ்வுடன் தேசியக்கொடி ஏற்றப் பட்டு ஈகச்சுடர், மலர்வணக்கத்தைத் தொடர்ந்து அகவணக்கம் செலுத் தப்பட்டது. அத்துடன் பொன் நகரில் தாயகத்தாயின் நினைவுப் பாடல்கள், எழுச்சி நடன நிகழ்வுகளும் நடை பெற் றன. அதனைத் தொடர்ந்து பூபதி அம்மாவின் ஈகம் பற்றியும், தாயக விடுதலையை பற்றிய கவிதை களும் வாசிக்கப்பட்டன. (வ)

# 25 ஆயிரம் கோடி ரூபா செலவில் கழிவுநீர் முகாமைத்துவத் திட்டம்

## ஆரம்பித்து வைத்தார் அமைச்சர் ஹக்கீம்



கொழும்பு, ஏப்.25

இலங்கையில் 25 ஆயிரம் கோடி ரூபா செலவில் கண்டி கழிவு நீர் முகாமைத்துவத் திட் டம் மேற்கொள்ளப்படவுள் ளது. மேற்படி வேலைத் திட் டத்தை நகர அபிவிருத்தி வடி கால் அமைப்பு அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் செவ்வாய்க்கிழமை ஆரம் பித்து வைத்தார்.

அங்கு உரையாற்றிய அமைச் சர்;

திண்மக்கழிவுப் பிரச்சினை யைப் போன்று திரவக் கழிவு களாலும் பெரிய பிரச்சினைகள் ஏற்படுகின்றன. கண்டி போன்ற புனித நகர்ப் பிரதேசங்களில் மழை நீர் தவிர்ந்த வேறு எது வித கழிவுநீரும் சேராத வகை யில் இந்த திட்டம் மேற்கொள் ளப் படுகின்றது. இந்தத்திட்டம் 20 வருடங்களுக்கு முன்பே திட்ட மிடப்பட்டிருந்தாலும் தற் போது தான் நடைமுறைப் படுத்தப்ப டுகின்றது. இதற்குப் பலரது பங்களிப்பும் காரணம்.

குழாய்நீர் இணைப்புப் போன்று நான்கு மடங்கு செலவில் சகல வீட்டுத் திரவங்களும் குழாய் மூலம் சேகரிக்கப்பட்டுப் பின் னர் மத்திய சேகரிப்புக் குழாய் கள் மூலம் பகுதி பகுதியாக ஒன்றாக்கப்பட்டு சுத்திகரிக் கப்பட்டு பின்னர் திண்மக் கழிவு வேறாகவும் சுத்தமான நீர் மகாவலி கங்கைக்கும் சேர்க் கப்படவுள்ளன. வீடுகளில் உள்ள கழிவறைக் கழிவு நீர், சமயலறைக் கழிவு நீர், குளி யலறைக் கழிவு நீர் ஆகிய அனைத்துத் திரவக் கழிவுக ளும் இந்தத்திட்டத்தில் சேகரிக் கப்படும்.

இலங்கையில் எங்கும் இது வரை ஆரம்பிக்கப்படாத புதிய திரவக் கழிவு முகாமைத்துவத் திட்டத்துக்கு செலவாகும் பணத் தில் 18 ஆயிரம் கோடி ரூபாக் களை ஜெய்கா நிறுவனம் வழங் குகின்றது. மிகுதிப் பணம் இலங்கை அரசினுடையது' –என்றார். (வ-10)

# கருத்துரைத் தொடர்

யாழ்ப்பாணம்,ஏப்.25

சமகாலக் கலை, கட்டடக்கலை மற் றும் வடிவமைப் புக்கான இலங்கை ஆவணக் காப்ப கத் தின் கருத்துரைத் தொடர் நல்லூரி லுள்ள ஆவணக் காப்பகத்தில்நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம்நண்பகல் 12 மணிவரை இடம் பெறவுள்ளது.

இ ல ங் கை யி ல் ஆற்றுகைக் கலை ஒரு சுருக்க வர லாறு என்ற தலைப் பில் ஆற்றுகைக் கலைஞர்றோகொன் சன்ரைன் உரை நிகழ்த்துவார் என்று காப்பகத்தின் முகா மையாளர் விமலா வேல்தாசன் அறி வித்துள்ளார்.(வ-4)

# முன்பள்ளி விளையாட்டு விழா

தென்மராட்சி,ஏப்.25

தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தின் சக்தி முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறும்.

நிலையத்தலைவர் சி.சதீஸ் வரன் தலைமை யில் நடை பெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வலிகாமம் கல்விவலய உடற் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராசாவும் சிறப்பு விருந்தினர்களாக தீவக கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் பா.பாஸ் கரன், வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் ஆகியோரும் கலந்து கொள்வர். (வ-9)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

கிறேடன் இன நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: கணேசன்
077 923 4184

**கணிதம்**

6 - 11 & O/L Day Class மாணவர்களுக்கு தனியாகவோ, குழுவாகவோ வீட்டில் வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு: 077 712 2968 (59146) (9.3)

**பங்காளர் தேவை**

ஆங்கில கற்கைநெறித்தொடர் புத்தக வியாபாரத்தில் 3 வருட ஒப்பந்த அடிப்படையில் வியாபாரம் செய் வதற்கு முதலீட்டாளர்களை வரவேற் கின்றேன். 30 % வரை கமிஷன் வழங்கப்படும்.

தொடர்பு: 077 073 9904
(59159)(45.3)

**பெயர் மாற்றம்**

தெல்லிப்பழையைச் சேர்ந்த
பாலசுப்பிரமணியம் பாலகணேசன்
ஆகியநாதன் இன்றிலிருந்து எனது பெயரை
பாலசுப்பிரமணியம் பிரவின் அந்திரே
என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(59157) (45.3) பாலசுப்பிரமணியம் பிரவின் அந்திரே

**அச்சக பணியாளர்கள் வேண்டுகை**

யாழ்.நகரின் பிரபல அச்சக நிறுவனத்துக்கு அச்சுத்துறையில் அனுபவம் வாய்ந்தோர் வேண்டப்படுகின்றனர்.

- இயந்திர இயக்குநர் (Davidson)
- கணினி இயக்குநர்கள்(பெண்கள்) (Corel draw, Photo shop)
- புத்தகம் கட்டுநர்கள். (இருபாலாரும்) (அனுபவம் வாய்ந்த, பழக விரும்புபவர்கள்)
- கட்டிங் மெசின், வைண்டிங் (ஆண்கள்)
- அலுவலக உதவியாளர்கள். (ஆண்கள்)

தொடர்பு: 276/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 616 1125 ,077 347 2792
(15606)(9.3)

**தென்னந்தோட்டம் விற்பனைக்கு**

பளைக்கும் தர்மக்கேணிக்கும் இடையில் உள்ள 25 ஏக்கர் தென்னந் தோட்டம் இரண்டு, மூன்று பகுதி களாகப் பிரித்தும் கொடுக்கப்படும்.

தொடர்பு: 077 729 9031, 072 525 4133
(56735) (4.3.7)

**விற்பனைக்கு**

- Sony (Japan) CD Playar வோக்மன்சைஸ்)
- காப்பெற் (நிலவிரிப்பு) புதிய
- பழைய மொடல் சிங்கர் தையல் மெசின்.

தொடர்பு: 077 824 7496 (59149) (45.3)

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணம் கொழும்பில் இயங்கிக் கொண்டிருக்கும் பலசரக்கு மொத்த வியாபார நிறுவனத்துக்கு விற்பனை முக வர் (சாரதி அனுமதி பத்திரம் உள்ளவர்) விற்பனை உதவியாளர் கொழும்பில் தங்கி நின்று வேலை செய்வதற்கும் ஆள் கள் தேவை. சாரதி அனுமதிப் பத்திரம் (மோட்டார் சைக்கிள் உள்ளவர்கள் தேவை.

குறிப்பு: ஆண்கள் மட்டும், தங்கும் இடம் இலவசம்.

தொடர்பு: 077 573 6003 (59154) (45.3)

**வீடு வாடகைக்கு**

திருநெல்வேலி Junction அருகில் 3 அறைகள் கொண்ட வீடு, வாடகைக்கு. குடும்பத்தினர் அல்லது அலுவலகத்துக்கு விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 284 9658, 077 564 2271
(சி.15433) (45.3)

**மணமகள் தேவை**

1980, R.C, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோக மணமகனுக்கு மணமகள் தேவை. (59163) (45.3)

தொடர்பு: 077 608 7227, 077 513 2255

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1974 ஆம் ஆண்டு, உத்தராடம் 3 ஆம் பாதம், செவ்வாய்க் குற்றமற்ற 71 கிரக பாவமுடைய, 5'4'' உயர முடைய லண்டன் சிற்றிசன் மணமகனுக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க் கிறோம்.

தொடர்பு: 075 518 8150 (59143)
emal - rubantp@yahoo.com (45.3)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பால்பண்ணை வீதியில் 3பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 076 558 9752 (59037) (9.3)

**ஒப்புநோக்குநர்கள் தேவை**

கொழும்பிலிருந்து வெளியாகும் சுடர்ஒளி பத்திரிகையில் இணைந்து பணியாற்றுவதற்கு

- ஒப்புநோக்குநர்கள்,
- பக்க வடிவமைப்பாளர்கள்
- கணினி இயக்குநர்கள்

உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.

கொழும்பில் தங்குமிடவசதி செய்துதரப்படும். உங்கள் முகவரி, தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக முழுமையான சுயவிவரக் கோவையை Sudarolinewspaper@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

(சி.15415)(45.3)



## தந்தை செல்வாவின் 38 ஆவது நினைவு தின நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், ஏப். 25

தந்தை செல்வாவின் 38 ஆவது நினைவு நாள் அஞ்சலியும் நினைவுரையும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ். பொது நுலகத்துக்கு அருகிலுள்ள தந்தை செல்வா சதுக்கத்திலுள்ள தந்தை செல்வா நினைவிடத்தில் இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது.

தந்தை செல்வா அறங்காவலர் குழுத் தலைவர் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்த நிகழ்வில், முதலில் தந்தை செல்வா சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்படும். பின்னர் மலர் அஞ்சலி செலுத்தப்படும். அஞ்சலியுரைகளை மௌலவி எம்.ஐ.மஹ்மூத், அருட்தந்தை சி.எஸ்.ஜெயக்குமார் அடிகள், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் வழங்குவர். சட்டத் தரணி கனக மனோகரன் சிறப்புரையையும் நினைவுப் பேருரையை ச.லலீசனும் வழங்குவர். (வ-4)

## காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின்கலைவிழா

யாழ்ப்பாணம், ஏப்.25

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் கலை விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. காரைநகர் கிழவன்காடு மனோன்மணி கலையரங்கில் பி.ப 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு கிழவன்காடு கலாமன்றத்தின்தலைவர் ந.சோதிநாதன் தலைமை வகிக்கவுள்ளதுடன் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்துகொள்ளவுள்ளார்.

நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு, யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை சிரேஸ்ட விரிவுரையாளர் இராகசுரபி, காரை பரமேஸ்வரி கணேசன் ஆகியோரும் கௌரவவிருந்தினர்களாகதொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் மற்றும் அவர் பாரியார், கிழவன்காடு கலாமன்ற உறுப்பினர் கலைமாடக்கோன் ச.சிவஞானம், தொழிலதிபர் க.அருள்நேசன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் கலாமன்ற நாடகத் துறையினரும் யாழ் மாவட்ட பிரபல நாடகக் கலைஞர்களும் இணைந்து வழங்கும் 'ஒண்டுக்கும் யோசியாதை யுங்கோ' சமூக நாடகம் மேடையேற்றப்படவுள்ளது. நிகழ்வுக்கான போக்குவரத்து சேவை யாழ் கஸ்தூரியார் வீதி இல- 11, உதயன் பத்திரிகை அலுவலகத் துக்கு அருகாமை யில் உள்ள ஒழுங்கையில் உள்ள கலா மன்ற யாழ் கிளை யில் இருந்து ஆரம்பமாகும் எனவும் ஏற்பாட் டாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ-10)

## நூலிழையில் தப்பினர் பயணிகள்

வடமராட்சி, ஏப்.25

கொழும்பில் இருந்து பருத்தித்துறை நோக்கி வந்து கொண்ருந்த இ.போ.ச. பஸ் செவ்வாய்க்கிழமை அதிகாலை 1.30 மணியாளவில் எதிரே வந்த கனரக வாகனத்துடன் மோதியதில் அதன் முன்பகுதி சிறிது தேசமடைந்தது. இதில் பயணம் மேற்கொண்ட பயணிகள் சிறு சிறு காயங்களுடன் நூலி ழையில் தப்பித்துக் கொண் டனர். இந்தச் சம் பவம் தொடர்பாக மதவாச்சி பொலிஸார் விசா ரணை மேற்கொண்டு வருகின் றனர். (வ-173)

## நிர்வாகிகள் தெரிவு

அச்சுவேலி, ஏப். 25

வளலாய் மீள்குடியேற்றக் கிராமத்தின் கிராம அபிவி ருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கிராம அலுவலர் பு.சாந்தரூபன் தலைமையில் வளலாய் பொது நோக்கு மண்டபத்தில் அண் மையில் நடைபெற்றது.

கூட்டத்தில் இராணுவத்தால் விடுவிக்கப்பட்ட பிரதேசத்தின் அபிவிருத்திக்கும், இடம்பெயர்ந்து வாழும் வளலாய் மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைக்கும், உட்கட்டு மான வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பாகவும் முழுமையான கவனம் செலுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப் பட்டோர் விவரம் வருமாறு:

தலைவராக செல்லையா தங்க ராசா, உப தலைவராக எட்வேட் உதயகுமார், செயலாளராக செல்லத்தம்பி சுதன், உபசெயலாளராக பஸ்தியாம்பிள்ளை செல்வரத்தினம், பொருளா ளராக செல்லப்பு துரைரத்தினம், கணக்குப் பரிசோதகராக வைரமுத்து கந்தசாமி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதோடு 7 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (வ-11)

★★★

வலி.மேற்கு ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 2015ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவுக்கான கூட்டம் பிரதேச செயலக மண்டபத்தில் அண் மையில் வலி. மேற்கு ஓய் வூதியர் சங்கத் தலை வர் மு.தியாகராசா தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது தலைவராக மு.தியாகராசா, உபதலைவராக மா.கணேசு, செயலாளராக ந.சிவரஞ்சன், பொருளாளராக க.செல்வராசா, உபசெயலா ளராக க.சந்திரசேகரன், அங்கத்தவர்களாக க.நடராசா, திருமதி ரா.சோதிலிங் கம், மு.சந்திர குமார் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டனர். (வ-29)

★★★

வல்வெட்டித்துறைவல்வை ஒன்றியத்தின் 10 ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ஒன்றியத் தலைவர் க.மயிலேறும் பெருமாள் தலைமையில் வல்வெட்டித்துறை நவீன சந்தை மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் போஷகர்களாக மு.தங்கவேல், ந.சிவரத்தினம், சூ.சே.குலநாயகம் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டனர். இந்த ஆண்டுக்கான தலைவராக பூ.அகமணிதேவர், உப தலை வராக செ.இரட்ணகுமார், செய லாளராக இ.சுரேன், உப செய லாளராக ச.ஸ்ரீகிருஷ்ண தரன், பொருளாளராக ர.குகேந்திரன் ஆகியோர் தெரிவு செய் யப் பட்டதுடன் நிர்வாகசபைஉறுப்பினர்களாக அ.வசீகரன், உ.லக்ஸ் மன், இ.மதியழகன், சி.தவராசா, த.சிவஞானம், பொ.ஈஸ்வரலிங்கம் ஆகியோ ரும் கணக்காய்வாளராகஇ.பிரதீப்பும் தெரிவு செய்யப் பட்டனர். (வ-10)

## ஒன்று கூடல்

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்த ஒன்று கூடல் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் உரியவர்களைக் கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் ந.கனகலிங்கம் தெரிவித்துள்ளார். (வ-10)

## விபத்தில் ஓட்டோச்சாரதி காயம்

தென்மராட்சி,ஏப்.25

ஏ-9 வீதியில் வேகமாகச் சென்ற பிக்கப் வாகனம் அவ்வழியே சென்ற ஓட்டோவை மோதியதில் ஓட்டோச் சாரதி காயமடைந்தார். இந்தச்சம்பவத்தில் ஓட்டோ சேதமடைந்தது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நுணாவில் மத்தியில் இடம் பெற்றது.

சாவகச்சேரி சிவன்கோவிலடியைச் சேர்ந்த துரைசிங்கம் வரதன் (வயது-40)என்னும் ஓட்டோச் சாரதி காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

இதேவேளை வேகமாக ஓடி வந்த நாய் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் அதனைச் செலுத்தி வந்த பெண் தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கொடிகாமம்- பருத் தித்துறை வீதியில் இடம் பெற்றது.

வரணி இடைக் குறிச்சியைச் சேர்ந்த செல்வநாயகம் ஆனந்தலீலா (வயது-43) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ-9)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமேஸ்வரி பாலசுப்பிரமணியம்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் இல.14, மணல்தறை வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி பாலசுப்பிரமணியம் 22.04.2015 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்) அவர்களின் அன்பு மனைவியும், திருநெல்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கம் தம்பதியரின் அன்பு மகளும், இணுவில் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஆறுமுகதாசன் (ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்)- தையல்நாயகி தம்பதியரின் அன்பு மருமகளும், சபாநாதன் (Canada), சிதம்பரநாதன் (UK), பவானி (Canada), சிவநாதன், ஸ்ரீரஞ்சனி (UK), ஜெகநாதன் (பிராந்திய முகாமையாளர் - சணச காப்புறுதி நிறுவனம்) மற்றும் சிறியநடுத்தர வளமுகாமைத்துவ நிறுவனம்) ஆகியோரின் அன்புத் தாயும், சித்திராதேவி (Canada), ரஞ்சனா (UK), ராதாகிருஷ்ணன் Canada), சிவபாலன் (UK), Dr. ரட்ணலஜி (மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியும், சர்வானந்தன் (ஓய்வுபெற்ற மருந்தாளர்), காலஞ்சென்றவர்களான இராமநாதன், சச்சிதானந்தம், அத்துவிதானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஸ்பராணி, காலஞ்சென்ற தேவாம்பிகை மற்றும் மகாதேவி, சாவித்திரி (UK) ஆகியோரின் அன்பு மைத்துனியும், சஜித்தா (Canada), சஜீவன் (Canada), ராஜினி (UK), யாழினி (UK), கோபிகா (Canada), ரிஷிகன் (UK), ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.04.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
(ஜெகநாதன் - மகன்),
(இந்திரன் - மகன்).

14,மணல்தறைலேன்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (59160) (45.3)

### அப்பாத்துரை சண்முகநாதன்

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட வங்கி முகாமையாளர் - இலங்கை வங்கி)



சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் மத்தியையும் கோப்பாய் மத்தியையும் வசிப்பிடமாகக் கொண்ட அப்பாத்துரை சண்முகநாதன் 23.04.2015 வியாழக்கிழமை அதிகாலை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுழிபுரம் மத்தியைச் சேர்ந்த அப்பாத்துரை - மயிலிட்டியைச் சேர்ந்த தையல்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான அப்புத் துரை - அன்னலக்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானலோசனி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற குமரனின் அன்புத் தந்தையும், ஞானோதயம் அவர்களின் மூத்த சகோதரனும், காலஞ்சென்ற விவேகானந்தன் மற்றும் பத்திராதேவி ஆகியோரின் மைத்துனரும், சபேஷ், கார்த்திகா ஆகியோரின் அன்பு மாமனும், நிருபா, சங்கர் (கனடா), சிவரூபன் (அமெரிக்கா), கேதாரணி (அமெரிக்கா) ஆகியோரின் சித்தப்பாவும், வருணிகா, சிவன்யா, அன்பனா ஆகியோரது அன்புப் பேரனும், சிவநாதன் (மயிலிட்டி) அவர்களது சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.04.2015 திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் கோப்பாய் வதிவிடத்தில் நடைபெற்று, பூதவுடல் சுழிபுரம் திருவடிநிலை மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
021 223 1277
077 023 9340

காத்தால் பதி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய். (59164) (46.3)

## மரண அறிவித்தல்



### திருமதி அன்னபூரணம் சிவசுந்தரலிங்கம்

வத்தனை, தம்பசிட்டி, புலோலி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்ன பூரணம் சிவசுந்தரலிங்கம் 22.04.2015 புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவஞானம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சிவசுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கெங்காதரன் மற்றும் சுதாகரன் (இத்தாலி), சிவகுமார் (சுவிஸ்), மாலினி, மதிவதனி, சிவந்தினி (வடமராட்சி கல்வி வலயம்), பாமினி, சுபாஜினி (பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அன்புத் தாயும், பாஸ்கரமூர்த்தி, பரமானந்தம், செல்வநாதன், காந்தன், செல்வதாஸ், உமாதேவி, ஆர்த்தி, சோபனா ஆகியோரின் அன்பு மாமியும், காயத்திரி, நர்த்தனா, ரகுராஜ், துஷாந்தினி, கரிகரன், சுஜன், யதுர்ஷன், அக்சயன், அஸ்விதா (இத்தாலி), அஸ்திகா (இத்தாலி), டினோஜன், லோகிதா, அபினா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.04.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வத்தனை,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

தகவல்: குடும்பத்தினர்.
தொலைபேசி: 077 849 1037

# ஆன்டிராய்டு லாலிபாப் 5.0



கூகுள் நிறுவனம் புதிதாக வெளியிட்டுள்ள ஆன்டிரோய்டு இயங்குதளம் லாலிபாப்பில் புதிய பதிவேற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

Froyo, Gingerbread, Ice Cream Sandwich, Jelly Bean, KitKat ஆகிய இயங்குதளத்திற்கு பிறகு வந்திருப்பது Lollipop. இதில் Lollipop 5.0, 5.1 என்று வெர்சன்கள் வந்துவிட்டன.

இதில் செய்யப்பட்டிருக்கும் அப்டேட்டுகள் பற்றிப் பலருக்கும் தெரியாது. அவற்றை பற்றி பார்க்கலாம்.

உங்களது பழைய ஸ்மார்ட்போனில் இருந்து அனைத்து செட்டிங்ஸ் மற்றும் தகவல்களை என்எப்சி மற்றும் ப்ளூடுத் பயன்படுத்திப் பறிமாறிக் கொள்ள முடியும்.

ஒப் நோட்டிபிகேஷன் சென்று எந்த மென்பொருள் நோட்டிபி கேஷன் உங்களைத் தொந்தரவு செய்யும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.


ஒப்ஸ் செட்டிங்ஸ்க்கு ஏற்ப லாக் ஸ்கிரீனிலும் நோட்டிபி கேஷன்களைப் பார்க்க முடியும்.

நண்பர்கள் மற்றும் மற்றவர்களிடம் போனை வழங்கும் போது கெஸ்டு மோடு பயன்படுத்தலாம்.

Do not -Disturb என்ற ஓப்ஸன் மூலம் இரவு நேரங்களில் பயனாளிகளை தொந்தரவு செய்யாமல் இருக்க அன்டிரோய்டு 5.0 அனுமதிக்கின்றது.

ஸ்மார்ட்வாட்ச் முதல் ஸ்மார்ட் ரி.வி வரை அனைத்து கருவிகளுடனும் புதிய பதிவேற்றம் மூலம் இணைக்க முடியும். தற்போது செய்யப்பட்டுள்ள அப்டேட் மூலம் பற்றரி பயன்பாடு அதிகமாகக் கிடைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## சம்சங் கலக்ஸியின் எஸ் 6 கமராவின் துல்லியத்தை காட்டும் டெமோ



சம்சங் நிறுவனம் அண்மையில் கலக்ஸியின் எஸ் 6 மற்றும் கலக்ஸியின் எஸ் 6 Edge எனும் இரு வகையான கைபேசிகளை அறிமுகம் செய்திருந்தது. ஏறத்தாழ ஒரே வகையான வசதிகளை உள்ளடக்கிய இந்தக் கைபேசிகளில் 16 மெகாபிக்சல்களைக் கொண்ட பிரதான கமரா, 5 மெகாபிக்சல்களைக் கொண்ட வீடியோ அழைப்புக்களை ஏற்படுத் துவதற்கான கமரா என்பன தரப்பட்டுள்ளன. இந்தக்கமராக்கள் மிகவும் துல்லியம் வாய்ந்தவையாகவும், தெளிவான வீடியோ பதிவு மற்றும் புகைப்படங்களை எடுக்கக்கூடிய வகையில் காணப்படுகின்றன. இதனை விளக்கும் டெமோ வீடியோ ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் இந்தக்கைபேசிகள் 5.1 அங்குல அளவுடையதும், 2560 X 1440 பட கொள்ளளவுடையதுமான QHD தொடுதிரையினைக் கொண்டதாகவும் பிரதான நினைவகமாக 3ஜிபி நினைவகம், 32ஜிபி, 64ஜிபி அல்லது 128ஜிபி சேமிப்பு கொள்ளளவுடையதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


**நாளை நவாலியில்**
**31 ஆம் நாள் நினைவஞ்சலியும்**
**வீட்டுக்கிருத்திய அழைப்பும், நன்றி நவிலலும்**

மனம் மகிழ ★ 02 . 01 . 1954

மனம் நெகிழ ★ 27 . 03 . 2015



**நாவலியூர் அமரர் உயர்திரு நவரட்ணம் சாம்பசிவம்**
(Former Security Officer-JCIT)

கடந்த 27.03.2015 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் நவரட்ணம் சாம்பசிவம் அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (26.04. 2015) முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற விருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டுப் பல வழிகளிலும் எமக்கு ஆறுதல் கூறி இறுதி நாள் வரை சகல வழிகளிலும் உதவி வழங்கிய அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புலவர் வீதி, நவாலி வடக்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.



மகாகவி பாரதி: வீழ்வோம் என நினைத்தாயோ.....


சித்திரையில் ஆரம்பம்




/அணிக்கு 5 பேர். பதிலாளிகள் இருவர் மட்டும். / காலணி உட்பட சீரான உடை கட்டாயம்./
/ அனுமதிக் கட்டணம் 250/= / அணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாவட்ட மட்டத்தில் ஆட்டங்கள்./

விண்ணப்பங்களையும் போட்டி விதிகளையும் உதயன் பத்திரிகையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

# பிரதமர் நாவாஸ் ஷெரீப் சவூதிக்கு திடீர் பயணம்



இஸ்லாமாபாத்,ஏப்.25
பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் நேற்று முன்தினம் சவூதிக்குத் திடீர் பயணம் மேற்கொண்டுள்ளார். யேமன் விவகாரத்தில் பாகிஸ்தானின் நிலைப்பாட்டில் சவூதி மன்னர் அதிருப்தி தெரிவித்ததையடுத்து, சமாதான முயற்சி மேற்கொள்ள நவாஸ் ஷெரீப் அந்தப் பயணத்தை மேற்கொண்டுள்ளார். சவூதி தலைமையில் 10 நாடுகளின் கூட்டுப் படை, கடந்த நான்கு வாரங்களாக யேமனில் வான்வழித் தாக்குதல் நிகழ்த்தி வந்தன. முன்னதாக, கூட்டுப் படையில் பாகிஸ்தான் இடம் பெற வேண்டும் என்றும், தாக்குதல் நடவடிக்கைக்கு பாகிஸ்தான் தனது போர்க் கப்பல்களையும், போர் விமானங்களையும் அளிக்குமாறும் சவூதி கேட்டுக் கொண்டது.
ஆனால் பாகிஸ்தானின் நிலைப்பாட்டில் சவூதி கடும் அதிருப்தி அடைந்துள்ள நிலையில், சவூதி மன்னரை நேரில் கண்டு சமாதானம் செய்ய நவாஸ் ஷெரீப் திட்டமிட்டார். தற்போது அவரது தலைமையில் உயர் நிலைக் குழு சவூதிக்குப் பயணம் மேற்கொண்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (14)

# நியூஸிலாந்தில் நிலநடுக்கம்



நியூஸிலாந்து தலைநகரம் வெலிங்டனில் நேற்று முன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.
தெற்குத் தீவுப் பகுதியில் 22 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட நிலநடுக்கமானது, நியூஸிலாந்தின் அதிகாரபூர்வ புவியியல் அறிக்கையின்படி, 5.2 ரிக்டர் அளவுகோலில் பதிவாகியுள்ளது. எனினும், இதனால் உயிர் சேதமோ, பொருள் சேதமோ ஏற் படவில்லை. வெலிங்டனில் கடந்த 2013 ஆம் ஆண்டின் ஜூலை, ஒகஸ்ட் மாதங்களில் இரண்டு நில நடுக்கங்கள் ஏற்பட்டன. கிரைஸ்ட் சர்ச் நகரில் கடந்த 2011–ஆம் ஆண்டு பெப்ரவரியில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் 185 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (14)

# எபோலா நோயால் 10 ஆயிரத்து 800 பேர் சாவு



ஜெனிவா,ஏப்.25
எபோலா நோய்க்கு இதுவரை 10 ஆயிரத்து 800 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 26 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டதாகவும் உலகச் சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.
மேற்கு ஆபிரிக்க நாடுகளில் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்பு எபோலா நோய் பரவியது. அந்த நோய்க்கு இதுவரை மருந்து கண்டு பிடிக்கப்படவில்லை. உலகுக்கே அச்சுறுத்தலாக உள்ள எபோலாவால் இதுவரை 10 ஆயிரத்து 823 பேர் உயிரிழந்துள்ளனர். சுமார் 26 ஆயிரத்து 79 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். லைபீரியா, கினியா, சியராலியோன் ஆகிய நாடுகளில் எபோலாவால் அதிகளவில் உயிரிழந்துள்ளனர்.
இந்த நோயைக் கட்டுப்படுத்த இந்த 3 நாடுகளும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. எபோலா வால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது.
எபோலாவால் உயிரிழந்தவர்களைப் புதைப்பதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. முன்னெச்சரிக்கை நடவடிக்கை, கடுமையான விதிமுறைகள் போன்றவற்றால் எபோலா தற்போது கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது.
கடந்த வாரம் கினியாவில் 22 பேருக்கும், சியராவில் 12 பேருக்கும் எபோலா அறிகுறி இருப்பது தெரியவந்துள்ளது. லைபீரியாவில் எபோலாவால் புதிதாக யாரும் பாதிக்கப்படவில்லை. எபோலா கட்டுக்குள் வந்தாலும் தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (14)



# ஆசிய நாடுகளுடன் கூட்டுறவை விரும்புகிறது இந்தியா

**சுஷ்மா சுவராஜ் தெரிவிப்பு**

ஜாகர்தா,ஏப்.25
இந்தியா, ஆசிய நாடுகள் உடனான கூட்டுறவை, மேலும் வலுப்படுத்த ஆர்வமாக உள்ளது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்தார். இந்தோனேஷியா தலைநகர் ஜாகர்தாவில், ஆசிய நாடுகளுக்கான தூதரகத்தைத் திறந்து வைத்த போது அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கும் போது:
ஆசிய நாடுகளுடன் கூட்டுறவை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன், ஐந்தாண்டு செயல் திட்டத்தை இந்தியா உருவாக்கி வருகிறது. 21 ஆம் நூற்றாண்டில், கிழக்காசிய நாடுகளுடனான் உறவை, பரஸ்பர பயன்பாட்டுக்கான தளமாக மாற்ற, இந்தியா விரும்புகிறது. இந்தியாவின், இத்தகைய கிழக்காசிய கொள்கையின் அடிப்படையில், ஆசியா செயற்படுகிறது. தென்கிழக்கு ஆசியா மற்றும் பரந்துபட்ட கிழக்காசிய பிராந்தியத்தில் அமைதியும், ஸ்திரத்தன்மையும் நிலவ இந்தியா பாடுபடும். இதற்கு எதிரான பாதுகாப்பு சவால்களை, பாரம்பரியமான மற்றும் அது சாராத முறைகளில், ஆசியாவுடன் இணைந்து இந்தியா சமாளிக்கும் எனவும் தெரிவித்தார். (14)


# போதைப் பொருள் கடத்தல் 10 பேருக்கு தூக்குத் தண்டனை

ஜகர்த்தா, ஏப்.25
இந்தோனேசியாவில் போதைப் பொருள் கடத்தல் கடுமையான குற்றமாகக் கருதப்படுகிறது. இந்த நிலையில் அங்கு ஹெரோயின் உள்ளிட்ட போதைப் பொருள் கடத்தியதாக பிரேஸில், பிரான்ஸ், நைஜீரியா, ஆஸ்திரேலியா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளைச் சேர்ந்த 10 பேர் கைது செய்யப்பட்டனர்.
அவர்கள் மீது நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இந்தோனேசிய ஜனாதி பதியிடம் கருணை மனு அளிக்கப்பட்டது. மேலும் தண்டனை பெற்றவர்களின் நாடுகளின் தூதரகங்களும் தூக்குத் தண்டனையை ரத்து செய்யும் படி கோரிக்கை விடுத்தன.
போதைப் பொருள் கடத்தலால் நாட்டில் குற்றங்கள் பெருகி நாட்டுக்கு கடும் பாதிப்புகள் ஏற்படுவதாக கூறி ஜனாதிபதி ஜோகோ விடோடோ மறுத்துவிட்டார். அதனைத் தொடர்ந்து 10 பேரின் தூக்குத் தண்டனை உறுதி செய்யப்பட்டது. அவர்கள் அனைவரும் நுசாகம்பங்கள் தீவில் உள்ள சிறையில் தூக்கிலிடப்படவுள்ளனர். தண்டனை நிறைவேற்ற அங்கு அவர்கள் மாற்றப்பட்டுள்ளனர். தூக்கு தண்டனை உடனே நிறைவேற்றப்பட வேண்டும். ஆனால் அதற்கான திகதி இன்னும் அறிவிக்கப்படவில்லை. (14)



ஆர்மீனியா, ஆட்டோமான் பேரரசின் கீழிருந்தபோது, முதல் உலகப் போர் காலகட்டத்தில் கொல்லப்பட்டதாக கூறப்படும் 15 லட்சம் பேரை புனிதர்களாக அறிவிக்கும் நிகழ்வு அண்மையில் ஆர்மேனிய தேவாலயம் யேரிவான் நகரில் நடைபெற்றது.(14)

# மெக்கா–மதீனா இடையே அதிவேக ரயில்



டுபாய்,ஏப்.25
சவூதி அரேபியாவில் ஹரமைன் என அழைக்கப்படும் அதிவேக ரயில் திட்டத்தின் கீழ் ஜித்தா வழியாக மெக்கா மற்றும் மதீனா ஆகிய புனித நகரங்களுக்கு இடையிலான, அதிவேக ரயில் சேவையின் பணிகள் ஏறத்தாழ இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. விரைவில் அதிவேக ரயிலின் சோதனை ஓட்டம் தொடங்கவுள்ளது. அதன் மூலம் இரு புனித நகரங்களுக்கு இடையே 90 நிமிடங்களில் பயணம் செய்யலாம்.
இந்த ரயில் பாதையின் தூரம் 453 கி.மீ ஆகும். மணிக்கு இந்த ரயில் 300 கி.மீ. வேகத்தில் செல்லும் எனவும் ஆண்டுக்கு 30 லட்சம் மக்கள் இந்த ரயில் தடத்தில் பயணம் செய்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. உலகம் முழுவதுமிருந்து சவூதி அரேபியாவுக்கு புனித பயணம் மேற்கொள்ளும் லட்சக்கணக்கான முஸ்லிம்களுக்கு மிகவும் பயனளிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

# அணுகுண்டுகள் எண்ணிக்கை அதிகரிக்க வடகொரியா திட்டம்

சியோல் ,ஏப்.25
அடுத்த வருட இறுதிக்குள், அணுகுண்டுகளின் எண்ணிக்கையை இருமடங்காக உயர்த்த, வடகொரியா திட்டமிட்டுள்ளது. கடந்த 2006, 2009 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில், வடகொரியா அணு ஆயுதசோதனைநடத்தியுள்ளது. அமெரிக்காவில், கடந்த பெப்ரவரி மாதத்தில் நடந்த அணுசக்தி நிபுணர்கள் கூட்டத்தில், வடகொரியாவிடம் 10 முதல் 16 அணுகுண்டுகள்இருப்பதாகக் கூறப்பட்டது. வடகொரிய தலைநகர் பியாங்யாங்கில் உள்ள அணு உலைகளில் உள்ள யுரேனியம் அளவு குறித்து, சீன அணுகுண்டு நிபுணர்கள் அண்மையில் ஆய்வு நடத்தினர். இது குறித்து, வடகொரியாவிடம், 20 அணுகுண் டுகள் உள்ளன. அடுத்த வருட இறுதிக் குள் மேலும் 20 அணுகுண்டுகளைத்தயாரித்து, அணுகுண்டுகளின் எண் ணிக்கையை, 40 ஆக உயர்த்தும் பணியில் வடகொரிய அரசு ஈடுபட்டுள்ளதாகவும், சீன அணுகுண்டு நிபுணர்கள் தெரிவித்து உள்ளனர். அணு ஆயுதங்களை தயாரிப்பதற்கு தடை விதிக்காவிட்டால், 2020 ஆம் ஆண்டு, வடகொரியா விடம் 100 அணுகுண்டுகள் இருக்கும் என்று நிபுணர்கள் அறிக்கை வெளியிட்டுள்ளனர். (14)







ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கிடையிலான மாநாட்டின் 60 ஆவது நினைவு தின நிகழ்வு நேற்று இந்தோனேஷியாவில் அணி வகுப்புடன் நடைபெற்றது.




## பேஸ்புக்கில் 144 கோடி பயனர்கள்

வொஷிங்டன்,ஏப்.25

உலகின் மிகப்பெரிய சமூக வலைத்தளமாக பேஸ்புக் திகழ்கிறது. அந்த வலைத்தளத்தை உலகமெங்கும் 144 கோடி பேர் பயனாளர்களாக உள்ளதாகப் பேஸ்புக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது பேஸ்புக்கின் கால் ஆண்டில் அதன் லாபம் 20 சதவீதம் அதிகரித்துள்ளது. குறிப்பாக விளம்பரம் மூலம் 3.32 பில்லியன் டொலர் வருமானம் கிடைத்துள்ளது எனவும், கடந்த வருடத்தை விட பேஸ்புக் பயன்படுத்துவோர் எண்ணிக்கை 13 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் 144 கோடி பேர் பேஸ் புக்கை பயன்படுத்துகின்றனர். கைத்தொலைபேசி மூலம் 125 கோடி பேர் பயன்படுத்துகின்றனர் எனப்பேஸ்புக்நிறுவனம்தெரிவித்துள்ளது. (14)

# யேமனில் அமைதிப்பேச்சுக்கு கிளர்ச்சியாளர்கள் நிபந்தனை

## தாக்குதல்கள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும்

சனா,ஏப்.25

யேமன் நாட்டில் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு, அனைத்து வகையிலான தாக்குதல்களும் நிறுத்தப்பட வேண்டும் என்று ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நிபந்தனை விதித்துள்ளனர்.

யேமன் நாட்டில், ஜனாதிபதியை ஓட வைத்து, முக்கிய நகரங்களை தங்கள் வசப்படுத்திய, ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுதி கிளர்ச்சியாளர்களை ஒடுக்குவதற்கு, சன்னி பிரிவைச் சேர்ந்த சவுதி அரேபியா தலைமையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ்,குவைத், பஹ்ரைன், கட்டார், ஜோர்தான், மொராக்கோ, எகிப்து, சூடான் ஆகிய நாடுகள் கரம் கோர்த்தன.



இந்த நாடுகளின் கூட்டுப்படைகள் யேமனில் கடந்த மாதம் வான் தாக்குதல்களை நடத்தி வந்தன. அந்தத் தாக்குதல் சம்பவங்களில் 900 இற்கும் மேற் பட்டோர் கொல்லப்பட்டனர். ஒன் றரை லட்சத்துக்கும் மேற்பட்டோர் இடம் பெயர்ந்தனர்.

ஏறத்தாழ ஒரு மாத காலமாக நடைபெற்று வந்த அந்தத் தாக்குதல்களை, யேமன் ஜனாதிபதி கேட்டுக்கொண்டதின் பேரில், நிறுத்திக் கொள்வதாக சவூதி கூட்டுப்படைகள் கடந்த செவ்வாய்க்கிழமை அறிவிப்பு வெளியிட்டன.

சவுதி அரேபியா மற்றும் அதன் அண்டை நாடுகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டதாகவும், அந்த அச்சுறுத்தலை அகற்றுவதற்காகத்தான் தாக்குதல்கள் தொடுத்ததாகவும், தங்கள் நோக்கம் நிறைவேறி விட்டதாகவும் சவுதி கூட்டுப்படைகள் தெரிவித்தன.

யேமன் மீதான தாக்குதல்களை முடிவுக்கு கொண்டு வந்தாலும் கூட, கடற்படையின் முற்றுகை தொடரும். ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடமாட்டம் இருந்தால் தாக்குதல் தொடுக்கப்படும் என்றும் அவை தெரிவித்தன.

ஆனால் போர் நிறுத்த அறிவிப்பு வெளியான 24 மணி நேரத்துக்குள், டாய்ஸ் நகரில் யேமன் இராணுவத்தின் மீது கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் தொடுத்தனர். அதனைத் தொடர்ந்து, அங்கு சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப்படைகள் மீண்டும் வான் தாக்குதல்கள் நடத்தின.

யேமனில் தாக்குதல்களை மீண்டும்சவுதி கூட்டுப்படைகள்தொடங்கி விட்டனவா அல்லது இது ஒரு குறுகிய கால நடவடிக்கையா எனத் தெரியவில்லை. இதற்கிடையே கடந்த மாதம் ஏடன் நகருக்கு அருகே ஒரு விமான தளத்தில் வைத்து பிடித்து தங்கள் வசம் வைத்திருந்த யேமன் இராணுவ அமைச்சர் மகமது அல் சுபாய்ஹியை கிளர்ச்சியாளர்கள் சனாவில் விடுதலை செய்தனர். அவரை கிளர்ச்சியாளர்கள் விடுவிக்க வேண்டும் என்று ஐ.நா. கோரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையில் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் செய்தித் தொடர்பாளர் முகமது அப்துல் சலாம், யேமன் விவகாரத்தில் ஐ.நா. ஆதரவுடன் கூடிய அமைதிப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க வேண்டும்.

ஆனால் தாக்குதல்கள் முழுமையாக நிறுத்தப்பட்ட பின்னர் தான் பேச்சுவார்த்தை எனக்கூறி உள்ளார். இதற்கு முன்பு ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும், ஜனாதிபதி அப்துரபு மன்சூர் ஹாதி அரசுக்கும் இடையே கடந்த ஜனவரி மாதம் நடந்த பேச்சுத் தோல்வியில் முடிந்தமை குறிப்பிடத்தக்கது. (14)



## சிலியில் எரிமலை வெடித்துச் சிதறியது

சாண்டியாகோ,ஏப்.25

43 வருடங்களாக செயலற்று இருந்த சிலி நாட்டின் கால்புகோ எரிமலை மீண்டும் வெடித்துச்சிதறி, வானில் சாம்பல் மற்றும் புகையை கக்கி வருகிறது. எரிமலை வெடித்து சிதறும் பிரமாண்ட காட்சிகள் இணையத்தில் வேகமாகப் பரவிவருகின்றது. எரிமலை வெடிப்பதால் பொது மக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் கேடு விளைவிக்கும் என்றாலும், கால்புகோ எரிமலை வெடித்து சிதறும் போது வெளிவரும் புகையும் சாம்பலும் வானில் உருவாக்கும் புகைக் கோளம் பார்ப்பவரைப் பிரமிக்க வைத்துள்ளது.

அந்த நாட்டின் தலைநகரான சாண்டியாகோவில் இருந்து ஆயிரத்து 400 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் தெற்கு துறைமுக நகரமான பர்டோ மோண்டில் இருக்கும் கால்புகோ எரிமலை, நேற்று முதல் சீற்றத்துடன் காணப்படுகிறது. இதனால் எரிமலையைச் சுற்றி உள்ள 20 கிலோ மீற்றர் பகுதியில் இருக்கும் மக்களை உடனடியாக வெளியேற்றும் பணி நடந்து வருகிறது. எரிமலை வெடிப்பின் காரணமாக பனிக்கட்டிகள் உருகி வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயமும் உள்ளது. எப்போது வேண்டுமானாலும் வெடிக்கும் நிலையில் இருக்கும் 90 எரிமலைகளில், மிகவும்ஆபத்தானதுகால்புகோஎரிமலை என்பது குறிப்பிடத்தக்கது. (14)

## நடனம் ஆட மறுத்த பெண் சுட்டுக்கொலை



பாலியா,ஏப்.25

மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த பெண் நடனக்கலைஞர் பியூ (வயது 23) என்பவர், திருமண விழா போன்ற நிகழ்வுகளின்போது நடைபெறும் கலைநிகழ்வுகளில் கலந்து கொண்டு நடனம் ஆடுவார்.

இந்த நிலையில் உத்தரபிரதேச மாநிலம் பாலியா மாவட்டத்தில் நடைபெற்ற திருமண விழா ஒன்றின், கலைநிகழ்ச்சியில் கலந்து கொண்டு நடனமாடினார். அதன் போது பார்வையாளர்கள் தங்களது தாய் மொழிப் பாடல் ஒன்றுக்கு அவரை நடனமாடும் படி கூறினர்.

அதனைப் பெண் நடனக் கலைஞர் ஏற்க மறுத்து விட்டார். அதனால் ஆத்திரம் அடைந்த பார்வையாளர்களில் ஒருவர் அந்தப் பெண்ணைத் துப்பாக்கியால் சுட்டார். அதில் படுகாயம் அடைந்த பெண் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

தகவல் அறிந்து விரைந்து வந்த பொலிஸார் உடலை மீட்டு மருத்துவமனைக்குஅனுப்பிவைத்தனர்.(14)

# தென்னாபிரிக்காவில் கண்டனப் பேரணி

கேப் டவுன்,ஏப்.25

வெளிநாட்டவர்களுக்கு எதிராக தென்னாபிரிக்காவில் தொடர்ந்து நடந்து வரும் வன்முறைச் செயல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், அந்த நாட்டில் நடத்தப்படும் பேரணிகளில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு வருகின்றனர்.

ஜோஹனஸ்பர்க் நகரிலும், கடந்த 2008 ஆம் ஆண்டு வெளி நாட்டவர்கள் அதிகம் தாக்கப்பட்ட, தெற்கேயிருக்கும் துறைமுக நகரான போர்ட் எலிசபெத்திலும் இந்தப் பேரணிகள் நடந்து வருகின்றன.

அண்மைக் காலமாக வெளிநாட்டவர்களுக்கு எதிரான தாக்குதல்கள் நடைபெற்ற டர்பன் நகரிலும், ஜோஹனர்ஸ் பேர்க்கில் உள்ள அலக்சாண்டரா பகுதியிலும் பொலிஸார் அதிரடி சோதனைகளை நடத்தி வருகின்றனர். தெருக்களில் இராணுவம் ரோந்து செல்வதையும் பலர் வரவேற்றுள்ளனர். (14)



# உலக மலேரியா தினம்-2015

உலகெங்கும் ஆண்டொன்றிக்கு 1300 சிறார்களை உயிர்ப் பலி எடுக்கும் ஆட்கொல்லி நோயாகிய மலேரியா நோய்க்கு எதிராக உலக மலேரியா தினம் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி உலகளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டு வருகிறது. "வளமான எதிர்காலத்துக்கான முதலீடு மலேரியாவை தோற்கடிப்பதே" எனும் தொனிப் பொருளில் உலக மலேரியாதினம் இவ்வருடமும் கொண்டாடப்படுகின்றது.

இலங்கையில் மலேரியா நோயானது 1962 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 1.5 மில்லியன் மக்களை நோய்த் தாக்கத்துக்கு உள்ளாக்கி 7 மாதங்களில் பலியெடுத்த உயிர்களின் எண்ணிக்கை 80,000 ஆகும்.

தற்போது இலங்கையில் மலேரியா நோயானது அனைவரினதும் அர்பணிப்பான சேவைகளினால் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டு 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் உள் ளூர் மலேரியா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை முற்றாகத் தடுக்கப்பட்ட போதும், வெளிநாடுகளில் இருந்து வரும் நோயாளர்கள் இன்னமும் இனம் காணப்பட்ட வண்ணம் உள்ளனர். தேசிய ரீதியில் 2013இல் 95 ,2014 இல் 49, 2015 இல் 4 என்ற எண்ணிக்கையில் நோயாளர்கள் இனம் காணப்பட்டனர்.

இதேபோன்று யாழ்.மாவட்டத்தி லும் வெளிநாடுகளில் இருந்து மலேரியா தொற்றுடன் வந்த நோயாளிகளின் எண்ணிக்கையானது 2013 இல் 3, 2014 இல் 1, 2015 இல் 00 என்ற எண்ணிக்கையில் நோயாளர்கள் இனம் காணப்பட்டனர்.

இவ்வாறான மலேரியா நோயற்ற நிலையானது இலங்கையில் கடந்த 1962ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிலவிய போதும் மலேரியா சம்பந்தமான விழிப்புணர்வு நடவடிக்கைகள் நலிவடைந்த காரணத்தினால் மீண்டும் மலேரியா நோயானது உக்கிரநிலையில் பரவலடையத் தொடங்கியது.

எனவே மலேரியா நோய்த் தொற்றிலிருந்து எம்மைப்பாதுகாத்துக் கொள்ள பின்வரும் நடைமுறைகளைக் கையாள்வதன் மூலம் ம்லேரியா அற்ற இலங்கையை உருவாக்குவதற்கு அனைவரும் ஒன்றிணைவோம்.

1.மலேரியாத் தொற்றுடைய நாடொன்றிற்கு செல்வதற்கு முன்னர் மலேரியா தொற்றப்படுவதிலிருந்து தவிர்த்துக் கொள்வதற்கான முன் சிகிச்சை மருந்துகளைப் பெற்றுக்கொள்ளவும் (அருகில் உள்ள அரச சுகாதார நிறுவனப்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.)

2.மலேரியா காணப்படும் நாடொன்றில் இருந்து வருகை தரும் போது மலேரியாவை இனங்கண்டு கொள்வதற்கான குருதிப் பரிசோதனை செய்து கொள்ளவும்.

3.காய்ச்சல் இருப்பின் மலேரியாவை இனங்காண்பதற்கான எளிமையான குருதிப் பரிசோதனை செய்து கொள்ளவும்.

4.நுளம்புக் கடியிலிருந்து பாதுகாப் படைவதற்கு நுளம்பு வலைகளைப் பயன்படுத்தப் பழகிக் கொள்ளவும்.



யாழ்.மாவட்ட மலேரியா விழிப்புணர்வு நிகழ்வுகள்–2015

தெருவெளிநாடகமும், மலேரியா விழிப்புணர்வை முன்னிட்டு "நுளம்புக்கு எதிராக ஒன்றிணைவோம்"என உறுதியெடுத்து பொதுமக்களிடமிருந்து கையொப்பம் பெறும் நிகழ்வும் பின்வரும் ஒழுங்குகளில் நடைபெற இருக்கின்றன.

**28.04.2015**

மு.ப. 8 மணி –யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையம்

மு.ப. 10 மணி –சுன்னாகம் பஸ் தரிப்பு நிலையம்

மு.ப.11 மணி – மல்லாகம் பஸ் தரிப்பு நிலையம்

பி.ப. 2 மணி – மானிப்பாய் பஸ் தரிப்பு நிலயம்

**29.04.2015**

மு.ப. 9 மணி–சாவகச்சேரி பஸ் தரிப்பு நிலையம்

மு.ப. 10 மணி–கொடிகாமம் பஸ் தரிப்பு நிலையம்

மு.ப.11 மணி– நெல்லியடி பஸ் தரிப்பு நிலையம்

பி.ப. 2 மணி –பருத்தித்துறை பஸ் தரிப்பு நிலையம்

பி.ப. 4 மணி–அச்சுவேலி பஸ் தரிப்பு நிலையம்

இவற்றுக்கான அனுசரணையை யாழ்.றோட்டறிக் கழகம் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஜனசக்திக்கு விருதுகள்

ஜனசக்தி இன்சூரன்ஸ் பிஎல்சி நிறுவனம், தேசிய வர்த்தக சம்மேளனத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்படும் தேசிய வர்த்தக சிறப்பு விருதுகள் வழங்கும் நிகழ்வில் மிக உயரிய விருதாகக் கருதப்படும் இரு தங்க விருதுகளை வென்றுள்ளது.

புத்துருவாக்க வர்த்தகத்தீர்வுகளை செயல்படுத்துவதில் நிறுவனத்தின் செயற்திறனைக் கௌரவிக்கும் வகையில் காப்புறுதிப் பிரிவில் வர்த்தக செயற்திறனுக்காக தங்க விருது வழங்கப் பட்டது.

மேலும் சிறந்த மக்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட செயல் முறையை விருத்தி செய்வதற்காக தொழிற்துறையில் மாற்றத்தை உண்டாக்கக்கூடியஅணுகுமுறையைக்கையாள்வதற்காக திறன் கட்டியெழுப்புதல் செயற்திறன் இற்கான தங்க விருதும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வெற்றியானது எமது அணியினரின் அர்ப்பணிப்பையும், உலகத்தரம் வாய்ந்த பாதுகாப்பு மற்றும் சேவைகளைப் போட்டி நிறைந்த சந்தையில் ஜனசக்தி வழங்குவதை சான்று பகர்கிறது. மேலும் இவ் விருதானது எமது தற்போதைய முதலீடுகள் மற்றும் எமது வணிகத்தில் சிறந்து விளங்குவதற்கான அர்ப்பணிப்பையும் வெளிக்காட்டுகிறது என ஜனசக்தி காப்புறுதியின் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரகாஷ் ஷாப்டர் தெரிவித்தார்.

ஒரு தசாப்தத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட தேசிய வர்த்தக சிறப்பு விருதுகள் நிகழ்வானது அனைத்து விடயங்களிலும் சிறப்பாக செயலாற்றிய நிறுவனங்களை கௌரவித்து வரும் மிகவும் எதிர்பார்ப்புக்குரிய வருடாந்த நிகழ்வாகக் காணப்படுகிறது.

இந் நிகழ்வில் மக்களுக்கு உந்து சக்தி அளித்தல், வாடிக்கையாளர் மதிப்பு மற்றும் வணிக முடிவுகளை வழங்குவதற்கு வளங்கள் மற்றும் செயல்முறை, உள்நாட்டு நிறுவனங்கள் மத்தியில் புதிய கண்டு பிடிப்புக்களை காட்சிப்படுத்தல், தொடர் கற்றல் அனுபவம், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பங்களிப்பு வழங்குவதோடு தமது போட்டித்தன்மையை மேம்டுத்துதல் போன்றவற்றில் செயற்திறனை வெளிப்படுத்தும் நிறுவனங்களுக்கு விருதுகள் வழங்கப்படு கின்றன.

இவ் விருதுகளுக்காக கிடைத்திருந்த விண்ணப்பங்கள், தலைமைத்துவம், கூட்டாண்மை ஆளுகை, திறன் கட்டியெழுப்பல், செயற்திறன் நிர்வாகம், சந்தை அடைவு, நிலையாண்மை மற்றும் வணிக செயற்திறன் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் நிலையான மற்றும் நிதி முடிவுகள் போன்ற பிரிவுகளில் நடுவர் குழுவினரால் தரமான அணுகுமுறையின் கீழ் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதில் தொழிற்துறையைச் சேர்ந்த முன்னணித் தலைவர்களினால் முன்மொழியப்பட்ட மதிப்பீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1994 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந் நிறுவனம் ஆயுள் மற்றும் பொது வணிகப் பிரிவுகளில் ஈடு இணையற்ற வர்த்தக மற்றும் அபாய முகாமைத்துவ தீர்வுகளை வழங்கி வருகின்றது.

சமூக பொறுப் பின் ஓர் அங்கமாக, ஜனசக்தி கடந்த ஆண்டுகளில் பாதசாரிகள் கடக்கு மிடத்தில் மக்களுக்கு பாதுகாப் பளிக்கும் திட்டங்கள், சுனாமி உதவித் திட்டங்கள், சி.கே.டி மற்றும் டெங்கு ஒழிப்புத் திட்டங்கள், பாது காப்பான போத்தல் விளக்குத் திட்டங்களுக்கு நிதியளித்துள்ளதுடன், நீர் பாதுகாப்பு, மெய்வல்லுநர், ஹொக்கி, கிரிக்கெட், படகோட்டம், கோல்ஃப், ஸ்கொஷ் போன்ற விளை யாட்டுகளுக்கு அனுச ரணை வழங்கி இலங்கையில் விளையாட் டிற்கு பங்களிப்பு வழங்குவதில் முன்னோடியாக விளங்கி வருகிறது.

வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், பங்குதாரர்களுக்கு பெறுமதி சேர்த்தல் மற்றும் 20 ஆண்டுகளாக நாட்டிற்கு சேவையாற்றும் சிறந்த கூட்டாண்மை ஆளுகையானது நிறுவனத்தின் அடையாளத்தை சமூகப் பொறுப்பு வாய்ந்த நிறுவனமாக நிலைநாட்டியுள்ளது. (த)

# வசதிகள் குறைந்த மாணவர்களுக்கு

## பஷன் பக் வழங்கியது அன்பளிப்பு

நாடு முழுவதும் 16 விற்பனை நிலையங்களைக் கொண்ட, இலங்கையின் முன்னணி ஆடை விற்பனைத் தொடரான ஃபஷன் பக், தனது தொடர்ச்சியான சமூகப் பொறுப்புணர்வுச் செயற் திட்டங்களில் மற்றொரு அங்கமாக மொரட்டுவ போதிராஜ பாடசாலையின் மாணவர்களுக்கு சீருடைகளை நன்கொடையாக வழங்கியிருந்தது.

இது தொடர்பில் பஷன் பக் துணை பொது முகாமையாளர் கலாநிதி எஸ்.எச்.எம். ஃபராஸ் கருத்து தெரிவிக்கையில், புதுவருடக் கொண்டாட்டங்கள் என்பது அனைவர் மத்தியிலும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் நிகழ்வாக அமைந்துள்ளதுடன், இலங்கையின் அனைத்துப் பாகங்களைச் சேர்ந்தவர்களாலும் கொண்டாடப்படுகிறது. இந்தக் காலப்பகுதியில் குறைந்தளவு வசதிகள் படைத்தவர்களுக்கு உதவிகளை வழங்க வேண்டியதும் முக்கியத்துவம் வாய்ந்த தாகும். உதாரணமாக, போதிராஜ பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களைக் குறிப்பிடலாம். இவர்களுக்குப் பாடசாலைச் சீருடைகளைக் கூட பெறமுடியாத நிலை காணப்பட்டது என்றார்.

மாணவர்கள் தமக்குரிய சீருடைகளை பெற்றுக் கொண்டவுடன் மகிழ்ச்சி மற்றும் குதூகலிப்பை வெளிப்படுத்தியிருந்தனர். இதன் மூலம் சிறியளவு பங்களிப்புக்கூட அவர்களின் வாழ்க்கையில் எந்தளவுக்கு தாக்கத்தை



ஏற்படுத்தக்கூடும் என்பது புலப்படுகிறது. எதிர்காலச் சந்ததியினருக்கு நாம் தொடர்ச்சியாக பங்களிப்புகளை வழங்க எதிர்பார்த்துள்ளதுடன்,அதன் மூலம் அவர் களின் வாழ்க்கைத்தரம் மற்றும் நெறியுணர்வை ஊக்குவிக்கவும் திட்டமிட்டுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். போதிராஜ பாடசாலையில் 112 மாணவர்களும், 7 ஆசிரியர்களும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

பஷன் பக் சமூகப் பொறுப்புணர்வுச் செயற்திட்டமான சிசு திரிமக என்பதன் மூல மாக இலங்கையின் ஆயிரக்கணக்கான மாணவர்களின் இதயங்கள் கவரப்பட்டுள்ளன. அதன் பல தொழில் வழிகாட்டல் பயிற்சிநெறி மூலமாக, பெருமளவான மாணவர்களுக்குத் தமது எதிர்காலத்தை திட்டமிட்டு, அதற்கேற்ற வகையில் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்வதற்கு உதவும் வகையில் அமைந்துள்ளது. சிசு திரிமக என்பது சமூ கத்தினதும் சூழலினதும் சிறப்பான செயற்பாட்டுக்கு பெருமளவில் பங்களிப்புகளை வழங்கியுள்ளது. குடிநீர் விநியோக திட்ட பூர்த்தி, கணினி அலகு அன்பளிப்பு, புலமைப் பரிசில் நிதியத்துக்கான அனுசரணை, பல வைத்தியசாலைகளின் கர்ப்பிணி சிகிச்சைப் பிரிவுகளை மெருகேற்றம் செய்திருந்தமை, இதர சூழல் திட்டங்களின் ஆரம்பம் போன்றவற்றை ஃபஷன் பக் முன்னெடுத்துள்ளதுடன், சமூகத்துக்கு எந்தளவு பங்க ளிப்பை நிறுவனம் வழங்கியுள்ளது என்பதை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்துள்ளது. அத்துடன் இலங்கையின் பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த வசதிகள் குறைந்த பாட சாலைகளுக்கு பங்களிப்புகளைவழங்குவதற்குசான்றாகஅமைந்துள்ளது. (த)

## தவித்த வாய்க்கு நீர் வேண்டும்

கோடைகாலத்தின் வெப்பம் மக்களை வாட்டி வருகின்றது. தாகத்தைத் தணிக்கும் இளநீர், உடலுக்குக் குளிர்ச்சியைத் தருகின்ற வத்தகைப்பழம், வெள்ளரிப்பழம் என்பன அனைத்து இடங்களிலும் குவித்து வைக்கப்பட்டுள்ளன. மக்களும் அவற்றை ஆர்வத்துடன் வாங்குவதையும் காணமுடிகின்றது. ஆனால் இவற்றின் விலைதான் அதிகமாக உள்ளது. சற்றுக் குறைவான விலையில் இவை விற்கப்பட்டுமாயின் சகல தரப்பினரும் நன்மை பெறுவார்கள்.

இதேவேளை குளிர்பான உற்பத்தி நிறுவனங்களும் போட்டி போட்டுக்கொண்டு தமது வியாபாரத்தை முடுக்கி விட்டுள்ளன. மக்களும் இவற்றை அதிகளில் வாங்கி உபயோகப்படுத்துகின்றனர். ஆனால் சீனியை ஒதுக்கி வைத்துள்ள நீரிழிவு நோயாளர்கள் இவற்றை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கின்றனர். வெளிநாடுகளில் உள்ளதைப் போன்று இங்கும் நீரிழிவு நோயாளர்கள் பயன்படுத்தக் கூடிய இனிப்பினால் ஆன குளிர்பானங்கள், உணவுப் பொருள்கள் ஆகியவற்றைத் தயாரிக்க வேண்டும். இதனால் சகல தரப்பினரும் நன்மை பெற முடியும்.


குடாநாட்டைப் பொறுத்த வரையில் நல்ல குடிதண்ணீருக்கான தேவை என்றுமில்லாத விதத்தில் அதிகரித்துக் காண்படுகின்றது. இனி வரும் மாதங்களில் இது மேலும் அதிகரிக்கக் கூடிய வாய்ப்புக்களே உள்ளன. ஆகவே உள்ளூர் அதிகாரிகள் இப் போதே திட்டங்களைத் தீட்டி தயார் நிலையில் இருத்தல் வேண்டும்.

சாட்டியில் இடம்பெற்ற சம்பவமொன்று மனதுக்கு வேதனையைத் தருகின்றது. குடிதண்ணீர் வசதியில்லாத மக்களுக்கென அதனை எடுத்துச் செல்வதற்கு பவுசர்களுடன் வந்தவபர்களை இனம்தெரியாத சிலர் விரட்டிக் கலைத்ததாக செய்திகள் கூறுகின்றன. இந்தச் சம்பவம் உண்மையாக இருக்குமானால் கண்டிக்கத் தக்கதாகும். மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையுடன் விளையாடுகின்ற எவரையும் எளிதில் மன்னிக்கக் கூடாது. இதனைக் கண்டு கொள்ளாமல் விட்டால் எதிர்காலத்தில் வேறு இடங்களிலும் இத்தகைய சம்பவங்கள் இடம் பெறக்கூடும்.

என்னதான் பிரச்சினைகள் இருந்த போதிலும் தாகத்தால் துடிப்பவர்களுக்கு தண்ணீரை வழங்குவதில் தடைகள் எதுவும் இருக்கவே கூடாது.

*பொ.மாதவி ,வேலணை*

## வாசகர் திருமுகம்



## கவனிப்பார் இல்லாத குளம்

யாழ். நகரில் ஸ்ரான்லி வீதிக்குத் தெற்குப் பக்கமாக அமைந்திருக்கும் குளம் அசுத்தம் நிறைந்த தாகவும், சுகாதாரத்துக்குக் கேடு விளைவிக்கும் வகையிலும் காணப்படுகின்றது.

நகரின் முக்கியமான பகுதியில் அமைந்துள்ள இந்தக் குளத்தை மாநகரசபையினர் கவனத்தில் எடுத்து துப்புரவாக்கும் பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். கழிவுகள் கொட்டுவதன் காரணமாகவே குளம் இந்த மோசமான நிலைக்கு வந்துள்ளதாகப் பலரும் தெரிவிக்கின்றனர். இதில் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால் அதற்காக இந்தக் குளம் பராமரிப்பின்றி இருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

இதேவேளை இந்தக் குளத்தின் மேற்குப் பகுதியில் பலமாடிகளைக் கொண்ட கட்டடத் தொகுதியொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் கூட குளம் பராமரிப்பின்றிக் காணப்படுகின்றமை கவலை தருவதாக உள்ளது.

டெங்கு, அது இது,வெனப் பரபரப்பாகப் பேசுகின்ற சுகாதாரத்துறையைச் சேர்ந்த அதிகாரிகளின் கண்களில் இந்தக் குளம் தெரியாமல் போனமை வியப்பை ஏற்படுத்துகின்றது. *மா.சிவம், கொட்டடி*

## மாகாண சபையாவது கவனிக்குமா?


சுன்னாகம் – புத்தூர் வீதியில் பயணிக்கும் மக்களின் அவலம் தொடர் கதையாகவே மாறிவிட்டது. இந்த வீதியின் மோசமான நிலை காரணமாக இதனூடாகப் பயணிப்பதற்கு மக்கள் தயக்கம் காட்டும் நிலை தொடர்கின்றது.

வருடக் கணக்கில் துன்பத்தை அனுபவிப்பதற்கு எவர்தான் விரும்புவார்கள்? இந்த வீதியின் முக்கியத் துவம் தொடர்பாகப் பலமுறை எடுத்துக் கூறப்பட்ட போதிலும் உரிய அதிகாரிகள் அசைந்ததாகத் தெரியவில்லை. மக்களின் துன்பங்களும் கருத்தில் கொள்ளப்படவில்லை .

வடக்கில் மாகாணசபை ஒன்று இயங்கி வரும் நிலையில் இந்த வீதி மாகாண சபை உறுப்பிணர்களின் கண்களுக்கும் தெரியவில்லையா? என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

ஆகவே இனியும் சாட்டுப்போக்குகள் கூறாது இந்த வீதியை உடனடியாகப் புனரமைக்க வேண்டுமென மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். *வா.தீபன் அச்செழு.*

### கேலிச் சித்திரம்



நன்றி: லங்காதீப

# தேசியக் கொடியும் தேசிய கீதமும்

புதிய அரசின் நூறு நாள் நேற்று முன்தினம் வியாழக்கிழமையுடன் முடிவுக்கு வந்துள்ளது. இந்த நூறு நாள்களில் தமிழ் மக்களுக்கு மிகப் பெரிய சந்தோசத்தைக் கொடுத்த ஒரு விடயம் பஸில் ராஜபக்ஷவின் கைதுதான். எஞ்சிய ராஜபக்ஷாக்களும் கைது செய்து சிறை வைக்கப்பட்டிருந்தால் நன்றாக இருக்கும் என்று, தமிழ் மக்களின் வாய்கள் முணுமுணுக்காமலும் இல்லை. எது எப்படியோ உப்புத் தின்றவன் தண்ணி குடித்துத்தான் ஆக வேண்டும்.

கடந்த வாரத்தில் இந்தக் கைதுகள், விசாரணை அழைப்புக்களுக்கு எதிராக ராஜபக்ஷாக்களின் ஆதரவாளர்கள் – உணர்வெழுச்சியுடன் கூடிய போராட்டங்களை நடத்தியிருந்தனர். நீதிமன்றங்களின் தடை உத்தரவுகளையும் மீறி அவர்கள் தங்கள் போராட்டங்களை நடத்திக் காண்பித்திருந்தனர். ராஜபக்ஷாக்கள் ஆட்சியில் இருக்கும் போது இவ்வாறு போராட்டம் நடத்தப்பட்டிருந்தால் நிலைமை என்ன ஆகியிருக்கும்?

ஆனாலும், புதிய ஆட்சி நல்லாட்சி என்பதற்காக, நீதிமன்ற தடையுத்தரவுகளை மீறிப் போராட்டம் நடத்துபவர்களையும் கண்டும் காணாமல் இருப்பது நல்லதல்ல. இவை எல்லாவற்றையும் தாண்டி இந்தப் போராட்டங்களில் கலந்து கொண்டிருந்தவர்கள் கைகளில் ஏந்தியிருந்த கொடி இப்போது சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

தனித்து வாளேந்திய சிங்கம் மற்றும் நான்கு மூலைகளிலும் அரச இலைகள் மாத்திரமே உள்ள கொடி பயன்படுத்தப்பட்டது. இது இலங்கை தனிச் சிங்கள – பௌத்த நாடு என்பதைச் சுட்டும் வகையில் அமைந்திருந்தது. தேசியக் கொடியில் காணப்படும், செம்மஞ்சள் – பச்சை வர்ணங்கள் அகற்றப்பட்டிருந்தன. செம்மஞ்சள் – பச்சை வர்ணங்கள், தமிழர்களையும் – முஸ்லிம்களையும் குறிப்பவை. அதனாலேயே, செம்மஞ்சள் – பச்சை வர்ணங்கள் அகற்றப்பட்ட தேசியக் கொடிகளை, ராஜபக்ஷாக்களின் ஆதரவாளர்கள் பயன்படுத்தியிருந்தனர்.

ஒரு வகையில் தமிழ் பேசும் மக்களின் மீதான கோபத்தின் வெளிப்பாடாகவும் இதனைக் கருத முடியும். ஏனெனில், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தன்னைத் தோற்கடித்தவர்கள் தமிழ் பேசும் மக்களே என்று வெளிப்படையாக மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். இதனால், தமிழ் மக்களின் மீதான கோபத்தை வெளிக்காட்ட ராஜபக்ஷாக்களின் ஆதரவாளர்கள், இவ்வாறு தேசியக் கொடியில் மாற்றம் செய்திருக்கக் கூடும். தமிழ் மக்கள் மீது இவ்வளவு வெறுப்பில் இருப்பவர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் என்னாகும். தமிழ் பேசும் மக்களையே இல்லாமல் செய்து விடுவார்கள்.

இவை ஒரு புறம் இருக்க, கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தேசிய கீதத்தை தமிழில் பாடுவதையும் இதே கூட்டத்தினர்தான் எதிர்த்திருந்தனர். சிங்கள மொழியில் மாத்திரமே தேசிய கீதம் பாடப்பட வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தனர். அதற்கும் மேலாக, சிங்களப் பிர தேசங்களில் தமிழில் தேசிய கீதம் பாடுவதற்கு எதிர்ப்பு வெளியிட்டு மக்கள் மத்தியில், புதிய அரசுக்கு எதிராக சிங்கள மக்களைத் திசை திருப்பவும் முயன்றிருந்தார்கள்.

இந்த முயற்சிகளில் எதிர்பார்த்தளவு வெற்றி கிடைக்காத நிலையில், புதிதாக தேசியக் கொடியில் சிறுபான்மை இனங்களின் அடையாளங்களை அகற்றி, தமது இனவாதத்தை வெளிப்படுத்தியுள்ளனர். தேசியக் கொடியில் மாற்றங்கள் ஏற்படுத்துவது தண்டனைக்குரிய குற்றம். எனவே, இவ்வாறு தேசியக் கொடியில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ள ராஜபக்ஷாக்களின் ஆதரவாளர்களுக்கு எதிராக சட்டம் தனது கடமையைச் செய்ய முற்பட்டால், அதனை வைத்தே சிங்கள மக்களிடம் இனவாதத் தீயைப் பரப்பி தமது நாடாளுமன்றத் தேர்தல் வாக்கு வங்கியை நிரப்பிக் கொள்ள திட்டமிடுகின்றனர்.

ராஜபக்ஷாக்களின் ஆதரவாளர்கள் இவ்வாறு செய்வது ஒரு வகையில் தமிழர்களுக்கு நன்மையானதுதான். இலங்கையின் தேசியக் கொடியையோ, தேசிய கீதத்தையோ தமிழர்கள் இதுவரையில் விரும்பி ரசித்தது கிடையாது. தேசிய கீதத்தின் முதல் வரியைத் தவிர ஏனைய வரிகள் தமிழர்களில் 99 சதவீதத்தினருக்குத் தெரியாது. தேசியக் கொடியை, இலங்கையின் சுதந்திர தினத்துக்கு தமிழர்கள் எவரும் விரும்பி வாங்கிக் கட்டிக் கொள்வதில்லை.

தமிழ் மக்கள் தேசியக் கொடிக்கும் – தேசிய கீதத்துக்கும் கொடுக்கும் மரியாதை (?) அளவுதான்.

தேசியக் கொடியில் இருந்து சிறுபான்மை மக்களின் அடையாளங்களை அகற்றியதன்மூலம் தமிழர்களின் தனிநாட்டுக் கோரிக்கையை சிங்களப் பேரினவாதம் தாமாக முன்வந்து, அங்கீகரிக்கிறதா? தமிழர்களே பிரிந்து செல்லுங்கள் என்று கூறி அவர்கள் தனி வழி செல்வதற்கு சிங்களத்தலைமைகள் வழி சமைத்துக் கொடுக்கின்றனவா என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கடும் கண்டனங்களும் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு செய்ததன் மூலம் இலங்கைத் தமிழர்கள்மீது சர்வதேசத்தின் அக்கறை மேலும் அதிகரிப்பதற்கும், இலங்கை அரசு மீதான சர்வதேச அழுத்தம் மேலும் வலுப்பெறுவதற்றும் வழி வகை செய்யப்பட்டுள்ளதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகிறார்கள். இது சர்வதேச மட்டத்தில் தமிழ் மக்களுக்கு பல சாதகமான போக்குகளை ஏற்படுத்தும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் தமிழர்களுக்கு இதுவரை ஒரு உருப்படியான தீர்வுத் திட்டத்தை வழங்குவதற்கு சிங்கள அரசுகள் முன்வரவில்லை. கடந்த 30 ஆண்டுகாலமாகத் தொடர்ந்த போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, 5 ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனாலும் இனப் பிரச்சினை தீர்வுபற்றி தொடர்ந்தும் அக்கறையற்ற போக்கிலேயே அரசு உள்ளது. இது சர்வதேச மட்டத்தில் அரசுக்குப் பெரும் அபகீர்த்தியை உண்டு பண்ணியுள்ளது.

இந்த திலையில் ராஜபக்ஷாக்களே – அவர்களின் ஆதரவாளர்களே – தமிழ் மக்கள் மனதில் தனிநாட்டுக் கோரிக்கைக்கான சிந்தனைக்கு வித்திடும்போதுநாம் என்னதான் செய்ய முடியும்?

பத்தி எழுத்து

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர்களுக்கு தீர்வு கிட்டாதவரை நாட்டில் நல்லாட்சி சந்தேகமே....!

நான், பலம் வாய்ந்த தலைவன் அல்லன்; நான் பலவீனமானவன் என்று சிலர் என்னைக் கண்டிக்கின்றனர். அதற்கு அவர்கள் கூறும் காரணம் என்னவெனில், கடந்த நூறு நாள்களில் எனக்குள்ள நிறைவேற்று அதிகாரங்களை நான் பயன்படுத்தவில்லை என்பதாகும். ஆனால் --

ஜனாதிபதித் தேர்தலுக்கான எனது விஞ்ஞாபனத்தில் நான் கேட்டதற்கு இணங்க, அந்த அதிகாரங்களை நீக்குவதற்கே நீங்கள் வாக்களித்தீர்கள். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில், வரையறை அற்ற அதிகாரங்கள் மக்களுக்குப் பாதகமான செயல்களைப் புரிவதற்குத் தூண்டுதலாக அமைந்துள்ளன--

அதேவேளை, சுதந்திரக் கட்சி 1978 ஆம் ஆண்டிலிருந்தே நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு எதிர்ப்புக் காட்டி வந்தது. ஆனால் அதனைச் செயலாக்குவதில் தொடர்ந்து இடைஞ்சல்கள் ஏற்பட்டு வந்தன.

மறுபுறத்தில் --

1978 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட, விருப்பு வாக்கை உள்ளடக்கிய தேர்தல் முறைக்கும் சுதந்திரக்கட்சி எதிர்ப்புத் தெரிவித்து வந்தது. முற்போக்குச் சார்ந்த அரசியல் கட்சிகள் மட்டுமன்றி, 1999 ஆம் ஆண்டிலிருந்து ஐக்கிய தேசியக்கட்சியும் அதனை எதிர்க்கிறது --

அதனாலேயே, அரசமைப்புக்கான 19 ஆவது திருத்தச்சட்டத்தை இப்போது அறிமுகப்படுத்த விழைந்துள்ளோம் -- என்று நேற்று முன்தினம் ஆற்றிய உரையில் ஜனாதிபதி சுட்டிக்காட்டி உள்ளார்.

அத்தோடு ஜனாதிபதி தரிக்கவில்லை. பத்தொன்பதாவது திருத்தச் சட்ட மூலத்துக்கு, அது நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் சில தடைகள் மேலெழும்பியுள்ளன. இந்த வேளையில், பிரஸ்தாப திருத்தச் சட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்; அவ்வாறு செய்வார்கள் என்று நம்புகிறேன் -- என்றும் ஜனாதிபதி அழைப்பு விடுத்திருக்கிறார். தேர்தல் முறை மாற்றம் குறித்தும் ஜனாதிபதி சிலாகித்துக் கருத்து வெளியிட்டுள்ளார் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

மேலும், ஜனாதிபதி வியாழனன்று ஆற்றிய அரசின் 100 நாள்கள் வேலைத்திட்ட உரையில் அவர் பின்வரும் குறிப்புரைகளைத் தொட்டுக் காட்டியமையும் கவனத்தில் கொள்ளத்தக்கவையே.

நாட்டின் அரசியல், அனைத்துலகத்தொடர்பு, பொருளாதாரம் சார்ந்த துறைகளில், நலன் பயக்கும் பல புதிய திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

எமது நாடு தொடர்பிலான பல முக்கிய, பிரதான நாடுகள், ஐ.நா. சபை, மனித உரிமைகள் பேரவை பாதுகாப்புச் சபை என்பவற்றில் தப்பான, ஒவ்வாத நிலைப்பாடுகள் உள்ளூறிக் காணப்பட்டன --

-- ஆனால் நாம் கைக்கொண்ட தீர்க்கதரிசனமான கொள்கைகளால், செயற்பாடுகளால் அவை அகற்றப்பட்டன.

-- எமது நாடு குறித்த தவறான கருத்துக்களைக் களைந்தோம். அதன் பிரதிபலனாக அனைத்துலக மட்டத்திலும் நற்பெயரைத் தேடிக் கொள்ள முடிந்தது.

-- அதாவது எமது நாட்டின் விவகாரங்களில் நிலவிய எதிர்மறை சார்புச் (Negative) சூழ்நிலைகளைக் களைந்துவிட முடிந்தது.

ஜனாபதியின் கருத்துக்கள் மேற்காட்டப்பட்டவாறு இருந்தபோதிலும் --

இனப்பிரச்சினைக்கான, தமிழ் மக்களிடம் இருந்து பிரிக்க இயலாத உரிமைகளை வழங்குவதில், முந்தைய அரசு போன்றே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசும் நத்தை வேகத்தில் நகர்வது கண்டிக்கப்பட வேண்டும்.

உண்மையை, உள்ளதைச் சொல்லப்புகின் --

இனப்பிரச்சினைக்குக் காத்திரமான உகந்த தீர்வு காணப்படாத வரை --

நாட்டின் சகல இனமக்களையும் ஒன்றிணைக்க வல்ல செயற்றிட்டங்களை முன்னெடுக்காத வரை --

பிளவுகள், பிணக்குகள், குரோதங்கள் தறித்து வீழ்த்த முடியாத பருமனுக்கு ஊதிப் பெருத்தே ஆகும்.

தமது அரசுக்குச் சாதகமானவற்றை அவர் பெற்றுக் கொள்வதால் தமிழ் பேசும் மக்களுக்கு எதுவும் ஊறப்போவதில்லையே...!



மஹிந்த ஆட்சியில் தமிழ், முஸ்லிம் மக்கள் ஓர் இம்சை அரசின் கீழ் உள்ள அடிமைகளாக வாழ வேண்டியிருந்தது. இந்த அராஜகத்தை மாற்றியமைத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நான் அதிகாரங்களைப் பயன்படுத்தவில்லை. அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டு நாட்டின் ஒற்றுமைக்கான பாதையைத் திறந்து விட்டுள்ளார்.

# தீர்வுகளைக் கொண்டு வருமா பொதுத் தேர்தல்?

■ வந்தியத்தேவர்

அதிகாரங்கள் மத்தியில் குவிந்திருப்பது இந்த நாட்டுக்குப் பெரிய பிரச்சினையாகும். அவை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். நான் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்காக இந்தப் பதவிக்கு வரவில்லை. எனது கரங்களில் இருக்கும் அதிகாரங்களை வழங்குவதற்காகவே வந்துள்ளேன் என பெருந்தன்மையுடனும் மனித நேயத்துடனும் கூறியிருப்பது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஜனநாயகத் தன்மையை எடுத்துக் காட்டுகின்றது. தேர்தல் காலத்தில் அவர் அளித்த உறுதி மொழிகள் தமிழ் மக்களின் சில பிரச்சினைகளைக் குறைப்பதற்கு உதவிய பொழுதிலும், முக்கியமான பிரச்சினைக்கான தீர்வுகளில் இழுத்தடிப்புக் காணப்படுகின்றது.

இந்த நாட்டில் காணப்படும் தேசிய இனப் பிரச்சினைக்கு வடக்கு கிழக்கு இணைந்த சமஷ்டி அரசியலமைப்பே உகந்தது. சிறுபான்மை இனம் என்பது இரண்டாந்தரப் பிரசைகளால் உருவானதல்ல. அனைத்து மக்களும் சம உரிமை கொண்டவர்களாக இந்த நாட்டு மக்களாகக் கருதப்பட வேண்டியவர்களே. ஒன்றுபட்ட ஐக்கிய இலங்கையை விரும்புபவர்கள் இந்தக் கோட்பாட்டில் இருந்து விலக முடியாது. ஆயினும் தென் பகுதியில் உள்ள அரசியல்வாதிகள் தமது பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காக இனவாதத்தைக் கையில் எடுத்ததால் கடந்த அறுபது வருடங்களுக்கும் மேலாக சிறுபான்மை இனம் என முத்திரை குத்தப்பட்ட தமிழ், முஸ்லிம் மக்கள் தொடர்ந்தும் பெரும்பான்மையினரால் நசுக்கப் பட்டுக் கொண்டே இருப்பார்கள். கே.எம்.பி ராஜரட்ண சிறில் மத்தியூ போன்ற பேரினவாதிகளின் தமிழின எதிர்ப்பு உணர்வுகள் தற்போதும் தொடர்ந்து கொண்டிருப்பதாலேயே வடக்கு, கிழக்கு இணைந்த மாகாண அரசு இல்லாமற் போனது. இதற்குக் காரணம் மஹிந்த போன்ற இனவாதிகளே.

சிங்கள இனவாதமே வட்டுக் கோட்டையில் நடைபெற்ற மாநாட்டில் தமிழ்த் தலைவர்கள் தனிநாடு கோருகின்ற தீர்மானம் எடுக்கக் காரணமானது. தனிநாடு சாத்தியமாகுமா என்பது கேள்விக்குரியதாக இருந்தாலும் கூட வேறு வழியில்லாத நிலையில் அது தவிர்க்க முடியாததாக இருந்தது. மஹிந்த ஆட்சியில் தமிழ், முஸ்லிம் மக்கள் ஓர் இம்சை அரசின் கீழ் உள்ள அடிமைகளாக வாழ வேண்டியிருந்தது. இந்த அராஜகத்தை மாற்றியமைத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன; நான் அதிகாரங்களைப் பயன்படுத்தவில்லை. அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டும் எனக்குறிப்பிட்டு நாட்டின் ஒற்றுமைக்கான பாதையைத் திறந்து விட்டுள்ளார்.


அவர் திறந்திருக்கும் பாதை பிரச்சினைகளற்ற ஒன்றுபட்ட இலங்கையை நோக்கிச் செல்லுமா அல்லது கடந்த காலங்களைப் போல புதைகுழிகள்தான் இந்த நாட்டின் பாதையாகத் தொடருமா என்பதை அடுத்து வரும் பொதுத் தேர்தலின் பின்னரே தெரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும். மே மாதத்தில் பொதுத்தேர்தல் இடம் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதம[illegible]தவியைக் குறிவைத்து அந்தக் கதிரைக்காக கதிரைச் சின்னத்தில் போட்டியிடத் தயாராகின்றார். இலங்கை அரசியல் வரலாற்றில் குடும்ப ஆட்சி ஒன்றை நடைமுறைப்படுத்தி, ஆங்காங்கே பல்வேறு நவீன வசதிகள் கொண்ட மாளிகைகளை அமைத்ததுடன் தொடர்ந்தும் ஆட்சியில் இருந்து கொண்டு புருனே சுல்தான் ஹசன் அல்பால் கியாபின் ஆகத் தன்னையும் மாற்றிக் கொள்ளக் கனவு கண்டவர் இந்த மஹிந்த.

இந்தக் கனவுகள் நனவாகும் பட்சத்தில் இலங்கை எங்குபோகும் என்பதை தெரிந்து கொண்டும் கூட சுல்தானின் அடிமைகளாக தாங்களும் வாழ்ந்தால் போதும் என்ற நினைவுடன் இனவாதத்தைத் தூண்டிவிட்டுத் தமிழ் மக்களை ஒடுக்கி மீண்டும் பதவியைப் பிடிக்க தேர்தல் களத்தில் இறங்கவுள்ளனர் ஒரு பிரிவினர். கோவலனைக் கொண்டு வாருங்கள் என்பதற்குப் பதிலாக கொன்று விடுங்கள் என்ற ஒரு எழுத்துப் பிழைத் ததுதான் மதுரைக்கு வந்த சோத னையாகும். இனவாதிகளால் இந்த நாட்டின் சிறுபான்மையினருக்கும் என்ன பிரச்சினைகள் ஏற்படுமோ என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். எதிர்வரும் பொதுத் தேர்தல் புதிய அரசு ஒன்று ஏற்படுத்தப்படுவதற் காக நடத்தப்படவுள்ளது. அதன் பின்னரே முக்கிய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் குறித்து ஆராயப்படவுள்ளது எனக் கூறப்படுகின்றது. நாட்டின் ஸ்திரமற்ற நிலைக்கு உறுதியான நடவடிக்கை ஒன்றின் மூலமே இறுதித் தீர்வு காணமுடியும். இனவாதம் பேசிப் பேசியே இந்த நாடு சீர்குலையக் காரணமாயிருந்தவர்களால் வாக்காளப் பெருமக்கள் தொடர்ந்தும் தாங்கள் இருட்டறைக்குள்ளே காலத்தைக் கழிக்க வேண்டுமா. அன்றேல் வெளிச்சம் மிக்க விடியலில் திளைக்கவேண்டுமா என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்களாகின்றனர்.

இராமனும் ஆளலாம், இராவணனும் ஆளலாம், கூட வந்த குரங்கும் ஆளலாம் எனப் பொது மக்கள் ஏனோ தானோ என்றிருக்க முடியாது. நாடு எந்தப் பாதையைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு மக்களைச் சார்ந்ததே. இதுவரை மஹிந்தவுக்கு ஜால்ரா தட்டி பிரதமராக்குவேன் என்று சபதம் எடுத்தவர் இப்போது மைத்திரியை நாடி ஓடப் போவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அரசியலில் எதுவும் நடக்கலாம் என்பது உண்மைதான். மஹிந்தவின் அரசியல் எந்த வகையைச் சேர்ந்தது என்பது ஒன்றும் மக்கள் அறியாததல்ல. தேர்தலும் சந்தோஷத்துக்குரியதல்ல சிந்தனைக்குரியது. ஜனநாயகமா? எதேச்சாதிகாரமா? ஒன்றுபட்ட நாடா? பிளவுபட்ட தேசமா? பகைமையா? சகோதரத்துவமா. உலக வரை படத்தில் இலங்கை மதிப்பான இடம் பிடிக்க வேண்டுமா? இல்லையா? இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு தேர்தல் அமைய வேண்டும். அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும்.

சிங்கள மூலம்: மவ்பிம
தமிழில்: வீ.எஸ்.ரி

# இது, வெறும் ஆசையல்ல; பேராசை



1956ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் தலைமையிலான சுதந்திரக்கட்சி வெற்றியீட்டி அரசமைத்ததற்கு சில நாள்களின் பின்னர், அவ்வேளைய ஐ.தே.கட்சித் தலைவர் சேர்.ஜோன் கொத்தலாவலையைச் சந்தித்த ஜே.ஆர், கட்சி ஆதரவாளர்களை ஒன்று திரட்டி அரசுக்கு எதிராகச் செயற்படுவோம் என ஆலோசனையொன்றை முன்வைத்தார். சேர்.ஜோன் கொத்தலாவலையோ, 'மக்கள் எம்மை நிராகரித்துள்ளனர். புதிய அரசு ஆட்சியை முன்னெடுக்க நாம் கால அவகாசம் வழங்கியாக வேண்டும்' எனக்கூறி ஜே.ஆரின் யோசனையை நிராகரித்திருந்தார். சேர்.ஜோனின் பதிலால் திருப்தியடையாத ஜே.ஆர், அந்த வேளையில் அரசியலில் இருந்து தற்காலிகமாக ஒதுங்கியிருந்த டட்லி சேனநாயகாவிடம் சென்று தமது அந்தக் கோரிக்கையை வலியுறுத்தினார்.

'நாம் இப்போது கட்சி ஆதரவாளர்களைத் தூண்டிவிட்டால் அவர்கள் அரசுக்கு எதிராக அணி திரள்வர். ஆனால் அதனால் கட்சி ஏனைய பொது மக்களது அதிருப்திக்கு உள்ளாக நேரும். புதிதாகப் பதவியேற்ற அரசுக்கு நாம் கால அவகாசம் ஒன்றை வழங்குவதே நியாயமானது' என டட்லியும் கூட ஜே.ஆரின் அந்த ஆலோசனையை நிராகரித்தார்.

**பொருத்தமான வேளைவரை பொறுமை காத்தல் கோட்பாடு**

பின்னர் 1960 ஜூலை பொதுத் தேர்தலில் மீண்டும் ஐ.தே.கட்சி தோல்வியைத் தழுவியபோதிலும், மூன்று வருடங்கள்வரை அமைதி காத்த பின்னரே, ஐ.தே.கட்சி 1964 ஆம் ஆண்டில் சிறிமாவோ தலைமையிலான சுதந்திரக்கட்சி அரசைப் பதவியிலிருந்து அகற்றும் நடவடிக்கையை ஆரம்பித்தது.

1965 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் டட்லியின் தலைமையிலான ஏழு கூட்டுக்கட்சிகளின் அரசு பதவியேற்று மூன்று நான்கு ஆண்டுகளாக சிறிமாவோ தலைமையிலான சுதந்திரக்கட்சி, அரசுக்கு எதிராக பொது மக்களைக் கிழர்ந்தெழ வைக்கும் செயற்பாடுகள் எதிலும் ஈடுபடாது மௌனம் காத்து வந்து, கடைசியில் 1969 ஆம் ஆண்டில் இடது சாரிக் கட்சிகளையும் இணைத்துக் கூட்டணி அமைத்துக் கொண்டு ஐ.தே.கட்சி அரசுக்கு எதிராகச் செயற்பட ஆரம்பித்தது.

1970 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தோல்வி கண்ட பின்னரும் ஜே.ஆரும், டட்லியும் 1971 ஆம் ஆண்டின் ஜே.வி.பி.கிளர்ச்சியை முறியடிக்க சிறிமாவோவின் அரசுக்கு ஆதரவளித்து அமைதி காத்து வந்தனர். அந்தக் காலகட்டத்தில் அரசுக்கு எதிராக செயற்படுவதைத் தவிர்த்து வந்த ஜே.ஆரும், டட்லியும், 1974 ஆம் ஆண்டிலிருந்து அரசுக்கு எதிராக ஐ.தே.கட்சி ஆதரவாளர்களை உசுப்பிவிட்டு சத்தியாக்கிரக போராட்டத்தை முன்னெடுத்தனர்.

1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் ஜே.ஆரின் தலைமையிலான ஐ.தே.கட்சி அரசு அமைந்ததன் பின்னர், 1980 ஆம் ஆண்டிலேயே சுதந்திரக்கட்சி ஜே.ஆரின் அரசுக்கு எதிராக செயற்பட ஆரம்பித்தது. மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு அரச ஊழியர் களைத் தூண்டிவிட்டும், பின்னர் சிறிமாவோவின் பிரஜா உரிமையை ஜே.ஆர். அரசு பறித்தபோது கட்சி ஆதரவாளர்களை ஒன்று திரட்டியும் அரசுக்கு எதிரான செயற்பாடுகளை சுதந்திரக்கட்சி தீவிரப்படுத்தியது.

1982 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பு என்பவற்றில் சுதந்திரக்கட்சி தோல்வியைத் தழுவிய வேளையிலும், பண்டாரநாயக்க குடும்பத்தவர்களும், ராஜபக்ஷ குடும்பத்தவர்களும் தேசிய அரசொன்று குறித்து கருத்து வெளியிட்டு சூட்சுமமாக ஜே.ஆரது ஐ.தே.கட்சி அரசுக்கு ஆதரவு தெரிவித்தனர். பசில் ராஜபக்ஷ ஒரு படிமேற் சென்று அரசில் இணைந்து கொண்டார். 1983 ஆம் ஆண்டின் கறுப்பு ஜூலை கலவரத்தையடுத்து அரசுக்கு எதிராக மக்களைத் திசை திருப்ப சுதந்திரக்கட்சிக்குச் சந்தர்ப்பம் வாய்த்தபோதிலும் அது பொறுமைகாத்து 1987 ஆம் ஆண்டின் இந்திய இலங்கை ஒப்பந்தத்தைச் சாட்டாக வைத்தே ஜே.ஆர். அரசுக்கு எதிராக மக்களை வீதியில் இறங்கிப் போராட வைப்பித்தது.

1988 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பிரேமதாச வெற்றியீட்டியதன் பின்னர், ஜே.வி.பி. கிளர்ச்சியை அடக்கி, இளைஞர்களது பிரச்சினைக்குத் தீர்வுகாண பிரேமதாச கூட்டிய சர்வகட்சி மாநாட்டிலும் சிறிமாவோ பங்கேற்றார். 1991 இல் லலித் அத்துலத் முதலியும், காமினி திஸநாயகாவும், பிரேமதாஸவுக்கு எதிராக குற்றவியல் பிரேரணை கொண்டு வந்ததன் பின்னரே சுதந்திரக்கட்சி பிரேமதாச அரசுக்கு எதிராக பொதுமக்களை வீதியில் இறக்கிப் போராட வைப்பித்தது.

1994 ஆம் ஆண்டில், 17 ஆண்டுகளுக்குப் பின்னர் பொ.ஐ.முன்னணி அரசை ஸ்தாபித்து, அரசின் பிரதமர் பதவியை ஏற்ற சந்திரிகா, இலஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக் குழுவை நிறுவியவேளை எதிர்க் கட்சியான ஐ.தே.கட்சியும் அதற்கு ஆதரவு அளித்தது. அந்த வேளையில் எதிர்க்கட்சியில் இருந்த, முன்னாள் ஐ.தே.கட்சி அரசின் அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் பொருட்டே அந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டதென்பதைத் தெரிந்திருந்தும், ஐ.தே.கட்சி அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஏனெனில் அத்தகைய ஆணைக்குழுவொன்றை நியமிப்பதாக வாக்குறுதி வழங்கியே பொ.ஐ.முன்னணி தேர்தலில் வெற்றிபெற்றிருந்தது. அந்த வகையில் மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து ஐ.தே. கட்சி அந்த நடவடிக்கையை ஆதரித்தது. பின்னர் எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்பட்ட ரணில் விக்கிரமசிங்க கூட, சந்திரிகா அரசு நியமித்த அரசமைப்பில் மாற்றம் மேற்கொள்வது தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலும் பங்கேற்றார். ஒரேயொரு மேலதிக பெரும்பான்மையைக் கொண்டிருந்த சந்திரிகாவின் அரசைப் பதவியினின்றும் வீழ்த்த இரு தரப்புக்களையும் சேர்ந்த சிலர் திட்டம் தீட்டிய வேளையிலும், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ரணில், அரசின் மீது நாட்டு மக்கள் வெறுப்புக் கொள்ளும்வரை எதிர்க்கட்சியினர் பொறுமை காப்பதே நியாயமென வாதிட்டிருந்தார்.

1999 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா வெற்றியீட்டிய வேளையிலும், அரசமைப்பில் மாற்றம் மேற்கொள்வது தொடர்பான பேச்சுக்களில் ஐ.தே.கட்சி பங்கேற்றிருந்தது. ஆனால் குறித்த சட்ட மூலத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக சந்திரிகா, ஐ.தே.கட்சியின் ஒரு தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசு பக்கம் தாவச் செய்ய முயன்ற வேளையிலேயே ஐ.தே.கட்சி அரசுக்கு எதிராகக் களம்இறங்கியது. 2000 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் சுதந்திரக்கட்சி வெற்றியீட்டிய பின்னரும், ஐ.தே. கட்சி 2001 ஜூன் மாதம் வரையும் பொறுமை காத்து அமைதியாக இருந்து வந்தது. அதேவேளை நாட்டின் பொருளாதார நிலை படிப்படியாக நலிவடைந்து கடைசியில் சந்திரிகா அரசு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை இழக்க நேர்ந்தது.

2001 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் ரணிலின் தலைமையில் ஐ.தே.கட்சி அரசமைத்த வேளையிலும், சந்திரிகா அந்த அரசைப் பதவிவிலக்க 2004 ஆம் ஆண்டுவரை பொறுமையாகக் காத்திருந்தார்.

2005 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வெற்றியீட்டியதன் பின்னர், மஹிந்தவின் அரசைப் பதவி இழக்க வைக்க ரணில் 2008 ஆம் ஆண்டின் வரவு – செலவுத் திட்டம் வரை காத்திருந்தார். 2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் மஹிந்த வெற்றி பெற்றதன் பின்னர், மஹிந்தவின் அரசுக்கு எதிராக ஐ.தே.கட்சி வீதியில் இறங்கியமை திடீர் ஜனாதிபதிபத் தேர்தலை நடத்த மஹிந்த முடிவு செய்ததன் பின்னரே ஆகும். 1988 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பிரேமதாச வெற்றி பெற்றதையடுத்து அரசியலில் இருந்து ஒதுங்கிக்கொண்ட ஜே.ஆர் மீண்டும் அரசியலில் பிரவேசிக்கவே இல்லை. 2005 ஆம் ஆண்டில் மஹிந்த தேர்தலில் வெற்றி பெற்றதையடுத்து வெளிநாடு சென்ற சந்திரிகா பல ஆண்டுகள் காலம் வெளிநாட்டிலேயே காலம் கழித்தார்.

**மஹிந்தவுக்கு ஏன் இந்த அவசரம்?**

அந்த வகையில் இலங்கை அரசியல் அரங்கில் சேர்.ஜோன் கொத்தலாவல முதற்கொண்டு சந்திரிகா வரையிலான அரசியல் தலைவர்களுக்கு ஏற்படாதிருந்த அவசரம் மஹிந்தவுக்கும் அவரது தரப்பினருக்கும் தற்போது ஏற்பட்டுள்ளமைக்கான காரணம் தானென்ன? தமது சுகபோக வாழ்க்கையை இழக்க நேர்ந்தமை மற்றும் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பித்துக்கொள்ளும் தேவை என்பனவே அதற்கான காரணம்.

ஐ.தே.கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு மஹிந்தவால் அமைச்சர் பதவி வழங்கப்பட்டமை, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டுவதற்காக லஞ்சம் வழங்கியமைக்கு ஒப்பானதாகும் என்ற குற்றச்சாட்டின் மீது மஹிந்தவை லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராகுமாறு ஆணைக்குழு கோரியிருந்தது. இந்த நாட்டின் ஜனாதிபதி என்றவகையில் நாடாளுமன்ற உறுப்பினரொருவருக்கு அமைச்சர் பதவி வழங்கும் உரிமை தமக்குண்டு என மஹிந்த அதற்குக் காரணம் கூறியிருந்தார். ஆனால் இலங்கையில் எந்தவொரு ஜனாதிபதியும், ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக தேர்தலில் போட்டியிட வேட்பு மனுத்தாக்கல் செய்திருந்த நிலையில் எதிர்க்கட்சியையோ அரச தரப்பையோ சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரொருவருக்கு அமைச்சர் பதவி வழங்கியதில்லை. தேர்தல் சட்டத்தின்படி, தேர்தல் வேட்பாளரொருவர் வேட்பு மனுத் தாக்கல் செய்த நிலையில் வாக்குகளை ஈட்டும் நோக்கில் நிவாரண உதவிகளையோ அரச நியமனமொன்றையோ எவருக்கும் வழ்ங்குவது சட்ட மீறலாகும். 1981 ஆம் ஆண்டின் இலக்கம் 15 கொண்ட ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சட்டத்தின் 79 (ஆ) பிரிவிலும் குறித்த செயற்பாடு சட்டத்துக்கு முரணானதொன்றெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வகையில், லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழு மஹிந்தவிடமிருந்து வாக்குமூலம் பெறுவதில் தவறேதும் இல்லை. அவர் லஞ்ச ஊழல் சட்டத்துக்கு மட்டுமன்றி, நாட்டின் தேர்தல்கள் சட்டத்துக்கும் கீழ்ப்படிய வேண்டிய இந்த நாட்டின் பிரஜையாவார். நாட்டின் பிரதமர் பதவியை முன்னர் வகித்த ரணில், பின்னர் எதிர்கட்சித் தலைவராக இருந்ததொரு சந்தர்ப்பத்தில் பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவால் நீதிமன்றத்தில் சமுகமளிக்குமாறு கோரப்பட்ட வேளையில் அதனை ஏற்று அவர் அச்சமேதுமின்றி நீதிமன்றில் முன்னிலையானார்.

ஆனால் இன்று லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழு முன்பாக முன்னிலையாவதற்கு மஹிந்த அஞ்சுவதேன்? தாம் தவறிழைத்துள்ளதாக அவர் உணர்வதே அதற்குக் காரணமாக இருக்குமோ தெரியவில்லை. அவரது தரப்பினர் நாடாளுமன்றத்தினுள் குழப்பம் விளைவித்து மஹிந்தவைக் காப்பாற்ற முயன்றமை, தமக்கும் எதிரான குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பித்துக் கொள்ளும் நோக்குடனேயாகும். மைத்திரிபால அரசின் 100 நாள்கள் நிறைவுற்றுள்ள இன்றைய நிலையில், அவருக்கு– அவரது அரசுக்கு ஆதரவாக வாக்களித்தோர் தேர்தல் வேளையில் அவர் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாது - குற்றமிழைத்தோரைப் பாதுகாக்கும் வகையில் செய்றபடுவதாகக் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

**அச்சமே அவசரத்துக்கான காரணம்**

நாம் குற்றம் இழைத்திருந்தால் அதனை நிரூபித்து எம்மைக் கைது செய்து தண்டியுங்கள் என கடந்த நூறு நாள்களாக மஹிந்தவும் அவரது தரப்பினரும் செல்லும் இடமெல்லாம் சவால் விடுத்து வந்தனர். தற்போது மஹிந்த விசாரணைக்கென அழைக்கப்பட்டதும் அதற்கு எதிர்ப்புத்தெரிவித்துக் கூப்பாடு போடுவதிலிருந்து மஹிந்தவும் அவரது தரப்பினரும் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவது குறித்து அச்சமடைந்துள்ளனரென நாட்டு மக்கள் கருதுகின்றனர். இந்த வேளையில் பஸில் நாடு திரும்பியிருப்பது குற்றவாளிகளைத் தண்டிக்க முயலும் அரசை அகற்றிவிட்டு மீண்டும் குடும்ப அரசியலை நிலை நிறுத்தும் நோக்கிலேயே என மக்கள் கருதுகின்றனர். மஹிந்தவை விசாரணைக்கு அழைத்தமைக்கு எதிரான நாடாளுமன்றப் போராட்டத்தை முன்னின்று வழிநடத்தியவர் மஹிந்தவினது மகன் நாமல் ராஜபக்ஷவே. அதே வேளை கோத்தபாய ராஜபக்ஷவோ, எதிர்வரும் பொதுத்தேர்தல் மூலம் மஹிந்தவை நாட்டின் பிரதமர் ஆக்கவேண்டுமெனக் கூறுகிறார்.

மஹிந்த குடும்பத்தினரின் அண்மைய செயற்பாடுகளையும் கருத்து வெளிப்பாடுகளையும் நோக்கும் போது, சுனில் எதிரிசிங்க என்ற பிரபல சிங்களப் பாடகரது பாடலொன்றின் ஒரு வரியே இதற்குப் பொருத்தமானதாக இருப்பதாக எண்ணத் தோன்றுகிறது. இது, வெறும் ஆசையல்ல; பேராசை என்பதே அந்த பாடல் வரி.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 3 | 9 | 8 | 1 | 7 | 2 | 4 |
| 9 | 4 | 1 | 7 | 2 | 6 | 5 | 3 | 8 |
| 2 | 8 | 7 | 4 | 3 | 5 | 1 | 9 | 6 |
| 3 | 1 | 6 | 5 | 7 | 9 | 8 | 4 | 2 |
| 8 | 2 | 5 | 1 | 4 | 3 | 6 | 7 | 9 |
| 4 | 7 | 9 | 2 | 6 | 8 | 3 | 1 | 5 |
| 1 | 5 | 8 | 3 | 9 | 2 | 4 | 6 | 7 |
| 6 | 9 | 4 | 8 | 1 | 7 | 2 | 5 | 3 |
| 7 | 3 | 2 | 6 | 5 | 4 | 9 | 8 | 1 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | 2 |
| 2 | 5 | | | 8 | | | | 6 |
| 8 | | | | 1 | 7 | | 4 | 9 |
| 1 | | | 9 | 3 | | 8 | 5 | 7 |
| | | 5 | 4 | | 2 | 6 | | |
| 7 | 3 | 6 | | 5 | 8 | | | 4 |
| 5 | 4 | | 6 | 2 | | | | 8 |
| 6 | | | | 4 | | | 3 | 5 |
| 3 | | | | | | | | |

## நாளை

சித்திரை—13
ஞாயிற்றுக்கிழமை
26.04.2015

திதி: அட்டமி மு.இ.09.42 வரை
நட்சத்திரம்: பூசம் மு.ப.06.59 வரை
சுபநேரம்: 08.59-10.29வரை
இராகுகாலம்: 04.29-05.59 வரை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல் களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் |
|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | — | 30 | 30 | 30 | 60 | 40 |
| கத்தரி | 60 | 50 | 60 | 60 | 40 | 60 | 50 |
| கரட் | 100 | 100 | 120 | 100 | 120 | 120 | 140 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 50 | 40 | 50 | 45 |
| பயிற்றை | 50 | 60 | 60—80 | 80 | 70 | 40 | 80 |
| பாகல் | 80 | 80 | 120 | 80 | 70 | 80 | 120 |
| கருணைக்கிழங்கு | 80 | — | — | 80 | 60 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 90 | 80 | 80 | 90 | 100 |
| சி.வெங்காயம் | 60 | 100 | 100 | 60 | 80 | 100 | 80 |
| பூசணி | 40 | 30 | 40 | 30 | 30 | 40 | 40 |
| தக்காளி | 30 | 50 | 40 | 50 | 40 | 120 | 60 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 40 | 60 | 70 | 60 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 40 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 20 | — | 30 | 30 | 30 | 40 | 15 |
| பச்சை மிளகாய் | 25 | 50 | 40 | 40 | 30 | 80 | 40 |
| புடோல் | 40 | 50 | 40 | 40 | 40 | 30 | 60 |
| கோவா | 30 | 40 | 40 | 30 | 30 | 20 | 40 |
| வெண்டி | 50 | 50 | 30—60 | 60 | 80 | 40 | 60 |
| போஞ்சி | 150 | 120 | 120 | 120 | 120 | 160 | 120 |
| லீக்ஸ் | 240 | 140 | 200 | 120 | 150 | 140 | 125 |
| தேங்காய் | 60 | 30 | 60 | 60 | 60 | 90 | 35 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 100 | 80 | 80 | 160 | 80 |
| தேசிக்காய் | 200 | 140 | 120—200 | 140 | 160 | 60 | 120—160 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 20 | 15—20 |
| கறிமிளகாய் | 80 | 80 | 70 — 100 | 60 | 60 | 120 | 80—100 |
| இராசவள்ளி | 120 | — | — | 100 | 80 | — | 120 — 180 |

# கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | பருத்தித் துறை | மாதகல் |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 700 | 550 |
| நண்டு | 350 | 400 | 300 | – |
| கணவாய் | 550 | 600 | 500 | 450 |
| பாரை | 550 | 400 | 400 | 370 |
| சுறா | 500 | 600 | 700 | 450 |
| சீலா | 300 | 400 | 400 | 350 |
| விளை | 600 | 400 | 500 | 350 |
| முரல் | 250 | 400 | 350 | 300 |
| கும்பிளா | 350 | 300 | 400 | – |
| கிழாக்கன் | 500 | 600 | 600 | 350 |
| ஒரா | 350 | 350 | – | 300 |
| திரளி | 200 | 250 | 250 | – |
| நகரை | 200 | 300 | 300 | – |
| சூடை | 150 | 150 | 130 | 60 |
| ஒட்டி | 250 | 250 | 200 | – |
| திருக்கை | 250 | 300 | 300 | 140 |
| பாலை | 350 | 300 | 400 | – |
| வாழை | 100 | 150 | 350 | 200 |
| கொய் | 80 | 150 | 100 | – |
| மதனம் | 150 | 250 | 300 | 250 |

# சோர்வடையும் பெண்களா நீங்கள்?



வெளித் தோற்றத்தின் மேல் அதீத அக் கறை காட்டுவதில் பெண்கள் மிகவும் கவன மாக இருப்பார்கள். அதனால் கொஞ்சம் உடல் எடை கூடினாலும் களைப்பாக இருக்கிறேன் என எதையாவது பின்பற்றத் தொடங்கிவிடு வார்கள். பெண்கள் உணவுக்கட்டுப்பாடு என்ற பெயரில் தங்களுக்கே தெரியாமல் பல தவறுகளை செய்கின்றனர். அளவுக்கு அதிகமாக எடுத்துக் கொள்ளப்படும் எந்த ஓர் உணவும் உங்கள் உடலுக்கு கெடுதல் தரும் என்பதை பெண்கள் அறிந்துக் கொள்ள வேண்டும். அதேபோல உணவுக் கட்டுப்பாடு என்ற பெயரில் உங்கள் உடலிற்குத் தேவை யான உணவுகளை அறவே ஒதுக்குவதும் பக்க விளைவுகளை ஏற்படுத்தும்.

ஒலிவ் எண்ணெய் உடல் நலத்துக்கு நல்லது தான். ஆனால் நிறைய பெண்கள் தங்களது உணவுக் கட்டுப்பாட்டில் அளவுக்கு அதிகமாக ஒலிவ் எண்ணெயை சேர்த்துக் கொள் கின்றனர். இதனால் உடல் எடை குறையாது. அதிகம் தான் ஆகும். ஒலிவ் எண்ணெயை 1 டீஸ் பூன் அளவில் மட்டுமே பயன்படுத்த வேண்டும். அதிகமாக பயன்படுத்த வேண்டாம். சில பெண்கள் தங்களது உணவுக் கட்டுப்பாட்டில் பெரும்பாலான சத்துமிக்க பழங்களையும், அதில் கொழுப்புச்சத்து இருக்கிறது என தவிர்த்து விடுகின்றனர். பழங்களில் உள்ள அனைத்து சத்துகளும் உடலுக்கு தேவைப்படுகிறது என்பதை பெண்கள் உணர வேண்டும். அப்பிள், திராட்சை மற்றும் தர்பூசணி போன்ற உணவுகள் உணவுக் கட்டுப்பாட்டிற்கும் நல்லது, உங்கள் உடல் நலத்திற் கும் நல்லது.

குறைந்த உணவு, நிறைய உடற்பயிற்சி பெண்கள் தங்களது உணவுக் கட்டுப்பாட்டில் செய்யும் மிகப் பெரிய தவறு, உடல் எடையை குறைக்கிறேன் என்று குறைவாக உணவு சாப்பிடுவது மற்றும் அதிகமாக உடற்பயிற்சி மேற்கொள்வது. உடற்பயிற்சி மேற்கொண்டால் அதற்கு ஏற்ப உணவை சாப்பிடுவதும் அவசியம். குறைவான உணவை உட்கொண்டு அதிக உடற்பயிற்சி செய்தால், வாந்தி, மயக்கம் ஏற்படும்.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### பொதுநலம் பேணுங்கள்

பெற்றோரை மகிழ்விக்கும் பிள்ளைகளைக் கண்டு கடவுள் மகிழ்ச்சி கொள்கிறார். அன்பினால் செய்யப்படும் செயல்கள், ஆனந்தத்தைக் கொண்டு வந்தே தீரும். இன்பத்தை விட துன்பமே சிறந்த ஆசிரியராக நமக்குப் பாடம் கற்பிக்கிறது. அறிவோடு ஒன்றி விடுங்கள். பிழைகளை அகற்ற இதுவே அறிவியலுக்கு ஒத்த முடிவாகும்.

தன்னலத்தை ஒழியுங்கள். மனதில் மகிழ்ச்சி ஊற்றெடுப்பதை உணர்வீர்கள். பெற்றுக் கொள்பவனை விட, பிறருக்கு கொடுப்பவனே உண்மையில் பேறு பெற்றவன்.

# மன்மத வருட பலன்கள்

## விருச்சிகம்



இந்த ஆண்டில் உடல் சோர்வு முற்றிலும் மறையும். வருமானம் சீராகவே இருக்கும் என்றாலும் பேராசைக்கு இடம் கொடுக்காமல் பணியாற்றவும். நண்பர்கள்போல் பழகும் விரோதிகளிடம் கவனமாக இருக்கவும். அவர்கள் உங்களுக்கு எதிராகச் சில சமயம் சதி வேலைகளில் ஈடுபடலாம். ஆனாலும் கலங்க வேண்டாம். துர்க்கை அன்னையைத் தொடர்ந்து வழிபட்டால், எதிரிகள் உதிரிகளாகித் தொலைந்து போவார்கள். யாராக இருப்பினும் நன்கு யோசித்த பிறகே வாக்குக் கொடுக்கவும். கடன் தொல்லைகள் ஏற்படாது. தர்ம காரியங்களைச் செய்வீர்கள். தடங்கல்களைத் தாண்டி வெற்றியடைவதில் ஐயமேயில்லை. அனுகூலமில்லாத விடயங்களையும் உங்களுக்குச் சாதகமாக மாற்றிக்கொள்ளும் புத்தி சாதுரியம் ஏற்படும். இந்த ஆண்டு கடினமான சூழ் நிலைகளிலும் உங்களின் தனித் தன்மையை இழக்க மாட்டீர்கள். அடுத்தவர்கள் உங்களுக்கு அறிவுரை கூறும்படி நடந்து கொள்ள மாட்டீர்கள்.

நீண்ட தூரப் பயணங்களால் நன்மை உண்டாகும். கடுமையாக உழைத்துச் செய்யும் காரியங்களில் வெற்றிவாகை நிச்சயம். தார்மிகச் சிந்தனைகளை மேலோங்கச் செய்வார். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பெரியோர்களைச் சந்தித்து அவர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். உங்கள் உழைப்பு வீண் போகாது. இது நாள் வரை உடலில் இருந்த சோர்வும் அயர்ச்சியும் மறையும். தேக ஆரோக்கியம் சீராக மாறும். குடும்பத்தில் மருத்துவச்செலவுகள் குறையும். தாயார் வழியில் இருந்துவந்த மன ஸ்தாபங்கள் மறைந்து சுமுகமான உறவு உண்டாகும்.



குடும்பத்திலும், உற்றார் உறவினர்களிடமும் உங்கள் செல்வாக்கு உயரும். உங்கள் செயல்களைப் புதிய உத்வேகத்துடன் செய்து முடிக்க வழி பிறக்கும். திட்டங்களைச் சரியாகத் தீட்டி அவைகளைப் படிப்படியாக, வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள். புதிய தொழில் களைத் தொடங்குவீர்கள். உங்கள் நண்பர்கள் உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பார்கள். பெரியோர்களின் ஆதரவு எப்போது மிருக்கும். ஓய்வு நேரத்தில் கேளிக்கைகளில் ஈடுபட்டு மகிழவும் சந்தர்ப் பங்கள் அமையும். தன்னலம் பார்க்காமல் உழைத்துப் புகழடை வீர்கள். உங்கள் உடலுழைப்புக்கு மேல் பன்மடங்கு லாபம் கிடைக்கும். கல்வி, கேள்விகளிலும் சிறந்து விளங்குவீர்கள்.

**உத்தியோகத்தர்களுக்கு**

பயணங்களால் அனுகூலமான திருப்பங்களைக் காண்பீர்கள். சிலர், விரும்பிய வெளியூருக்கு மாற்றலாகிச் செல்வார்கள். மேலதிகாரிகள் சற்று பாராமுகமாகவே நடந்து கொண்டாலும் தொல்லைகள் கொடுக்க மாட்டார்கள்; ஆனால் சக ஊழியர்கள் உங்களுக்குப் பக்கபலமாக இருப்பார்கள். உரிய நேரத்தில் பதவி உயர்வு கிடைக்கும். சோம்பலுக்கு இடம் கொடுக்காமல் உங்கள் வேலைகளைத் திட்டமிட்டு சரியாகச் செய்வது அவசியம்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையினர் எதிர்பார்த்த வாய்ப்புகளைப் பெறுவீர்கள். உங்கள் பெயரும், புகழும் உயரும். சக கலைஞர்களின் நன்மதிப்பைப் பெறுவீர்கள்.

**பெண்களுக்கு**

கணவரின் பாராட்டுகளை எளிதில் அடைவீர்கள். புதிதாக ஆடை, ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். இல்லத்தில் நிம்மதியைக் காண்பீர்கள். சுப காரியங்களில் கலந்து கொள்வீர்கள். உடல் நலத்தில் மட்டும் சற்று கவனமாகவே இருக்கவும்.

**மாணவர்களுக்கு**

பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும். அவர்களால் உங்கள் எதிர்காலத் திட்டங்கள் எளிதில் நிறைவேறும். சக மாணவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவீர்கள். அவர்களிடம் அநாவசிய சண்டை சச்சரவுகளைத் தவிர்க்கவும். உங்கள் உடல் நலம் நன்றாக இருக்கும். தினமும் உடற்பயிற்சிகளைச் செய்தால் மேலும் உடல் வலிமை பெறலாம்.

அதிர்ஷ்ட எண்கள்: 1, 3, 7, 9
அதிர்ஷ்ட திசைகள்: மேற்கு, தெற்கு
அதிர்ஷ்ட கிழமைகள்: திங்கள், புதன், வெள்ளி
அதிர்ஷ்ட மாதங்கள்: ஆடி, கார்த்திகை, பங்குனி
கவனமாக இருக்க வேண்டிய மாதங்கள்: ஆனி, ஐப்பசி

# பெண்களுக்கு பிடிக்காத ஆண்கள்

இந்த உலகில் வித்தியாசமான குணங்கள் பலரிடம் இருக்கும். எப்படி நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் உள்ளதோ, அதே போன்று ஒவ்வொருவரிடமும் நல்ல மற்றும் கெட்ட குணங்களும் இருக்கும். இது இயற்கையான ஒன்று தான். ஆனால் ஒருசில விடயங்களில் ஒருவருக்கு நல்லதாக தோன்றுவது, மற்றவர்களுக்கு கெட்டதாகத் தான் தோன்றும். ஏனெனில் அனைவரின் மனநிலையும் ஒரே மாதிரியாக இருக்காது. இந்த நிலையில் நிறைய பேரிடம் பழகியிருப்போம். அவர்களுள் ஒருசிலரைப் பிடிக்காது. எப்படி ஆண்களுக்கு ஒருசில குணங்கள் உள்ள பெண்களை பிடிக்காது. உதாரணமாக, ஆண்களுக்கு திமிர் அதிகம் உள்ள பெண்களைப் பார்த்தால், பிடிக்காது. அதே போன்று பெண்களுக்கும் சில குணங்கள் உள்ள ஆண்களைப் பிடிக்காது. அத்தகைய ஆண்களைப் பார்த்தால், பொறுத்துக் கொள்ள முடியாத அளவில் கோபம் மற்றும் வெறுப்பு வரும். பெண்களுக்கு ஆண்கள் மீது அளவுக்கு அதிகமான பாசம் வருவதற்கு காரணம் ஆண்களது ஒருசில குணங்கள் தான். அதே சமயம் வெறுப்பு வருவதும் குணங்களால் தான். இப்போது எந்த மாதிரியான குணங்களைக் கொண்ட ஆண்களைப் பெண்களுக்குப் பிடிக்காது என்று பட்டியலிட்டுள்ளோம். அதைப் பார்ப்போமா!!!

**அசிங்கமாகப் பேசுபவர்கள்**

பெண்கள் இந்தக் குணம் உள்ள ஆண்களிடம் பழக விரும்பமாட்டார்கள். ஏனெனில் இந்தக் குணம் இருந்தால், எந்த ஒரு சிறு விடயத்துக்குத் திட்டும் போதும், கெட்ட வார்த்தையைப் பயன்படுத்துவார்கள். எனவே இத்தகைய கெட்ட வார்த்தைகளைப் பயன்படுத்தும் ஆண்களுடன் உறவுமுறையைத் தொடர்வதைத் தவிர்ப்பார்கள்.

**பல பெண்களுடன் தொடர்புடையவர்கள்**

இந்த மாதிரியான குணமுள்ள ஆண்களுடன் நட்பு கொள்வதையும் வெறுப்பார்கள். ஏனெனில் இந்தக் குணமுள்ள ஆண்கள் வெறும் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகத் தான் பழகுகிறார்கள் என்ற கருத்து பெண்களின் மனதில் இருப்பதாலேயே.

**போட்டி போடும் ஆண்கள்**

ஆண்களுக்கு பெண்கள் நிகராக முடியாது. இத்தகைய குணமுள்ள ஆண்களால் பெண்களைக் கவர முடியாது. மேலும் இந்தக் குணமுள்ள ஆண்களிடம் பழகுவதை அறவே தவிர்ப்பார்கள்.



**தனிமையிலேயே இருப்பவர்கள்**

தனிமயில் இருப்பது, இருவரும் நன்கு மனம் விட்டு பேச நன்றாக இருக்கும் தான். அதற்காக எப்போதுமே இருவர் மட்டும் தான் எங்கும் செல்ல வேண்டும், இருக்க வேண்டும் என்று நினைத்தால், அது மிகவும் கொடுமையாக இருக்கும். எனவே இத்தகைய குணமுள்ள ஆண்களையும் பெண்களுக்குப் பிடிக்காது. ஆகவே சில இடங்களுக்கு செல்லும் போது நண்பர்களுடனும் செல்ல வேண்டும்.

**சுயநலவாதி ஆண்கள்**

ஆண்களுள் எவர் மிகவும் சுயநலத்துடன் இருக்கிறார்களோ, அத்தகயைவர் களுக்கு காதல் நிலைக்காது. ஏனெனில் இத்தகையவர்கள் எப்போதும் தன்னைப் பற்றியே நினைத்தால், எந்தப் பெண்ணுக்கு தான் பிடிக்கும்?




**சோம்பேறித்தனம் கொண்டவர்கள்**

ஆண்களுள் எவர் மிகவும் சோம்பேறித்தனத்துடனும், எதிலும் ஒரு ஆர்வமின்றியும் இருக்கின்றார்களோ, அத்தகையவர்களால் பெண்களை சுத்தமாக ஈர்க்க முடியாது.

**சந்தேகம் கொண்டவர்கள்**

உறவுமுறை நீண்ட நாள்கள் நிலைக்க வேண்டுமெனில் சந்தேகம் இருக்கவே கூடாது. அது உறவு முறையை அழிப்பதோடு, வெறுப்பைச் சம்பாதிக்கும். எனவே இந்த குணமுள்ள ஆண்களையும் பெண்களுக்கு சுத்தமாகப் பிடிக்காது.

**வேலையே முக்கியம் என நினைப்பவர்கள்**

வாழ்க்கையை சிறப்பாக நடத்த வேலைக்குச் செல்ல வேண்டும் தான். ஆனால் அதற்காக எப்போதுமே வேலையைப் பற்றி எண்ணிக் கொண்டு, துணையுடன் சந்தோஷமாகச் சிறிது நேரம் கூடச் செலவழிக்காமல் இருந்தால், அத்தகைய ஆண்களையும் பெண்கள் வெறுப்பார்கள்.



**குடிப்பழக்கமுள்ளவர்கள்**

பெண்களுக்கு குடிகாரர்களைப் பிடிக்காது. அதற்காக முற்றிலும் பிடிக்காது என்று சொல்ல முடியாது. ஆனால் தினமும் குடித்தால், அத்தகையவர்களுடன் வாழ்நாள் முழுவதும் சந்தோஷமாக வாழ முடியாது என்பதால் தான்.

# வர்ணம் தீட்டலாம் வாங்க...




## ஆந்தைகள்



ஆந்தைகள் பெரும்பாலும் தனித்து வாழக் கூடிய பறவை இனமாகும். இரவில் சுறு சுறுப்புடன் காணப்படும் ஆந்தைகள், மாமிசங்களை உண்ணக் கூடியவை. ஆந்தைக்கு தூரப் பார்வை இருப்ப தால், அருகில் உள்ளவற்றை தெளிவாக பார்க்க முடியாது.

அதேவேளையில் கேட்கும் திறன் அதிகம் கொண்டவை. தமது தலையை 270 பாகை வரை சுழற்றக்கூடியவை. இவை காடுகள், பாலைவனங்கள், குகைகள், பாழடைந்த கட்டடங்கள், பாறை இடுக்குகள் போன்றவற்றில் வாழ்கின் றன. ஆந்தைகள் அவற்றின் இனத்தைப் பொறுத்து நீளம் 6லிருந்து 28 அங்குலம் வரையிலும், 1 கிலோ முதல் 4 கிலோ வரையிலும் காணப்படுகின்றன. பெண் ஆந்தைகள், ஆண் ஆந்தைகளைவிடப் பெரியதாக இருக்கும். இவற்றின் இறகுகள் மிக மென்மையாக இருப்பதால், இரவு முழுவதும் துளியளவு கூட சத்தமில்லாமல் பறக்கும் திறன் கொண்டவை. இதனால் இவை எளிதில் இரையை வேட்டையாடும் ஆற்றல் கொண்டன. வேளாண்மைக்குத் தீங்கு செய்யும் எலி, வெட்டுக்கிளி, புழு பூச்சிகள் போன்றவற்றை உண்பதால், ஆந்தைகள் விவசாயிகளுக்கு நண்பனாகவும் திகழ்கின்றன. சாப்பிட்ட உணவுகளில் இருந்து சத்துப்பொருட்களை எடுத்துக்கொண்டு மீதமுள்ள எலும்புத் துண்டு, நகம் போன்றவற்றை வெளியே கக்கிவிடும் சிறப்பு ஆந்தைகளுக்கு உண்டு. ஆந்தைகளின் சராசரி ஆயுட் காலம் 20 ஆண்டுகள்.

## வெட்டுக்கிளியும் ஆந்தையும்



அது ஒரு அடர்ந்த காடு. அந்த காட்டில் ஒரு இரக்கமற்ற ஆந்தை ஒன்று வாழ்ந்து வந்தது. ஒரு நாள் மதிய வேளையில் மரப்பொந்து ஒன்றில் அந்த ஆந்தை தூங்கிக் கொண்டிருந்தது.

அந்த நேரத்தில் புல்தரையின் கீழே வெட்டுக்கிளி ஒன்று பாட்டுப் பாடிக்கொண்டே வந்தது. வெட்டுக்கிளியின் அந்த பாட்டுச்சத்தம் ஆந்தையின் தூக்கத்தைக் கெடுத்தது. உடனே ஆந்தை அந்த வெட்டுக்கிளியிடம், 'கொஞ்சம் பாடுவதை நிறுத்து' என்று கேட்டது. வெட்டுக்கிளியோ அதைக் கேட்காமல் அந்த மரத்தின் கீழே பாடிக்கொண்டிருந்தது. மேலும் ஆந்தையைப் பார்த்து, 'நீ கண் தெரியாத குருட்டு பறவை! பகலில் வருவது கிடையாது, எல்லாரும் இரவில் தூங்கிய பின்புதான் நீ வெளியே வருவாய்' என்று திட்டியது. தினமும் ஒரே மாதிரியான உணவைச் சாபிட்டுவந்த ஆந்தைக்கு அந்த வெட்டுக்கிளியைச் சாப்பிட வேண்டும் என்ற ஆசை வந்தது. தந்திரத்தால்தான் வெட்டுக்கிளியை அடக்க வேண்டும் என்று தீர்மானித்து. 'நண்பனே, என்னைத் தூங்கவிடாமல் நீ செய்ய விரும்பினால் செய்துவிட்டுப் போ. ஆனால் விழித்துக் கொண்டிருபவர் களுக்கு இனிமையாய் இருக்கும் பொருட்டு உன் சங்கீதம் உபயோகப்படட்டுமே! உன் சங்கீதம் இனிமையானது. அதை இன்னும் மெருகேற்ற என்னிடம் ஓர் அமிர்தம் இருக்கிறது. அந்த அமிர்தத்தில் இரண்டு துளி நீ சாப்பிட்டால் போதும். உன் குரலும் அமிர்தமாய் விடும். மேலே வா தருகிறேன்', என்றது ஆந்தை. ஆந்தையின் நயவஞ்சகப் பேச்சைக் கேட்டு மயங்கிய வெட்டுக்கிளி மரத்தில் ஏறி ஆந்தையின் அருகில் சென்றது. அருகில் வந்த வெட்டுக்கிளியை ஆந்தை பிடித்து நசுக்கிக் கொன்றது. பயமுறுத்தலைவிட நயவஞ்சகம் பலமானது.

## நம்பினால் நம்புங்கள்!

நெப்டியூன் கோளில் நாம் ஓராண்டு வாழ முடிந்தால், பூமியில் 165 ஆண்டுகள் வாழ்வதற்குச் சமம்!

நீல் ஆர்ம்ஸ்ட்ராங் தனது 'ஸ்பேஸ் பூட்ஸ்' காலணியை நிலவிலேயே விட்டு வந்து விட்டார்!

முதல் மைக்ரோவேவ் அவன் சமையல் சாதனம் ரெப்ரிஜிரேட்டர் அளவு பெரிதாக இருந்தது.

சில வகை சிலந்திகள் தங்கள் சொந்த வலையையே தின்று விடுகின்றன.

டைனோசர்களுக்கு முன்பே இந்தப்பூமியில் ஆமைகள் வாழ்ந்திருக்கின்றன.

இத்தாலியிலுள்ள ஒரு எரிமலை 2 ஆயிரம் ஆண்டுகளாக புகைந்துகொண்டே இருக்கிறது.


நீங்கள் ஒரு மின்னலைப் பார்க்கும்போது, அது மணிக்கு 365 மில்லியன் கிலோமீற்றர் வேகத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறது.

1415ஆம் ஆண்டிலேயே வாலன்டைன் இருந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன. அவரே மூத்த வாலன்டைன்!

கோலா விலங்குகள் ஒரு நாளில் 4 மணி நேரம் மட்டுமே விழித்திருக்கின்றன.

## வெற்றியின் இரகசியம்

வெற்றி ! வெற்றி ' பலர் சொல்கிறார்களே! அதை அடைய வேண்டுமென்ற ஆசை இருக்கின்றது . ஆனால் வழி தான் தெரியவில்லை என்று பலர் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள் ! அதற்காக அந்த வெற்றியே உங்களுக்கு வழியை காட்டுவதோடு அது தன்னுடைய அனுபவத்தையும் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறது. நான் தான் வெற்றி! வெற்றி பெறுவது என்பது சற்றுக் கடினம் தான். அதை நீ பார்க்கும் அல்லது சந்தித்த கஷ்டங்கள் பிரச்சினைகள் மூலம் எளிமையாக விளக்குகிறேன். முத லில் இந்த வெற்றி அறிமுகமாவது பிரச்சினைகளை எதிர் கொள்ளும்போது அல்லது வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்தும்போது தான் நான் பிரச்சினை அல்லது கிடைத்த வாய்ப்பில் வெற்றியடைவதற்கு ஆர்வத்துடன் ஓட ஆரம்பித்தேன். 'அதற்கான வழியைத் தேட ஆரம்பித்தேன். சிறிது தூரத்தில் அதன் வழியில் ஒரு திசை காட்டியை பார்த்தேன். அது வலது மற்றும் இடது என்று இரண்டு வழியைக்காட்டியது. இடது பக்கம் திசை காட்டியில் 'வெற்றி (குறுக்கு வழி)' என்றும் வலது பக்கம் திசை காட்டியில் 'வெற்றி நேர் வழி ' என்றும் இருந்தது. வலது பக்கம் செல்வதா? இடது பக்கம் செல்வதா? என்று முடிவு எடுக்க முடியாமல் தவித்தேன். என்னானாலும் சரி என்று இடது பக்கம் அதாவது வெற்றி( குறுக்கு வழி ) தேர்ந்தெடுத்தேன். அதன் பாதை பளபளவென்று அருமையாக இருந்தது. இவ்வளவு எளிதாக இருகின்றதே! என்று ஆச்சரியப்பட்டேன். ஆனால் அது சில நிமிடங்கள் கூட நீடிக்கவில்லை. திடீரென்று ஒரு பெரிய பள்ளம் (அதாவது அது தோல்வியை குறிக்கும்). அதற்கு பக்கத்தில் எச்சரிக்கை பலகை ஒன்று இருந்தது! அதில் 'இதேபோல் சில பள்ளங்களைத் தாண்டிச் சென்றால் வெற்றி யை அடையலாம் ' என்று எழுதி இருந்தது. இந்த ஒரு பள்ளத்தை தாண்டுவதே சிரமம். மேலும் சில பள்ளங்களை எப்படித் தாண்டுவது ! இந்த குறுக்கு வழியே வேண்டாம். தப்பித்தேன் . பிழைத்தேன். அந்த வலது பக்கம் நேர் வழியிலேயே வெற்றிப் பயணம் செய்யலாம் என்று அவசரம் அவரமாக ஓடினேன். ஆரம்பத்திலேயே முடிவு சரியாக எடுத்திருந்தால் இந்தக் கஷ்டம் வந்திருக்காதே! என்று மனதில் நொந்துகொண்டேன். வலது பக்கம் ஆரம்பமே கரடுமுரடான கற்களும் முட்களும் நிறைந்திருந்தது. (இவைகள் அனைத்தும் வெற்றியை அடையவிடாமல் தடுக்கும் இடையூறுகள்). இருந்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாது அதனை விலக்கியும் , தாண்டியும் சென்றேன். அந்த





வழியில் செல்லச் செல்ல கற்களும் முற்களும் மறைந்தன. (அதாவது இவைகள் கடின உழைப்பினால் கிடைத்த பலன்). 'இனி இது போல் எந்த கஷ்டம் வந்தாலும் தைரியமாக, துணிச்சலாக சமாளிப்பதற்கு தயாராக வேண்டும்' என்று மனதில் உறுதி கொண்டேன். இப்படியே சென்றுகொண்டிருக்கும் போது கடுமை யான வெயில் உடலை வாட்டி எடுத்தது. தண்ணீர் தாகம் அதிகமாக எடுத்தது. பக்கத்தில் தண்ணீர் இருப்பதாக தெரியவில்லை. *(தொடரும்)*

## புலிகளுக்கு எதிராகவே 60 சதவீத முறைப்பாடு

தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு, இடைக்கால அறிக்கையை ஜனாதிபதிக்கு சமர்ப்பித்திருந்தது. அந்த அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஆணைக்குழு விடுத்துள்ள ஊடகக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் வடக்கு – கிழக்கிலிருந்து 16 ஆயிரத்து 155 முறைப்பாடுகள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. பலவந்தப்படுத்திக் காணாமற் போகச் செய்தல், சட்டத்துக்கு முரணாக கைது செய்து காணாமற் போதல், கடத்தல் போன்ற குற்றச்சாட்டுக்கள் தமிழீழ விடுதலைப் புலிகள், இராணுவத்தினர், ஆயுதக் குழுக்கள், இனந்தெரியாத குழுக்கள் ஆகியவற்றுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் தொடர்புடைய பொறுப்புக்கூற வேண்டியவர்கள், காரணமானவர்கள் மாவட்டத்துக்கு மாவட்டம் மாறுபடுகின்றனர். – என்றும்

வடக்கு மாகாணத்தில், காணாமற் போதல் சம்பவங்கள் தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக 60 சதவீதமான முறைப்பாடுகளும், ஆயுதப் படைகளுக்கு எதிராக 30 சதவீதமான முறைப்பாடுகளும், ஆயுதக் குழுக் களுக்கு எதிராக 5 சதவீதமான முறைப்பாடுகளும், இனந் தெரியாத குழுக்களுக்கு எதிராக 5 சதவீதமான முறைப்பாடுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையில், வரைபுகளுடன் தெளிவாக சகல விடயங்களும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் ஊடாக, இராணுவத்தினருக்கு எதிராக – இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பிலும் இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. காணாமற் போனோரின் உறவினர்களின் வாய்மொழி மூலமான முறைப்பாட்டின் அடிப்படையில் இது முன்வைக்கப்பட்டுள்ளது. – என்றும் அந்த ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ற–5)

## கிணற்றில் தவறி விழுந்து சிறுவன் சாவு

விளையாடிக்கொண்டிருந்த சிறுவன் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்த சம்பவம் புத்தளம்–தில்லையடி பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த அசம்பாவிதத்தை அடுத்து உடற்கூற்றுப்பரிசோதனையின் பின்னர் சிறுவனின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(த)


**வீடு வாடகைக்குண்டு**

கோண்டாவில் மேற்கில்
3அறைகளு டன் கூடிய சகல
வசதிகளுமுடைய
வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:- 0784550833


## இருமல் ஏற்பட்ட யுவதி சாவு

யாழ்ப்பாணம், ஏப். 25

இருமல் காரணமாக வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறச் சென்ற யுவதி சிகிச்சை பயனளிக்காது மறுநாள் உயிரிழந்தார்.

நாகர்கோயில் கிழக்கு மருதங்கேணியைச் சேர்ந்த விஜயகாந்தன் தர்சினி (வயது–18) என்பவரே யாழ்.போதனா வைத்திய சாலையில் உயிரிழந்தார்.

கடந்த 21ஆம் திகதி அவருக்கு இருமல் ஏற்பட்டுள்ளது. மறுநாள் அவர் மந்திகை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் மயங்கி விட்டார். அத னால் அடுத்த நாளான நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு அனுமதிக்கப்பட்டு ஒரு மணி நேரத்தில் அவர் உயிரிழந்து விட்டார். இருதயத் தசையில் நோய் ஏற்பட்டுஅவர்உயிரிழந்துள்ளதாகப்பரிசோதனையில்தெரிய வந்துள்ளது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். சடலம் நேற்றுப் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (த–4)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.25

பண்ணாகம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்க மண்டபத்தில் செல்வி.எ.லோகநாயகி தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறவுள்ளது. (த–28)

## அடிக்கல் நாட்டுவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.25

யாழ்.மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன் னிட்டு ஞாபகார்த்த மண்டப அடிக் கல் நாட்டுவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது. தந்தை செல்வா அறக்கட்டளை நிதியத்தின் முழுமையான நிதிப்பங்களிப்புடன் இந்தக்கட்டடம் அமை யப்பெறவுள்ள தாக பாடசாலையின் அதிபர் கே.எழில்வேந்தன் தெரிவித்துள்ளார். (த–14)

## புலமைப் பரிசில் சித்தி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

தென்மராட்சி, ஏப்.25

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன சாவகச்சேரிக் கிளையினர் தென்மராட்சி கல்வி வலயத்தின் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வு இன்று சனிக்கிழமை மு.ப 9.30 மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது. ந.நாத்தனன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் அ.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர் பா.சத்தியன், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதி சி.கந்தசாமி ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி கிளை முகாமையாளர் கே.பிரதீபன் , சாவகச்சேரி கிளை நிர்வாக அலுவலர் திருமதி சி.புனித நாதன் ஆகியோரும் கலந்து கொள்வர். (த–9)

## இராஜதந்திரியானார் லசந்தவின் மனைவி

கொழும்பு, ஏப். 25

படுகொலைசெய்யப்பட்டசண்டேலீடர்பத்திரிகையின்பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் மனைவியான சோனாலி சமரசிங்க இராஜதந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கமைய நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகளுக்கான இலங்கை அலுவலகத்தின் கவுன்சிலர் அமைச்சராக இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (த–10)


**யா/வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை பாடசாலை அபிவிருத்திச்சங்க வருடாந்த பொதுக்கூட்டம்-2015**

எமது பாடசாலையின் அபிவிருத்தி சங்க பொதுக் கூட்டம் 10.05.2015 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு பாடசாலை தம்பையா மண்டபத்தில் இடம்பெற இருப்பதால் சகல பெற்றோரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி வே.சண்முகரத்தினம்
தலைவர் (அதிபர்)



**தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் 50 ஆவது பொன் விழாவுக்கான விசேட பொதுக்கூட்டம்**

மேற்படி விடயம் தொடர்பாக எதிர்வரும் 26.04.2015 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி யளவில் எமது சங்கப்பணிமனையில் நடை பெறும் என்பதை சகல அங்கத்தவர் களுக்கும் அறிவிப்பதோடு அனைத்து அங் கத்தவர்களையும் தவறாது சமூகம் தரும்படி கேட்டுக் கொள் கின்றோம்.

இணைச்செயலாளர்



**யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவர்த்திச் சங்கத்தின் 54 ஆவது வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்**

எமது சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் (26.04.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு தலைவர் திரு. சி. விக்னேஸ்வரன் அவர்கள் தலைமையில் யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ சிகிச்சைப் பகுதி மண்டபத்தில் நடைபெறும் என்பதனை சகல அங்கத்தவர்களுக்கும் அறியத்தருவதுடன் அனைவரையும் பொதுக்கூட்டத்தில் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சி. பாக்கியலிங்கம்
செயலாளர்



**ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 06.05.1927



மறைவு 01.05.2009

அமரர் கந்தையா கனகசபாபதி
(ஓய்வுபெற்ற பிரதம புகையிரதப் பாதுகாவலர்)
திதி : 25.04.2015

அன்பின் உறைவிடமே
பாசத்தின் திருவுருவே
நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து
ஆண்டுகள் ஆறு ஆனதுவோ.

'விஜயபதி'
கல்லூரி ஒழுங்கை, மானிப்பாய்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.



**50% கழிவுடன் 500/= 250/= அசத்தலான விற்பனை**

50% கழிவு

விசேடமான காட்சியறையில்
உங்கள் எண்ணம் போல்
தெரிவுகள்

வரலாற்றில் பதியப்பட்ட
அரிய பொக்கிச நூல்கள்

முந்துங்கள்
தேர்ந்திடுங்கள்
எங்குமே பெறமுடியாத
அரிய வகை நூல்கள்

பாலர் முதல் பல்கலை
வரையான அனைத்துதுறை
புத்தகங்களும் ஒரே பார்வையில்

சொற்ப நாள்களே எமது விசேட விற்பனை விரையுங்கள்

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
இல. 212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 5542, 021 567 1527
Email:-acdil@ymail.com


## பருத்தித்துறை நகராட்சி மன்றம் வேலைக்கான கேள்வி அறிவித்தல்

கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலைகளுக்கான கேள்விகள் பருத்தித்துறை நகராட்சி மன்றத்தினால் கோரப்படுகின்றது.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி 27.04.2015 ஆம் திகதி தொடக்கம் 12.05.2015 திகதி பி.ப 3.00 மணிவரை.
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 14.05.2015 ஆம் திகதி 12.00 மணிவரை
03. கேள்வித்திறக்கப்படும் திகதி 14.05.2015 பி.ப 2.00 மணி
04. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்குமுன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.
05. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையிலிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயரைக் குறிப்பிட்டு ஒரு பிரதியை "நகர பிதா, நகராட்சி மன்றம், பருத்தித்துறை" என்ற முகவரிக்கு பதிவுத்தாபலில் அனுப்புவதன் மூலமோ அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுவதன் மூலமோ குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்புவதுடன் மறு பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.
06. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.

மேலதிக விவரங்களை பருத்தித்துறை நக்ராட்சி மன்ற அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மீளளிக்கப் படாத வற்வரி | மீளளிக்கப் படாத NBT வரி | ஆகக் குறைந்த இக்ராட் தரம் |
|---|---|---|---|---|---|---|
| 01. | வெளிச்ச வீட்டு ஒழுங்கை கொங்கிறீற் றோட் அமைத்தல்-கட்டம் I | 7500.00 | 750.00 | 82.50 | 15.00 | C9 |

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
24.04.2015

தேசமானிய சபா.ரவீந்திரன் JPUM
நகரபிதா,
நகராட்சிமன்றம், பருத்தித்துறை.

# சனசமூக நிலைய ஆண்டு நிறைவு விழா இன்று

கைதடி, ஏப். 25

கைதடி சனசமூக நிலையத்தின் 59 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை மாலை 6.30மணிக்கு நிலையத் தலைவர் வே.மோகனதாஸ் தலைமையில் சரஸ்வதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச கலாசார உத்தியோகத்தர் சி.முகுந்தனும்,சிறப்பு விருந்தினராக கைதடி கலைவாணி வித்தியாலய அதிபர் ந.கருணாகரன், கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் இ.கந்தசாமி ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டுஇன்றுகாலை 6 மணிக்குசரஸ்வதி சனசமூக நிலைய, அங்கத்தவர்களுக்கான மரதன் ஓட்டமும், முற்பகல் 10 மணிக்கு வறுமைக் கோட்டுக்குட்பட்ட நிலைய அங்கத்தவர்களுக்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தால் நிர்மாணிக்கப்பட்ட புதிய வீடு கையளித்தலும் , மதியம் அன்னதான நிகழ்வும் இடம்பெறவுள்ளது. மாலை நிகழ்வுகளாக சிறப்புரைக ளும், போட்டிகளும், வெற்றியீட்டிய வர்களுக்கான பரிசில் வழங்லும் நிலைய அங்கத்தவர்களின் அரங்க கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (த–288)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## தந்தை செல்வா
## 38ஆவது ஆண்டு நினைவு நாள்



**26.04.2015**

**அஞ்சலியும் நினைவுரையும்**

| | |
|---|---|
| காலம் | : 26.04.2015 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.30 மணி. |
| இடம் | : தந்தை செல்வா நினைவிடம் தந்தை செல்வா சதுக்கம், யாழ்பாணம். |
| தலைவர் | : பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் அவர்கள் தலைவர், தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு. |

**நிகழ்ச்சிகள்**

**தந்தை செல்வா சிலைக்கு மலர்மாலைகள் அணிவித்தலும் சமாதியில் மலர் அஞ்சலி செலுத்தலும்**

| | |
|---|---|
| வரவேற்புரை | : **பேராசிரியர் ச. சத்தியசீலன் ,** செயலாளர். தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு |
| அஞ்சலியுரைகள் | : மௌலவி M.I **மஹ்மூத் (பலாஹி)** அருட்தந்தை C.S. **ஜெயக்குமார்** அடிகள் **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்** |
| சிறப்புரை | : **கனகமனோகரன்** (சட்டத்தரணி, கனடா) |
| நினைவுப் பேருரை | : "செந்தமிழ் சொல்லருவி" ச. **லலீசன்** |
| நன்றியுரை | : **வி.ஜி. தங்கவேல்,** தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு உறுப்பினர். |

**தமிழ் தேசியத்தின் தந்தை அவர்களை நினைவுகூரும் இந்த அஞ்சலி நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு**

## ஏழாவது ஆண்டு நினைவு தினம்



தோற்றம் :
26.11.1935

மறைவு :
11.05.2008

**வைத்திய கலாநிதி லயன்**
**செல்வி**
**நவமலர் கனகரத்தினம்**

யாழ். போதனா வைத்தியசாலை முன்னாள் பணிப்பாளரும் லயன்ஸ் கழக பிராந்திய தலைவருமாகிய வைத்திய கலாநிதி லயன் செல்வி நவமலர் கனகரத்தினம் அவர்களின் சிராத்த தினத்தை முன்னிட்டு

இன்று (25.04.2015) சனிக்கிழமை காலை தெல்லிப்பழை புற்றுநோய் வைத்திய சாலையில் தங்கி சிகிச்சை பெறும் புற்றுநோயாளர்களுக்கு சத்துணவு வழங்கும் நிகழ்வு நடைபெறும்.

**லயன்/லயன் சிமாட்டி வற்சலன்**
**நவஇல்லம், கதுமலை மேற்கு, மானிப்பாய்.**

## மரண அறிவித்தல்

### திருமதி ஜோய் எவஸ்ரன் நிறாஜீன்



மாறாம்புலம், அல்வாய் வடமேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜோய் எவஸ்ரன் நிறாஜீன் 23.04. 2015 வியாழக்கிழமை காலமானார்.


அன்னார் ஜோய் எவஸ்ரனின் அன்பு மனைவியும், பிரான்சிஸ் சேவியர்-கமலாவதி தம்பதியரின் அன்பு மகளும், ஜேம்ஸ் எடிங்ரன் தங்கேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், ஜோய்சன், ஜோய்சனா ஆகியோரின் அன்புத் தாயும், டொலியீனின் அன்புச் சகோதரியும் சின்னப்பிள்ளை (ஈஸ்வரியின்) பெறா மக ளும் ஆவார்.

அன்னாரின் நல்லக்க ஆராதனைகள் இன்று (25.04.2015) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் சக்கோட்டை புனித சவேரியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித சவேரியார் சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாறாம்புலம்,**
**அல்வாய் வடமேற்கு, அல்வாய்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



# அமரர் புண்ணியமூர்த்தி
# வேலும் மயிலும்

**தோற்றம்**
**16.06.1946**

**மறைவு**
**28.04.2012**

அன்போடும் பண்போடும் வாழ்ந்து
எம்மை பாசமாய் அரவணைத்த - பப்பா!
உங்கள் கரங்களின் உழைப்பை காலம் அலட்சியப் படுத்தியதோ?
வாழ்வின் வினையேதும் அறியாத மாமனிதனாய் வாழ்ந்தீரே!
அருள்நெறி அறிவைத் தரலாகும் பொருள் பெற யாரையும் புகழாது
போற்றாதாரையும் இகழாது
காந்தியைப் போல் அதிகாலை விழித்து
காந்தியைப் போல் அளவாக புசித்து
காந்தியைப் போல் ஒழுங்காகத் திட்டம்போட்டு
காரியங்கள் செய்முறையில் கடமை கண்ணியமாயும்
பக்தியின் அன்பினில் நாமும் பணிபல செய்வோமே
எம்மை நிலை தடுமாற விட்டு இல்லாளைப் பற்றி
தெரிந்திருந்தும் தெரியாததுபோல்
பேரமக்களின் ஏக்கம் விளங்காமலும் நீர் போய் விட்டீரே!
இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும்
வல்லது அரசு (குறள் 385)

என்பதற்கேற்ப கல்வித் தத்துவவியலாளர் ரூஸோ கூறியது போல் பிள்ளைகளை இயற்கையின் இன்பத்தில் தூக்கி வீசி, அதில் பிள்ளைகள் பெற்ற இன்பத்தை அள்ளிப்பருகி கண்ணை இமை காப்பதுபோல் பிள்ளைகளை பேதமின்றி ஒரே நோக்கில் பிள்ளைகளாய் வளர்த்து இன்று வானுறையும் தெய்வத்துள் சென்று மூன்று வருடமென்ன, எத்தனை யுகம் சென்றாலும் எம் இதயங்களில் உம் புன்னகை வதனம் தவழ்ந்து கொண்டே இருக்கும். இன்றும் உம் புத்திரர்கள் உங்களை பற்றி பப்பா எனத் தொடங்கி பத்து நிமிடம் அழுத பின்னரே மறுகதை கூறுகிறார்கள்.

**பப்பா நீங்கள் குடியிருந்ததால் - எங்கள்**
**வீடும் கோயிலே! இனி எந்த சாமி**
**வந்து நிரப்பும் உங்கள் இடத்தை....**
**ஆண்டு மூன்று ஆகியும் நீங்கள் இறந்ததை**
**ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு பார்க்கும்**
**இடமெல்லாம் உள்ளத்தால் உங்களைக் காண்கின்றோம்.**

**சங்கானை கிழக்கு,**
**பண்டத்தரிப்பு.**

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# பெங்களூர் ரோயல்ஸிடம் சரணடைந்தது ராஜஸ்தான் ரோஜல்ஸ்





ஹோக்லியின் அதிரடியும், வில்லியர்ஸின் நிதானமும், ஸ்ராக்கினதும் பட்டேலினதும் துல்லியமான பந்துவீச்சு பக்கபலமாக அமைய ராஜஸ்தானை 9 இலக்குகளால்மிகஇலகுவாக விழ்த்தியது பெங்களூர்.

ராஜஸ்தான் எதிர் பெங்களூர் அணிகளுக்கிடையிலான ஆட்டம். தொடர் வெற்றிகளால் ஆட்டடிப் படைக்கும் அணி ராஜஸ்தான். அதிரடிப் பட்டாளத்தை அடுக்கி வைத்திருக்கும் அணி பெங்களூர். நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் ராஜஸ்தானை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணிக்க களத்தில் ரஹானேயுடன் வட்சன். இருவருமே சமீப காலமாக சிறப்பான திறனில் நீடிக்கும் வீரர்கள். இருவரின் ஆதிக்கமும் நேற்றைய ஆட்டத்திலும் இருக்கவே செய்தது ஆனால் நீடிக்கவில்லை. நடப்பு ஐ.பி.எல்.தொடாின் துடுப்பாட்டத் தரவரிசையில்முதலிடத்தில் இருக்கும் ரஹானே நேற்றைய ஆட்டத்தில் 18 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். ஆனால் அதற்குள்ளும் இரண்டு பவுண்டரிகள் ஒரு சிக்சர். ரஹானே ஆட்டமிழந்து சிறிது நேரத்திலேயே தலைமை இன்னிங்ஸ் (வட்சன்) முடிவுக்கு வந்தது. கடந்த ஆட்டத்தில் கைவிட்ட சிமித் நேற்று கைகொடுத்தார். ஆனால் மறுமுனையில் இலக்குகள் சீரான இடைவெளியில் சரியவே செய்தது. முன்னணி வீரர்கள் நால்வரும் ஆட்டமிழந்த பின்னர் வழமையான ராஜஸ்தானின் ஆட்டமாக நேற்றைய ஆட்டம் அமையவில்லை. ஒற்றையிலக்க ஓட்டங்களிலேயே ஓடிமறைந்தனர். அகலப்பந்தாக சென்ற பந்தை பின்பக்கமாக பவுண்டரிக்கு திருப்ப பல்க்நெர் முற்பட்ட வேளையில் பாய்ந்து பிடித்தார் தமிழ்விரா் டினேஸ் கார்த்திக். நடப்பு ஐ.பி.எல். தொடரில் சிறந்த பிடியெடுப்பாக இது பதிவானது. மத்திய வரிசையில் பின்னி மட்டும் அதிகபட்சமாக 20 ஓட்டங்களை எடுத்தார். மொத்தத்தில் ராஜஸ்தான் 130–9.

கெயில், மன்டீப், ஹோக்லி, டினேஸ் கார்த்திக், வில்லியர்ஸ், கான் என்று முழுதும்அதிரடியாக உள்ள இந்தப் பட்டாளத்துக்கு 130 ஓட்டமென்பது ஒரு இலக்கேயில்லை. 15ஆவது பந்துப்பரிமாற்றத்தில் ஆட்டம் முடிவுக்கு வரும் என்ற எதிர்பார்ப்புக்கு மத்தியில் களத்தில் கெயிலுடன் ஹோக்லி. இரண்டு பவுண்டரிகளுடனும் ஒரு சிக்சருடனும் கெயிலின் ஆட்டம் முடிவுக்கு வந்தது. பெங்களூர் 36–1. சிறந்த இணைப்பாட்டம் என்று சொல்ல முடியாது ஆனால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குக்கு இது போதும். கெயிலின் இடத்துக்கு பெங்களூரின் பேராபத்தான வில்லியர்ஸ். பூவோடு சேர்ந்த நாரும் மணம்வீசும் என்பதைப் போல வில்லியர்ஸ் வந்ததும் ஹோக்லி ஒரு இமாலய சிக்சரை விளாசினார். வில்லியர்ஸ் வழக்கமான தனது வேலையைக் காட்ட ஓட்டங்கள் கிடுகிடு வேகத்தில் எகிற ஆரம்பித்தது. பத்தே பந்துப் பரிமாற்றத்தில் பெங்களூர் 80–1. வெற்றிக்காக மீதமிருக்கும் 60 பந்துகளில் 48 ஓட்டங்களைப் பெற்றால் போதும் என்ற நிலைமை. சிக்சருடன் அரைச்சதம் கடந்தார் ஹோக்லி. ஹோக்லியின் வாணவேடிக்கை தொடரப்பட 23 பந்துகள் மீதமிருக்க ராஜஸ்தானை ஊதித்தள்ளியது பெங்களூர். (ரி)

## 12 ஆம் ஆண்டு நினைவு

கிறிஸ்து படைப்பில் 22.11.1959 கிறிஸ்து அணைப்பில் 25.04.2003



அமரர்

### வீரசிங்கம் சகாயராஜா

அன்பின் உருவமாக
பாசத்தின் சின்னமாக
எம்முள் வாழ்ந்து
குடும்பத்தின் தூணாக
கண்ணின் இமையாக
எமைக் காத்து
அரவணைத்தீரே....!
தெய்வமே! ஏன் எமை
விட்டுச் சென்றீர்



ஆண்டுகள் பன்னிரண்டு தான் ஆகின்றது
ஈராறு ஜென்மங்கள் ஆனாலும் அழியாது எம் சோகம்
ஆறாது எம் பாசம்.
என்றும் உங்கள் ஆத்மா அமைதிபெற்று இன்புற
கண்ணீர் பூக்களாலே அஞ்சலி செய்கின்றோம்.

கற்பகக்குளை,
உடுவில் வடக்கு, உடுவில்.

என்றும் உம் பிரிவால் வாடும்..
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் நன்றி செலுத்தும் ஆராதனையும்



திருமதி பவளரத்தினம் (பவளக்கா) சின்னத்தம்பி

தோற்றம் 25.12.1925 மறைவு 25.03.2015

எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த, அஞ்சலி ஆறுதல் தெரிவித்த, தொலைபேசி மூலம் அஞ்சலித்து ஆறுதல் கூறிய அஞ்சலிப்பிரசுரம் வெளியிட்ட மற்றும் இறுதி ஆராதனை நிகழ்வுகளை ஒழுங்குபடுத்தி நடத்திய கலந்து கொண்ட மதகுருமார்கள் மற்றும் கலந்துகொண்ட உற்றார். உறவினர். நண்பர்கள். அயலவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு. இன்றையதினம் (25.04.2015) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் நன்றி செலுத்தும் ஆராதனையிலும் கலந்து கொண்டு தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஏழாலை வடக்கு,
V.C. அருகில், ஏழாலை.

குடும்பத்தினர்.

(43.3)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி ஜெட்ருட் பாலசுப்பிரமணியம் (பவளம்)

யாழ். நாரந்தனை தெற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெய்ரூட் பாலசுப்பிரமணியம் நேற்று (24.04.2015) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனி - பவுலீனம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற நடேசு, இரத்தினம் தம்பதியரின் மருமகளும், பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், குயின்ரஸ், ரெஜி ஆகியோரின் அன்புத் தாயும், ஜேம்ஸ், சிசிலியா காலஞ்சென்ற சேவியர், றீற்றா, ஜெம்மா, மொறின் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மொனிக்கா மற்றும் புலேந்திரராஜா, யோகராஜா, குமரகுருபரன், றொட்னி, ராசலிங்கம், சுப்பிரமணியம், கனகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், ரஞ்சித், விஜித், ஜெயா, சுஜித், பவானி, தீபன், பாமினி, வாணி ஆகியோரின் பாசமிகு அத்தையும், ஜீவநாத், ஜீவிதன் ஆகியோரின் ஆசைப் பெரியம்மாவும், சுகந்தினி, சுதாஜினி, சுதர்சன், பாலேந்திரன், சுரேந்திரன், ஜெயந்திரன், விஜிதா ஆகியோரின் அன்புச் சித்தியும், ரிந்தியா, சிந்துஜா, நிது, அபி, ஆதிரா, விசா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஆத்ம சாந்தி நல்லடக்க ஆராதனைகள் ஜேர்மனியில் நடைபெறும் . இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :-ஜே. விஜித் (மருமகன்)
மாங்குளம். 077 53 00378

### திருமதி யோகேஸ்வரி குமரையா



அம்பனை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி குமரையா கடந்த (22.04.2015) புதன்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமரையாவின் அன்பு மனைவியும், நாகேந்திரராசா, வசந்தகுமாரி, ஜெயகுமாரி, செல்வேந்திரராசா, சந்திரகுமாரி, சூரியகுமாரி ஆகியோரின் அன்புத் தாயும், ஜெயந்தினி, சிவபாதசுந்தரம், ஸ்ரீகந்தராசா, சுகுணா, ரவிக்குமார், மன்மதன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (26.04.2015) ஞாயிற்றுக் கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அருணாசலம் பாடசாலை வீதி,
அளவெட்டி தெற்கு,
சிறிஸ்கந்தராசா- 0014167240510
021 7904273, 077 122 6272

தகவல் :-
குடும்பத்தினர்.

### திருமதி கிறேஸ் செல்வரத்தினம் (செல்வக்கா ரீச்சர்) தாமோதரம்பிள்ளை



வண்ணார்ப்பண்ணையைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. கிறேஸ் செல்வரத்தினம் தாமோதரம்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியை-யா/வேம்படி மகளிர் கல்லூரி, யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்) நேற்று (24.04.2015) வெள்ளிக் கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளையின் (ஆசியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற றோஸ் ஜோசெப்பின் (ஆசிரியர்-பெரியபுலம் மகாவித்தியாலயம்) அன்புச் சகோதரியும், மாலா (London), கலா (இளைப்பாறிய ஆசிரியர்-உடுவில் மகளிர் கல்லூரி), வசந்தி (Colombo), சுகந்தி (Canada) ஆகியோரின் அருமைத் தாயும், சத்தியகாந்தன் (London), மகேந்திரக் குமார் (Uduvil), ரஞ்சன் ஹன்டி (Colombo), றொகான் அல்போன்சஸ் (Canada) ஆகியோரின் அன்பு மாமியும், லெஸ்லி (London), காலஞ்சென்ற மைக்கல் மற்றும் மதுமிதா -Dr. செல்வேந்திரன் (Australiya), ஹெலன்(ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி)-ஞானராஜன் (ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி), டிரோஷன் (Dubai), மைக்கல் சந்துருபன் (Colombo), ஸ்டீபன் (Dubai), பெரடி (Canada), நயோமி (Canada) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கேபஸ், எஸ்தர் மணிமேகலை, எலைஜா (Australiya) ஆகியோரின் அருமைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (25.04.2015) சனிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சேச் லேன், உடுவிலிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பண்டத்தரிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No:10, Church Lane,
Uduvil.

தகவல்:
திருமதி கலா மகேந்திரகுமார்

# 19 இக்கான ஆதரவை மீள்பரிசீலனை செய்க

## வன்னி எம்.பிக்கள் கூட்டாகக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப் 25

புதிய ஆட்சியாளர்கள் தமிழர்களுக்கு வழங்கிய சிறு வாக்குறுதிகளைக்கூட நிறைவேற்றவில்லை. இந்நிலையில் 19ஆவது திருத்தச் சட்டம் எதிர்வரும் வாரம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவுள்ளது. அச்சட்டவரைவுக்கு ஆதரவு வழங்குவது குறித்து மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்களானசெல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் மற்றும் வினோநோகராதலிங்கம் ஆகியோர் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக வன்னி மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

போரின் பின்னர் தமிழ் மக்களுக்கான எந்தவொரு ஆரோக்கியமான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாது புறக்கணிக்கப்பட்டு வந்த நிலையிலேயே ஆட்சி மாற்றத்திற்கான குரல் வலுப்பெற்றது. அதன்பிரகாரம் தமிழ், முஸ்லிம் மக்களின் பூரண ஆதரவுடன் புதிய ஆட்சி மாற்றம் உருவாகியது. குறிப்பாக இனப்பிரச்சினைக்கான பொறிமுறையொன்றை கூட தனது விஞ்ஞாபனத்தில் குறிப்பிடாமல் இருந்த மைத்திரிபால தலைமையிலான் அணியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனை இன்றி ஆதரித்து வெற்றிபெறச் செய்திருந்தது. ஜனவரி 8ஆம் திகதியின் பின்னர் நல்லாட்சியை மையப்படுத்திய நடவடிக்கைகள் தேசிய அரசால் முன்னெடுக்கப்பட்ட தருணத்தில் வடக்கு, கிழக்கு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாக அவர்களிடம் நேரடியாக குறிப்பிட்டோம். முக்கியமாக வடமாகாண ஆளுநர், பிரதம செயலாளர் ஆகியோர் மாற்றப்பட்டு வடக்கு மக்களின் நன்மதிப்பை அரசு பெற்றிருந்த போதும் அதனைத் தொடர்ந்து அன்றாட வாழ்க்கையில் மக்கள் செயற்பாடுகளை நெருக்கடிகளின்றி முன்னெடுப்பதற்கான சில நடவடிக்கைகளை உடன் செயற்படுத்துமாறு நாம் கோரினோம். குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாக ரீதியாக தமிழ் அதிகாரிகளை நியமிக்கும் படியும், மாவட்ட அபிவிருத்திக்குழு தொடர்பாகவும், அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களில் நியாயமான முறையில் நியமனங்கள் வழங்கப்படுவதுடன் இடமாற்றங்கள் அமைய வேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருந்தோம். ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரிடம் இவ்விடயங்கள் தொடர்பாக நேரடியாகவும் எழுத்து மூலமாகவும் விரிவாக கூறப்பட்ட போதும் அவ்விடயங்கள் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்திருந்தனர். கடந்த 9ஆம் திகதி பிரதமர், மற்றும் பொது நிர்வாக அமைச்சர், போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆகியோரை சந்தித்து இவ்விடயங்கள் தொடர்பாக மேலும் விரிவாகக் குறிப்பிட்டிருந்தோம். இந்தநிலையில் தற்போது நூறு நாள் வேலைத்திட்டம் நிறைவுக்கு வந்துள்ளது. எனினும் நாம் முன்வைத்த சிறு கோரிக்கைகள் தொடர்பில் ஒன்றைத்தானும் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதற்கு மாறாக மீண்டும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களை வடக்கு கிழக்கு மாகாணங்களில் நியமித்துள்ள நிலைமையே காணப்படுகின்றது. வடமாகாணத்துக்கு மட்டுமே இலங்கை போக்குவரத்துசபை தலைவர் பதவி காணப்பட்ட நிலையில் தற்போது வன்னி அமைச்சர் ஒருவரின் சுயநலத்திற்காக வடக்கு மாகாணம் இரண்டாக பிளவுபடுத்தப்பட்டு அமைச்சருக்கு சார்பான ஒருவருக்கு பதவி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அமைச்சருக்காக வடக்கு மாகாணம் இரண்டாக பிளவுபடுத்தப்பட்டமை மிகவும் பாரதூரமான விடயமாகும். மேலும் வவுனியா இலங்கை போக்குவரத்து சபைக்கு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவொருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அதேநேரம் செட்டிக்குளம் பிரதேச செயலகத்தில் உள்ள தமிழ் செயலாளரை மாற்றி தனக்கு சார்பான ஒருவரை நியமிப்பதற்காக அதே வன்னி அமைச்சர் ஒருவரின் துணையுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அது மட்டுமன்றி நல்லாட்சியிலும் பதவி இடமாற்றம் மற்றும் நியமனங்களின் பின்னணியில் சுயஇலாப அரசியலை மையப்படுத்திய செயற்பாடுகளே காணப்படுகின்றன. இதனை தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ளமுடியாது. யுத்தத்தின் பின்னர் வடக்கு மக்கள் எதிர்நோக்கும் காணி அபகரிப்பு, உயர் பாதுகாப்பு வலயம், காணாமல் போனோர் விடயம், அரசியல் கைதிகள் விடுதலை, விதவைப் பெண்களின் வாழ்வாதரம் போன்ற அடுக்கடுக்காக தீர்க்கப்படாதிருக்கும் பிரச்சினைகளுக்கு எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் கடந்த நூறு நாள்களுக்குள் முன்னெடுக்கப்படாத நிலையில் 19ஆவது திருத்தச்சட்ட மூலத்தை எதிர்வரும் வாரம் நிறைவேற்றியே தீரவேண்டும் என ஆட்சியாளர்கள் கருதுகின்றார்கள். வடக்கு கிழக்கு அபிவிருத்திக் குழு இணைத்தலைவர்களாக முதலமைச்சர் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்களும் உள்ளடக்கப்பட்ட குழுவொன்று அமைக்கப்படவேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வரும் நிலையில் இன்றுவரையில் பாராமுகமே காணப்படுகின்றது. இந்நிலையில் சிறுவாக்குறுதிகளை கூட நிறைவேற்றாத நிலையில் அதனை எவ்வாறு எம்மால் ஏற்று ஆதரவாக வாக்களிக்க முடியும் என்பது கேள்விக்குறியாகவுள்ளது. ஆகவே அத்திருத்தச்சட்டத்திற்கு வாக்களிப்பது குறித்த முடிவை மீள்பரிசீலனை செய்யவேண்டும் என கூட்டமைப்பின் தலைமையை கேட்டுக்கொள்கின்றோம். விட்டுக்கொடுப்புகளின் ஊடாக சரியான தருணங்களை தவறவிட்ட பல கசப்பான அனுபவங்கள் எமக்கு உண்டு. மீண்டும் அவ்வாறானதொரு ஏமாற்றுச் செயற்பாட்டுக்கு நாம் இரையாகாது தீர்க்கமான முடிவெடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். தற்போது 19ஆவது திருத்தச்சட்ட மூலத்தைத் தொடர்ந்து 20ஆவது திருத்தமாக தேர்தல் சீர்திருத்தத்தையும் மேற்கொள்வதற்கு பெரும்பான்மையின இரு பிரதான கட்சிகளும் முனைப்பாக உள்ளன. குறிப்பாக கடந்த ஜனாதிபதி தேர்தலில் சிறுபான்மை இனத்தின் துணையாலே ஆட்சி மாற்றம் இடம் பெற்றது என்பதை ஜீரணிக்க முடியாத பெரும்பான்மை சக்திகள் எதிர்காலத்தில் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படக்கூடாது என்பதில் உறுதியாக உள்ளனர். ஆகவே அதற்காகவே சிறுபான்மை பிரதிநித்துவங்களில் குறைப்பை ஏற்படுத்தும் வகையிலான தேர்தல் முறைமை மாற்றத்தை முன்மொழிந்துள்ளனர். தேர்தலொன்று அறிவிக்கப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படும் நிலையில் எமக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிராகரிக்கப் பட்டவையாகவே இருக்கையில் தேர்தலை வெற்றிகொள்வதற்கான சகல வியூகங்களையும் கொண்ட செயற்பாடுகளை ஆட்சியாளர்கள் முன்னெடுத்திருப்பதால் நாம் மேற்கண்டவாறு பரிசீலனை செய்யும் நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளோம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# யாழ்.பல்கலைப் பேரவைக்கு புதிய உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், ஏப். 25

பல மாதங்கள் இழுபறியின் பின்னர் யாழ்.பல்கலைக்கழக பேரவைக்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அது பற்றிய அறிவிப்பை நேற்று விடுத்துள்ளது என்று பல்கலைக்கழகத் தரப்புத் தெரிவித்தது.

அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களில் பேராசிரியர்களான தர்மரட்ணம், சி.க.சிற்றம்பலம், சிவசேகரம், ஹிஸ்புல்லா ஆகியோரும், மருத்துவ நிபுணர்களான் லக்ஷ்மன், ஜெயக்குமாரன் ஆகியோரும், பொறியியலாளர்களான விக்னேஸ்வரன், ரட்ணாயக்க ஆகியோரும், வடமாகாண முன்னாள் பிரதம செயலாளர் ரங்கராஜன், யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், யாழ்.மாவட்ட முன்னாள் அரச அதிபரும் சிறந்த சிவில் நிர்வாக அதிகாரியுமான தேவநேசன் நேசையா, கொழும்பு றோயல் கல்லூரி தமிழ்ப் பிரிவு முன்னாள் அதிபர் கணபதிப்பிள்ளை, கலாநிதி ஆறு.திருமுருகன் மற்றும் பிரபல மென்பொருள் நிறுவன இயக்குநர் மனோ சேகரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று பல்கலைக்கழகத் தரப்புத் தெரிவித்தது.

புதிய பேரவைக் கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி நடத்தப்படலாம் என்று எதிர்பார்ப்பதாகவும் பல்கலைக்கழகத் தரப்பு மேலும் தெரிவித்தது.

இதுவரை காலமும் இங்கிருந்த அமைச்சர் ஒருவரே கட்சி சார்பான உறுப்பினர்களைப் பேரவைக்கு நியமித்து அதனூடாகப் பல்கலையிலும் கட்சி அரசியலையே வளர்த்திருந்ததாக பல்கலைக் கழகத் தரப்பினர் பல தடவைகள் குற்றம் சுமத்தியிருந்தனர். அத்தகைய பேரவையால் சட்டமுரணான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டதாகவும் பல்கலைக்கழகத் தரப்புக் குற்றம் சுமத்தியிருந்தது.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் அந்தப் பேரவையினர் பதவி விலக வேண்டும் என்று பல்கலைக்கழகத் தரப்பு கோரியிருந்ததோடு பல போராட்டங்களையும் முன்னெடுத்திருந்தது. இறுதியாக பேரவைக் கூட்டம் நடைபெறவிருந்த நிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடு அதனை நடத்தவிடாது தடுக்கும் வகையிலும் போராட்டம் நடத்தியிருந்தனர். அதனைவிட முன்னர் உள்ள வெளிவாரிப் பேரவை உறுப்பினர்கள் முடிவுகளை எடுக்கத் தகுதயற்றவர்களாக உள்ளனர் என்றும், அதனால் பல்கலைக்கழக வளர்ச்சி பாதிக்கப்படும் நிலை உள்ளதாகவும் பல்கலைக்கழகத் தரப்பினர் குற்றம் சாட்டியிருந்த நிலையில், தற்போது கற்றுத் தேர்ந்தவர்கள் பேரவைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர் என்று பல்கலைக்கழகத் தரப்பு மேலும் கூறியுள்ளது. (த-4)

# மோடிக்கு விக்கி அனுப்பிய கடிதம்

## திரிபுபடுத்திய இந்திய ஊடகங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 25

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் எழுதிய கடிதம் இந்திய ஊடகங்களில் திரிபுபடுத்தப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

பிரேமானந்தா ஆச்சிரம வழக்கில் இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு வடக்கு மாகாண முதலமைச்சர், இந்தியப் பிரதமரிடம் கோரியுள்ளதாக ரைம்ஸ் ஒவ் இந்தியா ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. வடக்கு முதலமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டிருப்பது இந்திய அதிகாரிகளை ஆச்சரியத்துக்கு உள்ளாக்கியுள்ளதாகவும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

அந்தச் செய்தியில், பிரேமானந்தா ஆச்சிரமத்தில் இடம்பெற்ற பாலியல் வன்புணர்வு மற்றும் கொலை வழக்கில், பிரேமானந்தாவுடன் தண்டனை விதிக்கப்பட்ட கமலானந்தா, பாலன் எனப்படும் பாலேந்திரன், சதீஸ் எனப்படும் சதீஸ்குமார் ஆகிய மூவரையும் விடுதலை செய்யவும் என்று விக்னேஸ்வரன் மோடியிடம் கோரியுள்ளார்.

இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட இந்த நான்கு இலங்கைத் தமிழர்களுக்குமான தண்டனையை 2005 ஆம் ஆண்டு உயர் நீதிமன்றம் உறுதி செய்திருந்தது.

கமலானந்தாவும், ஏனைய இருவரும், இந்த வழக்கில் போலியாகச் சிக்க வைக்கப்பட்டுள்ளதாகவும், பிரேமானந்தா ஆச்சிரமத்தையும், அதன் சொத்துக்களையும் பராமரிக்க வேண்டியுள்ளதால், அதனைப் பொறுப்பெடுக்க வேறு யாரும் இல்லாத நிலையில், அப்பாவிகளான இவர்களை விடுதலை செய்யுமாறும், வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், இந்தியப் பிரதமரிடம் கடிதம் மூலம் கோரியிருக்கிறார்.

இலங்கையின் உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசரான சி.வி.விக்னேஸ்வரன், இந்திய நீதியமைப்பை கேள்விக்குள்ளாக்கியிருப்பதும், குற்றவாளிகளை அப்பாவிகள் என்று சுட்டிக்காட்டியிருப்பதும், இந்தியாவின் மூத்த அதிகாரிகளை ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைய வைத்துள்ளது.

பிரேமானந்தா 2011 ஆம் ஆண்டு பல்வேறு நோய்களினால் பாதிக்கப்பட்டு, கூடலூர் சிறையில் இறந்துவிட்டார். இவரது உதவியாளர்களான கமலானந்தா, பாலன், சதீஸ் ஆகிய மூவரும், தற்போது புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

திருச்சியை அடுத்த பாத்திமா நகரில் உள்ள ஆச்சிரமத்தில் 13 பெண்களைப் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தியது, மற்றும் ரவி என்பவரைக் கொலை செய்து ஆச்சிரமத்துக்குள் புதைத்தது உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் இவர்கள் மீது சுமத்தப்பட்டன.

வன்புணர்வினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கமலானந்தாவின் மனைவியான சந்திராதேவி, கருக்கலைப்புச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, 39 மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவர் தண்டனைக் காலத்தை முடித்து விடுதலையாகி விட்டார்.

பிரேமானந்தா ஆச்சிரமத்தில் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும், 13 பெண்களுமே இலங்கைத் தமிழர்களாவர். பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணிடம் நடத்தப்பட்ட மரபணுப் பரிசோதனையில் பிரேமானந்தா குற்றவாளி என்று நிரூபிக்கப்பட்டுத் தண்டனை வழங்கப்பட்டது – இவ்வாறு இந்திய ஊடகத்தின் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனிடம் உதயன் பத்திரிகை நேரடியாகக் கேட்டபோது,

எனக்குச் சிறையில் இருப்பவர்களின் உறவினர்கள் பலரும் சேர்ந்து கடிதம் அனுப்பினார்கள். மோடி இலங்கை வந்து உங்களைச் சந்திக்கவுள்ளதாகப் பத்திரிகை வாயிலாக அறிந்தோம். சிறையில் இருப்பவர்களின் பிரச்சினை சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். நாம் எமது கோரிக்கைகளை நரேந்திர மோடிக்குக் கடிதம் வாயிலாக எழுதியுள்ளோம். அதனை நீங்கள் அவரிடம் கையளிக்க வேண்டும் என்று கேட்டார்கள்.

கமலானந்தா பொறியியலாளர். அவரது மனைவி வைத்தியர். அவர்கள் சுன்னாகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களை எனக்கு நன்கு தெரியும். அவர்கள் மோடிக்கு அனுப்பிய கடிதத்தை எனக்கு அனுப்பியவுடன், எனது முகப்புக் கடிதத்துடன் இணைத்து அவர்களது கடிதத்தையும் மோடிக்கு அனுப்பினேன்.

மோடிக்கு அனுப்பிய முகப்பு கடிதத்தில், எனக்கு உறவினர்களின் கடிதம் கிடைக்கப் பெற்றுள்ளது. இதனை உங்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன். உங்களது நடவடிக்கைக்காக இதனைப் பாரப்படுத்துகின்றேன். இவ்வாறு தெரிவித்து, அவர்களின் கடிதத்தையும் சேர்த்து அனுப்பினேன்.

எங்களுடைய வடமாகாணத்தில் சிலர், இந்தியாவில் சிறையில் வாடுகின்றார்கள். அவர்கள் தமக்கு இருக்கும் பிரச்சினைகளை அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு எடுத்து தெரியப்படுத்துமாறு என்னிடம் கோரினார்கள். அதனை நான் செய்திருக்கின்றேன். இதில் எதுவும் பிழை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

இதைப் போன்றுதான் முன்னர், எங்கள் மீனவர்கள் இந்தியாவில் பிடிபட்டு இருப்பதாகச் சொன்ன போதும் நான் கடிதம் எழுதினேன். எங்களுக்கு, மக்கள் வந்து தங்கள் பிரச்சினைகளை வெளியிடும் போது அதிகாரத்தில் இருப்பவர் களுக்குத் தெரியப்படுத்துவது கடமை – என்றார்.

இதில் நீங்கள் ஏன் ராம் ஜெத்மலானியின் பெயரைப் பயன்படுத்தியுள்ளீர்கள் என்று கேட்டதற்கு, உயர் நீதிமன்றத்தில் வழக்கு நடக்கும் போது காரசாரமாக வாதாடியவர் அவர். அவரை எனக்கு நன்கு தெரியும். வழக்கை பற்றி நான் கூறுவதிலும் பார்க்க, அவர் கூறுவது பொருத்தமாக இருக்கும். இது சோடிக்கப்பட்ட வழக்கு என்றுதான் இப்போதும் ராம் ஜெத்மலானி கூறுகின்றார் – என்றார்.

நீங்கள் இந்திய நீதித்துறையைக் கேள்விக்குட்படுத்தியதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அவ்வாறு உணர்கின்றீர்களா என்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த முதலமைச்சர், இந்திய நீதித்துறையை நான் கேள்விக்கு உட்படுத்தவில்லை. இந்திய நீதித்துறையைப் பற்றி ராம் ஜெத்மலானி குறிப்பிட்டதைத் தான் நான் குறிப்பிட்டிருக்கின்றேன். என்னுடைய கருத்துக்கள் எதனையும் கூறவில்லை – என்றார்.

(த-5)

# நெற்செய்கை நிலங்களின் மீளாய்வு நிலை

## கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் சுனில்

யாழ்ப்பாணம், ஏப்.25

நெற்பயிர்ச் செய்கை நிலங்கள் பற்றிய தகவல்கள் மீளாய்வு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு தற்போது முடிவடைந்துள்ளது என்று கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் சுனில் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

குறிப்பிடப்பட்ட அல்லது மீளாய்வுக்குட்பட்ட விவசாய நிலங்கள் தற்போது பயிர்செய்கைக்கு பயன்படுத்தப்படுகிறதா இல்லையா என்பது பற்றியும் அறிவதே இந்த மீளாய்வு நடவடிக்கையின் முக்கிய கருப்பொருள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

இதுவரை காலமும் யாராவது தமது உரிய நிலங்கள் பற்றிய தகவல்களை அறிவிக்காமலோ சமர்ப்பிக்காமலோ விடுமிடத்து உடனே உரிய கமநல சேவை நிலையங்களிலோ அல்லது விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்களிடமோ அறிவிக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களுக்கோ உத்தியோகத்தர்களுக்கோ தேவையான மேலதிக தகவல்களை குறிப்பிட்ட 0112 691 060 தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை மேற்கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த மீளாய்வு நடவடிக்கையின் மூலம் விவசாயிகள் பலவிதமான நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் விவசாயிகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் புதிய கொள்கை நடவடிக்கைகளால் அவர்களுக்கு நன்மைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

இதன்முதல்கட்ட நடவடிக்கையாக நெற் பயிர்ச்செய்கையின் வகைகள், நீர் வழங்கும் முறைகள், மழை நீர் பாவிக்கப்படுகிறதா அல்லது சிறிய அல்லது பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றனவா என அனைத்து விடயங்களும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டன. இதுதொடர்பில் செய்கை வழித்திட்டங்களை இலகுபடுத்தி விவசாயிகளுக்கு நன்மைகளைப் பெற்றுக்கொள்ள விரைவில் அரசு சார்பில் புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

இதன் மூலம் எவ்வளவு நிலங்கள் ஒவ்வொரு முறையும் பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்தப்படுகின்றன? எவ்வளவு நிலங்கள் அநாதரவாக விடப்படுகின்றன. எத்தனை விவசாயிகள் பயிர்ச் செய்கைக்கான நிலங்கள் இல்லாது கஷ்டப்படுகின்றனர் என அனைத்து விடயங்களும் அறியக்கூடியதாக இருக்கும் என பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். (வ-4)

## அடிப்படை வசதிகள் இல்லாத குழந்தைகள் கிளினிக் கட்டடம்

தென்மராட்சி,ஏப்.25

மட்டுவில் வடக்குப் பகுதியில் நடத்தப்படும் குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலுட்டும் தாய்மார் ஆகியோருக்கான கிளினிக் கட்டடத்தில் அடிப்படை வசதிகள் இல்லாததால் அங்கு வரும் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்பட்டது.

அந்தப்பகுதியில் உள்ள சனசமூக நிலையக் கட்டடத்தில் நடத்தப்படும் கிளனிக்குக்கு மட்டுவில் வடக்கு, மட்டுவில் கிழக்கு சந்திரபுரம், சரசாலை ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையானோர் வருகை தருவதாகவும் போதிய இடவசதி மற்றும் அடிப்படை சுகாதார வசதிகள் இல்லாதால் அருகில் உள்ள ஆலய மண்டபத்திலும்,கழகங்களிலும் மக்கள் காத்திருப்பதாகவும் தெரிவித்தனர்.

பொதுமக்கள் தெரிவித்த முறைப்பாட்டை அடுத்து குறித்த சனசமுக நிலையத்துடன் தொடர்புகொண்டு கேட்ட போது அந்தப்பகுதி மக்களின் நலன் கருதி ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு பத்து வருடங்களுக்கு முன்னர் நான்கு பரப்புக் காணி அன்பளிப்பாக வழங்கப்பட்டது. எனினும் அதனுள் கட்டடம் அமைக்கும் வரை தற்காலிகமாக நிலையமண்டபத்தை மாதமொரு முறை கிளினிக் நடத்த வழங்கியுள்ளதாகவும் சனசமூக நிலையத் தேவைக்காக அமைக்கப்பட்டுள்ள அடிப்படை வசதிகளை கிளினிக்குக்கு வரும் நூற்றுக்கணக்கான மக்களுக்கு ஒரே நேரத்தில் வழங்க முடியவில்லை என்றும் தெரிவித்தனர்.

சுகாதார திணைக்களத்தினர் விரைவில் மட்டுவில் வடக்குக்கான ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவித்தனர். (9)

## வரணிப் பகுதி வயல்களில் உப உணவுத் தானியங்கள்

யாழ்ப்பாணம், ஏப். 25

வரணி, இடைக்குறிச்சி, மாவில் வயல் பிரதேசத்தில் விவசாயிகள் உப உணவுத் தானியங்கள் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி உள்ளனர்.

சுமார் 4வரையான நிலப்பரப்பில் இந்தச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. பயறு, கௌவி மற்றும் பயற்றை போன்ற பயிரினங்கள் தற்போது பயிரிடப்பட்டுள்ளன. நெல் அறுவடையின் பின்னர் இடைக்கு இடை மழை பெய்தபடியால் இந்தச்செய்கையை மேற்கொள்ளவசதியாக இருந்தது.

மேலும் தாவளை, இயற்றாலை வரணி மற்றும் குடமியன் பிரதேச வயல் பிரதேசங்களிலும் இந்தச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-122)

## மானிப்பாய் பிரதேச மருத்துவமனை அபிவிருத்திக்கு உதவக் கோரிக்கை

வலி.தென்மேற்கு,ஏப்.23

மானிப்பாய் பிரதேச மருத்துவமனையின் அபிவிருத்திக்கு கைகொடுத்து உதவுமாறு பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ள நோயாளர் நலன்புரி சங்கம். இது கோயில்களுக்குச் செய்கின்ற சேவைக்கு நிகரான சேவை'' என்று சுட்டிக்காட்டியுள்ளது.


வாடகை வீட்டில் வசதியீனங்கள் மத்தியில் 65வருடங்களுக்கு மேலாக இயங்கி வந்த மானிப்பாய் பிரதேச மருத்துவமனை பொது மக்கள் வழங்கிய நிதி உதவியுடன் வாங்கப்பட்ட 17 பரப்புக்காணியில் அரசால் அமைக்கப்பட்ட கட்டடத்தில் தற்போது இயங்கி வருகிறது.

2008 ஆம் ஆண்டிலிருந்து வெளிநோயாளர் பிரிவுடன் ஆரம்பிக்கப்பட்ட குறித்த மருத்துவமனை 2010ஆம் ஆண்டு மகப்பேற்று விடுதியையும் அமைத்து கர்ப்பிணிகளுக்கு சிறந்த சேவையாற்றி வருகிறது.

இவற்றுடன் மக்களின் பங்களிப்புடன் கர்ப்பிணிகளுக்கு தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கு வசதியாக இளைப்பாறு மண்டபம், குடிதண்ணீர் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் குழாய் கிணறு, மருத்துவமனைக்கு வரும் நோயாளர்களின் நலன் கருதி தேநீர் சாலை சைக்கிள் பாதுகாப்பு நிலையம், தொலைக்காட்சி வசதி, நோயாளர்கள் இருப்பதற்கு வசதியாக வாங்குகள் உட்படபல வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தநிலையில் நோயாளர் நலன் சார்ந்த மேலும் பல வேலைத்திட்டங்கள் மேற்கொள்ள வேண்டிய அவசியம் மேற்கொண்டுள்ளது. கணினி மற்றும் பிறிண்டர், பல் மருத்துவர் அறைக்கான குளிரூட்டி, மழைநீர் சேகரிக்கும் தாங்கி, வைத்திய சேவைப் பரிசோதனைக்கான உபகரணங்கள், வெளிநோயாளர்களுக்கான பற்றுச்சீட்டு பதிவு அலுவலகம், மருத்துவ ஆய்வு கூடம், கிளினிக் அறைகள்,கண், தோல் சிகிச்சைக்கான கட்டட வசதிகள் வாங்குகள், இருக்கைகள், அலுமாரி போன்ற தளபாடங்களை வாங்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அரசின் உதவியை எதிர்பார்த்து காலதாமதம் ஏற்படுத்துவதனால் எமது தேவைகளை நாமே செய்து முடிக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. மக்களுக்கு நிறைவான சேவையை வழங்குவதற்கு வசதியாக ஒவ்வொருவரும் உங்களால் முடிந்த உதவிகளை பணமாகவோ பொருள்களாகவோ வழங்குமாறு நோயாளர் நலன்புரி சங்கம் கோரியுள்ளது. (வ-115)



நுவரெலியா வசந்த காலத்தை முன்னிட்டு நடைபெற்று வரும் நிகழ்வுகளில் விக்டோரியா பூங்காவில் இன்று மலர்க் கண்காட்சி நடைபெறவுள்ளது. அதற்காக ஆயத்தமாகிய நிலையில் காட்சியளிக்கும் பூங்கா. (வ

# அதிரடி காட்டியது ஆனந்தா

## சொந்த மண்ணில் சுருண்டது யாழ்.இந்து





*ஆனந்தாக் கல்லூரியின் இலக்குக் காப்பாளர் யாழ்.இந்துக் கல்லூரி வீரரை அபாரமாகப் பாய்ந்து ஆட்டமிழப்புச் செய்யும் காட்சி.*

யாழ். இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு ஆனந்தாக் கல்லூரிக்கும் இடையிலான சிநகுருநாதன் வெற்றிக் கிண்ணத்துக்கான இரண்டு நாள் டெஸ்ட் ஆட்டம் யாழ். இந்துவின் மிக மோசமான செயற்பாட்டால் படுதோல்வியுடன் ஒரே நாளிலேயே முடிவுக்கு வந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆனந்தாக் கல்லூரி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்து கற்றுக் கொண்ட வித்தைகளையெல்லாம் களத்தில் அவிழ்த்துவிட்டது. ஆனந்தாவின் வியூகத்துக்கேற்ப ஆரம்பம் முதலே அடிபணிந்து சென்றது யாழ். இந்துக் கல்லூரி. ஆரம்ப வீரர்கள் இருவருமே அடுத்தடுத்து 'டக்' ஆகினர். தொடர்ந்து வந்த முன்னிலை வீரர்களாலும் பதின்மத்தைத் தாண்ட முடியவில்லை. இந்துவின் மைந்தர்களிடையே இடியிறங்கியது போல் ஒரு உணர்வு மைதானத்தில் ஏற்பட ஆட்டம் ஆனந்தாவிடம் அப்படியே சென்றது. கஜனன் மட்டுமே பதின்மத்தைத் தாண்டி சற்று நிலைத்தார். ஆனால் முப்பது ஓட்டங்களுக்கு அப்பால் அவராலும் நீடிக்க முடியவில்லை. பின்வரிசை வீரர்களின் ஆட்டமும் நான்கும், ஐந்தும் என்று பதின்மத்துக்குள் அடங்கிப்போக மொத்தத்தில் முதல் இன்னிங்ஸ்க்காக இந்துக் கல்லூரி பழக்கப்பட்ட ஆடுகளத்திலேயே 87 ஓட்டங்களுக்குள் சுருண்டது. பந்து வீச்சில் ஆனந்தாக் கல்லூரி சார்பாக சுப்புன் வரக்கொட மூன்று இலக்குகளைக் கைப்பற்றினார்.

88 ஓட்டங்களைப் பெற்றால் முன்னிலை பெறலாம் என்ற நிலைமையில் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆனந்தாக் கல்லூரி அணிக்கு அதன் ஆரம்ப வீரர்களே அம்சமான அடித்தளம் அமைத்தனர். ஒரு கட்டத்தில் இந்துவுக்கான வாய்ப்பு மைதானத்தில் அறவே இல்லாமற் போனது. வெற்றிபெறும் எண்ணத்தை விடுத்து ஆட்டத்தை இரண்டு நாள்களுக்கு நீடிப்பதற்காகவும் சமப்படுத்துவதற்காகவுமே இந்துவின் போராட்டம் மாற்றம் பெற்றது. முதல் இன்னிங்ஸ்க்காக ஆனந்தா 275–4 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிக பட்சமாக சுப்புன் வரக்கொட ஆட்டமிழக்காமல் 84 ஓட்டங்களைப் பெற்று இந்துவின் மொத்த ஓட்டங்களையும் கிட்டத்தட்ட தனியாக நின்று சமப்படுத்தினார்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வேண்டுமாயின் 189 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்கிய இந்துக் கல்லூரி அணி வீரர்கள் இரண்டாவது இன்னிங்ஸிலும் அணியை அம்போ என்று கைவிட்டனர். இரண்டாவது இன்னிங்ஸில் மட்டும் நான்கு வீரர்கள் 'டக்' கில் வெளியேறினர். இந்துவின் வீழ்ச்சி படிப்படியாக ஆரம்பமானது. இருவர் ஒற்றையிலக்கத்திலும் இருவர் பதின்மத்திலும் பவிலியன் திரும்ப மொத்தத்தில் இந்துக் கல்லூரி அணி 106 ஓட்டங்களில் சுருண்டு இன்னிங்ஸாலும் 82 ஓட்டங்களாலும் சொந்த மண்ணில் படுதோல்வியடைந்தது. அதிகபட்சமாக மதுஷன் 28 ஓட்டங்களைப்பெற்றார். பந்துவீச்சில் ஆனந்தா சார்பாக சம்மு அசங்க 4இலக்குகளையும் கைப்பற்றினார். (த–ரி)

## வவுனியா பிரதேச செயலக புதுவருடக் கொண்டாட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 25

தமிழ் சிங்கள புது வருடத்தை முன்னிட்டு வவுனியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வாழ்வின் எழுச்சி திணைக்கள சமுதாய அடிப்படை வங்கியின் புத்தாண்டு விளையாட்டு வைபவம் இன்று வவுனியா வைரவப் புளியங்குளத்தில் அமைந்துள்ள சிறுவர் பூங்கா மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற இருப்பதோடு புத்தாண்டு சேமிப்பை மேற்கொண்ட சமுதாய அடிப்படை வங்கி வாடிக்கையாளர்களுக்கு குலுக்கல் முறையில் பரிசில்கள் வழங்குதல் மற்றும் அதிக சேமிப்பை மேற்கொண்ட வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தயோகத்தர்களுக்கு பரிசில்கள் வழங்கல் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி–23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 25

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7பேர் பங்குபற்றும் உதைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று பி.ப. 3.30மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.00 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவசக்தி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ரி–23)

■ ■ ■

மாங்குளம், ஏப். 25

கே.சி.சி.சியின் மட்டுப்படுத்தப்பட்ட 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் இன்று காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் ரெயின்போ விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் (புளூ) அணி மோதவுள்ளது. பிற்பகல் ஒரு மணிக்கு ஸ்ராலின் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விக்டோரியன் அணி மோதவுள்ளது. (ரி–422)

## ஹொக்கி பயிற்சி முகாம்

மாங்குளம் ஏப். 25

யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் அனுசரணையுடன் இலங்கை ஹொக்கிச் சங்கம் நடத்தும் பயிற்சி முகாம் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் நாளை பல்கலைக் கழக மைதானத்திலும் காலை 8.30மணி முதல் நடைபெறவுள்ளது. யாழ்.மாவட்டத்தில் ஹொக்கி நடுவர் தரத்தில் உள்ளவர்களும், ஹொக்கியில் ஆர்வமுள்ளவர்களும் இந்தப் பயிற்சி முகாமில் கலந்து கொள்ள முடியுமென யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (ரி–422)

## வவுனியா மாவட்ட கிண்ணம் கனகராயன் ம.வி.யின் கையில்



மாங்குளம், ஏப். 25

நிசாந்தினி மற்றும் கம்சாயினியின் மின்னல்வேக ஆட்டங்களால் வவுனியா மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான உதைபந்தாட்டத் தொடரில் கனகராயன்குளம் மகா வித்தியாலய அணி கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

வவுனியா மாவட்டப் பாடசாலை களுக்கிடையிலான பெண்கள் உதை பந்தாட்டம் கடந்த வியாழக்கிழமை சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இதன் இறுதியாட்டத்தில் கனகராயன் குளம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய அணி மோதியது.

ஆட்டம்ஆரம்பமானது முதல்கனகராயன்குளம் மகா வித்தியாலய அணியினரின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்படவே செய்தது. ஆட்டம் தொடங்கி 4வது நிமிடத்தில் கனகராயன்குளம் மகா வித்தியாலய அணி வீராங்கனை அனுசாயினி தட்டிக் கொடுத்த பந்தை நிசாந்தினி அற்புதமாக கோலாக்கினார். அதன் பின்னர் பழிதீர்ப்பதற்காக நெளுக்குளம் அணியினர் பல தடவைகள் முயற்சித்த போதும் கனகராயன்குளம் மகா வித்தியாலய அணியின் பின்கள வீரர்களைத் தாண்டிச் செல்வதில் சிரமப்பட்டனர். இதனால் இடைவேளைக்கு முன்னர் 1:0 என கனகராயன்குளம் மகா வித்தியாலய அணி முன்னிலை வகித்தது.

மேலதிகமாக ஒரு கோலை அடித்து விட்டால் வெற்றியை கிட்டத்தட்ட உறுதிசெய்யலாம் என்ற நிலையில் கனகராயன் ம.வித்தியாலயஅணி. மாறாக தமது பக்கத்தில் இருந்து ஒரு கோலை அடித்து பழிதீர்த்து விட்டால் ஆட்டத்தை ஒருவாறு சமநிலைப்படுத்திவிடலாம் என்ற நிலையில் நெளுக்குளம் ம.வித்தியாலய அணி. இந்த இக்கட்டான நேரத்திலும் நெளுக்குளத்தின் தவறான அணுகுமுறையால் கனகராயன் குளம் மகா வித்தியாலய அணிக்கு தண்டனை உதை கிடைத்தது. இதனைச் சரியாகப் பயன்படுத்திய கம்சாயினி அசத்தலாக கோலாக்க நிலை குலைந்தது நெளுக்குளம் மகா வித்தியாலய அணி. அதன் பின்னர் ஆட்டத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த கனகராயன்குளம் மகா வித்தியாலய அணியினர் ஆட்டம் முடிவடைவதற்கு 2நிமிடம் இருக்கும் போதும் நிசாந்தினியால் மேலும் ஒரு கோல் போட வெற்றியை உறுதி செய்து வவுனியா மாவட்டசம்பியனாகியது. (த–ரி–422)

2015 ஏப்ரல் 25 சனிக்கிழமை
உதயன்




# பங்களாதேஷின் தாண்டவத்தில் பதறியது பாகிஸ்தான்



குமானினதும் சஹிப் அல் ஹசனினதும் சகலதுறை அசத்தல்கள் கைகொடுக்க 'ரி–20' ஆட்டத்திலும் பாகிஸ்தானைப் பந்தாடி தொடரைக் கைப்பற்றியது பங்களாதேஷ்.

மூன்று ஒருநாள் ஆட்டங்களிலும் பாகிஸ்தானைப் பந்தாடி தொடரை முழுதுமாகக் கைப்பற்றிய நிலையில் 'ரி–20' ஆட்டத்தையும் கைப்பற்றிவிட்டால். மேலும் ஒரு வரலாற்றுச் சாதனையைப் பதிவு செய்யலாம் என்ற நிலையில் களமிறங்கியது பங்களாதேஷ். ஒருநாள் தொடரை இழந்துவிட்ட காரணத்தினால் மீதமிருக்கும் ஒரேயொரு 'ரி–20' ஆட்டத்தையாவது கைப்பற்றி ஆறுதலடைய வேண்டும் என்ற பரிதாப நிலைமையில் களமிறங்கியது பாகிஸ்தான்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வுசெய்ய களத்தில் அஹமட்டுடன் செசாட். 'ரி–20' ஆட்டத்துக்கும் இவர்கள் இருவரும் ஆடிய முறைக்கும் சிறிதேனும் சம்பந்தம் இல்லை. அஹமட்டின் சராசரி 70. செசாட்டின் சராசரி 54. பாகிஸ்தான் 50 ஓட்டங்களை எட்டுவதற்கு 9 பந்துப்பரிமாற்றங்கள் தேவைப்பட்டது. ஐம்பதாவது ஓட்டத்திலேயே செசாட் பவிலியனுக்குச் சென்றார். களத்தில் அதிரடிமன்னனும் அணித் தலைவருமான அப்ரிடி. வந்தவேகத்தில் சிக்சர் ஒன்றை பறக்க விட்டார். ஆனால் அதே வேகத்தில் அவர் பவிலியனுக்கு செல்வதை எவராலும் தடுக்க முடியவில்லை. அடுத்து அஹமட்டும் ஆட்டமிழக்க பாகிஸ்தான் 77–3. சொகைலுடன் இணைந்தார் ஹபிஸ். இருவரும் இணைந்து இலக்குச்சரிவை தாக்குப்பிடித்து அணியின் சரிவை படிப்படியாக மீட்டெடுத்தனர். ஆனபோதிலும் அதிரடியென்பது பாகிஸ்தானின் பக்கம் பற்றாக்குறையாகவே இருந்தது. முடிவில் பாகிஸ்தான் 141–5.

120 பந்துகளில் 142 ஓட்டங்கள். தற்போதுள்ள நிலையில் பங்களாதேஷ் ஊதித்தள்ளிவிடும். களத்தில் இக்பாலுடன் சர்கர். சர்கர் டக்குடன் சறுகினார். ஆட்டம் பாகிஸ்தான் பக்கமாக சாய்ந்தது. சஹிப் அல் ஹசன் வந்ததும் இக்பால் சென்றார். இக்பாலின்வழியில்ரஹிமும். பாகிஸ்தானின் ஆறுதல் வெற்றிக்கான சந்தர்ப்பங்கள் அதிகமாகக் காணப்பட்டன. ஹசனுடன் இணைந்தார் ரகுமான். பாகிஸ்தானிடம் இருந்த ஆட்டம் படிப்படியாகப் பறிக்கப்பட்டது. சிக்சர்கள் பெரியளவில் பவுண்டரிகள் அடிக்கொருதடவை எல்லைக் கோட்டைத் தொட்டுவிட்டு வந்தன. இணைப்பாட்டம் வலுப்பெற ஆளுக்கொரு அரைச்சதமும் கண்டனர். அதிரடி இரட்டிப்பாக மேலதிக இலக்குகள் இழப்பின்றி வெற்றி 16ஆவது பந்துப்பரிமாற்றத்திலேயே வெற்றியை ருசித்தது பங்களாதேஷ். சஹிப் அல் ஹசன் 57 ஓட்டங்களுடனும் ரகுமான் 51 ஓட்டங்களுடனும் இறுதிவரை ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர். ஆட்டநாயகனாக சகலதுறைகளிலும் அசத்திய ரகுமான் தெரிவானார். (ரி)



# டெஸ்ட் தான் எனது கனவு

2தென்னாபிரிக்கா அணிக்காக டெஸ்ட் ஆட்டத்தில் விளையாட வேண்டும் என்பது தனது கனவு என்று அதிரடி ஆட்டக்காரர் டேவிட் மில்லர் தெரிவித்துள்ளார்.

நடப்பு ஐ.பி.எல். தொடரில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியில் விளையாடி வரும் மில்லர் தனது டெஸ்ட் கனவு தொடர்பாக தெரிவித்ததாவது:– 'டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணிக்காக விளையாட வேண்டும். அதனை நிறைவேற்ற கடுமையாக உழைத்து வருகிறேன். எனது கனவு நனவாக சில காலம் பிடிக்கும் என்பது எனக்குத் தெரியும். இருப்பினும் அந்த வாய்ப்புக்காக தயாராக காத்திருப்பேன்– என்றார். (த–ரி)

# வில்லியர்ஸை வீழ்த்தாவிட்டால் பேராபத்து



பெங்களூருக்கு எதிரான ஆட்டத்தில் அந்த அணியின் அதிரடி வீரரான வில்லியர்ஸை வீழ்த்தியது திருப்புமுனையாக அமைந்தது. எங்களுக்கு மட்டுமல்ல எந்த அணிக்கும் வில்லியர்ஸ்அச்சுறுத்தலான வீரர். அவரை நிற்க விட்டால் ஆட்டமிகைமீறிச் சென்றுவிடும். என்று சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் நட்சத்திர விரர் ரெய்னா தெரிவித்துள்ளார்.

பெங்களூரில் நேற்று முன்தினம் நடந்த ஐ.பி.எல். லீக் ஆட்டத்தில் பெங்களூரை தோற்கடித்தது சென்னை. இந்த வெற்றி குறித்து தெரிவிக்கையிலேயே; ரெய்னா இவ்வாறு தெரிவித்துள்ளார். ரெய்னா தெரிவித்ததாவது:– 'வில்லியர்ஸும், விராட் ஹோக்லியும் களத்தில் நின்றபோது நிச்சயம் பெங்களூர் அணி வெற்றி பெறும் என்று நினைத்தேன். ஆனால் வில்லியர்ஸ் ஆட்டமிழந்தபோது நாங்கள் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. அதே நேரத்தில் விராட் ஹோக்லியும் ஆட்டத்தை வெற்றியில் முடிக்கும் ஆற்றல் கொண்டவர் என்பதால் மிகுந்த எச்சரிக்கையோடு போட்டியை அணுகினோம். பல மாதங்களாகத் தொடர்ந்து திறனில் நீடிக்கும் ஒரு வீரர்தான் வில்லியர்ஸ். இவர் தாக்குதல் பாணியில் விளையாடுபவர் என்பதனால் அவர் ஆட்டத்தை ரசிக்க முடியும் ஆனால்அனுமதிக்க முடியாது. மீறி அனுமதித்தால் அது பேராபத்து – என்றார். (ரி)

# சச்சினுக்கு நேற்று பிறந்தநாள்

கிரிக்கெட்டின் கடவுள் என்று வர்ணிக்கப்படும் சச்சினுக்கு நேற்று பிற[illegible]ளாகும். இன்று அவருக்கு தற்போது மும்பை இந்தியன்ஸ் அணிக்கு ஆலோசகராக இருக்கும் அவருக்கு சக வீரர்கள் வாழ்த்து தெரிவித்தனர். குறிப்பாக சச்சினின் குழந்தைப்பருவ நண்பனான காம்பளி வாழ்த்துத் தெரிவித்தார்.



சச்சினின் நண்பரான காம்பளி தனது டுவிட்டரில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், 'கிரிக்கெட் சவால்களை விரும்புபவர் சச்சின். நியூஸிலாந்தில் தொடக்க வீரராக துணிச்சலாக களமிறங்குவதற்கும், ஆட்டத்தின் போது கடைசி பந்துப் பரிமாற்றத்தை வீசுவதற்கும் சச்சின் என்றுமே அஞ்சியது இல்லை. சவாலை கண்டு எப்போதுமே அஞ்சாத சச்சினை நீண்ட நாள்கள் ஆரோக்கியத்துடன் வாழ்த்துகிறேன்' என்று டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். (ரி)

# சானியா ஜோடிக்கு முதல் அடி



மொத்தம் ரூபா 4.5 கோடி(இந்தியமதிப்பில்) பரிசுத்தொகைக்கான டென்னிஸ்தொடர் ஜேர்மனியில் தற்பொழுது நடந்து வருகிறது. இந்தத் தொடரில் பெண்கள் இரட்டையர் பிரிவில் மார்ட்டீனா கிங்கிஸ் (சுவிட்ஸர்லாந்து)– சானியா மிர்சா (இந்தியா) ஜோடி பெட்ரா மார்டிக் (குரோஷியா) ஸ்டெபானி வோட் (லிச்டென்ஸ்டெயின்) இணையுடன் மோதியது.

இந்த ஆட்டத்தில் 3:6, 3:6 என்ற நேர்செற் கணக்கில் சானியா–கிங்கிஸ் ஜோடி அதிர்ச்சிகரமாக தோல்வியைத் தழுவியது. சமீபத்தில் மார்ட்டீனா கிங்கிசுடன் முதல்முறையாக கூட்டணி அமைத்த சானியா மிர்சா வரிசையாக இண்டியன்வெல்ஸ், மியாமி, சார்லஸ்டன் ஆகிய தொடர்களில் கிண்ணத்தை வென்றதுடன், இரட்டையர் தரவரிசையில் முதல் இடத்தை பிடித்து வரலாறும் படைத்தார். ஜோடியாக கைகோர்த்த பிறகு இவர்கள் சந்தித்த முதல் தோல்வி இது தான். சானியா – கிங்கிசின் வெற்றிப் பயணத்துக்கு முற்றுப்புள்ளி வைத்த மார்ட்டீக் – ஸ்டெபானி இப்போது தான் முதல் முறையாக ஜோடி சேர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (த–ரி)


# செய்யுங்கள் அல்லது செத்து மடியுங்கள்

பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் தொடரில் பாகிஸ்தான் 3:0 என்ற கணக்கில் படுதோல்வி கண்டதைத் தொடர்ந்து அந்த அணியின் பயிற்சியாளர் வக்கார் யூனிஸ் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்று முன்னாள் கப்டன் லத்தீப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் லத்தீப் தெரிவித்ததாவது: 'பாகிஸ்தான் படுதோல்வியைச் சந்தித்திருக்கும் இந்த நேரத்தில் வக்கார் யூனிஸ் தனது பதவியை ராஜினாமா செய்வது சரியாக இருக்கும் என நினைக்கிறேன். அவர் அப்படி செய்தால் அவருக்கும் அது நல்லது. பங்களாதேஷ் அணி அதன் கிரிக்கெட்டை மேம்படுத்தியுள்ளது. ஆனாலும் பாகிஸ்தான் இவ்வளவு மோசமாக தோற்றிருப்பதை சகித்துக்கொள்ள முடியாது. இந்தத் தோல்விக்கு பாகிஸ்தான் அணி நிர்வாகம்தான் முழுப்பொறுப்பு. பங்களாதேஷுக்கு எதிரான 3 ஆட்டங்களிலும் சரியான 11 வீரர்களைக் கூட அவர்களால் களமிறக்க முடியவில்லை. தற்போதைய தலைவர் அசார் அலி எதிர்காலத்தில் சிறந்த தலைவராக ஜொலிப்பார் என்று தோன்றவில்லை' என்றார். (ரி)

# இந்தியாவுக்காக ஆட வேண்டும்

## –சேவாக் உருக்கம்



இந்திய அணியில் மீண்டும் இடம் பிடித்து விளையாட விரும்புகிறேன் என்று அதிரடி ஆட்டக்காரர் வீரேந்திர ஷேவாக் விருப்பம் தெரிவித்துள்ளார்.

ஒரு காலத்தில் சச்சினினுடன் துடுப்பைச் சுழற்றிக் கொண்டு களமிறங்க வரும் ஷேவாக்கை கண்டு எதிரணி வீரர்கள் மிரண்டுபோவார்கள். ஆனால் திடீரென ஷேவாக்கின் சகாப்தம் முடிவுக்கு வந்தது. கடந்த 2 வருடத்துக்கும் மேலாக அவர் இந்திய அணியில் இடம் பெறவில்லை. கடைசியாக 2013 ஆம் ஆண்டு இந்திய அணியில் இடம்பெற்று ஆடியிருந்தார். அதன் பிறகு அணியில் இடம்பெறவில்லை.

இந்த நிலையில்தான் விலக்கப்பட்டது தொடர்பாக முதன்முறையாக மனம் திறந்து பேசியுள்ளார் ஷேவாக். இது தொடர்பாக ஷேவாக் தெரிவிக்கையில்; கடந்த 2011 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா, இங்கிலாந்து தொடரின்போது எனக்கு கண்ணில் பிரச்சினை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து எனக்குத் தலைவலியும் வந்தது. இதனால் என்னால் சரியாக ஆட முடியவில்லை. இந்தியா வந்ததும் எனது மருத்துவரிடம் ஆலோசனை நடத்தியபோது தூரப் பார்வை பிரச்சினை இருப்பதை அவர் கண்டுபிடித்தார். இதுவே கண் வலிக்கும், தலைவலிக்கும் காரணம் என்று அவர் கூறினார். இதையடுத்து நான் கண்ணாடி போட ஆரம்பித்தேன். அதற்குப் பழக்கப்படவே எனக்கு ஒரு வருடமாகி விட்டது. என்னால் பந்தை சரியாக கணித்து அடிப்பதில் சிரமம் இருந்தது. ஆனால் தற்பொழுது எனக்கு கண்ணாடி இசைவாக்கம் ஆகிவிட்டது. இதனால் என்னால் இனி சிறப்பாக செயற்பட முடியும். இந்திய அணியில் இடம்பெற்று விளையாட இன்னும் ஆசை உள்ளது. என்னால் முடிந்தவரை சிறப்பாக ஆட முயற்சிப்பேன். இந்திய அணியில் இடம்பெற்று கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற விரும்புகிறேன் என்று தெரிவித்தார்.

(த–ரி)

# பலத்துடன் இங்கிலாந்து



தீவுகள் எதிர் இங்கிலாந்துக்கிடையிலான மூன்று டெஸ்ட் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் இரண்டாவது ஆட்டம் தற்பொழுது மே.தீவுகளில் நடைபெற்று வருகின்றது. முதலாவது டெஸ்ட் சமநிலையில் முடிவடைந்த நிலையில், இந்த ஆட்டத்தை வென்றுவிட்டால் அடுத்த ஆட்டத்தின் முடிவு எதுவாக இருந்தாலும் கிண்ணம் கிடைக்கும் என்ற நிலைமை இரண்டு அணியினருக்கும்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து களத்தடுப்பைத் தீர்மானிக்க தீவுகளின் முதல் இன்னிங்ஸுக்காக சகல இலக்குகளையும் இழந்து 299 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி இரண்டாம்நாள் ஆட்டநேர முடிவில் இலக்குகள் இழப்பின்றி 74 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இந்த நிலையில் நேற்றைய மூன்றாம்நாள் ஆட்டத்துக்காக தொடர்ந்து துடுப்பெடுத்தாட களத்தில் குக்குடன் ருரொட். இரண்டாம்நாளின் முடிவுவேளையில் அரைச்சதத்துக்கு அருகில் நின்ற இவர்கள் அதை எட்டுவதையும் எவராலும் தடுக்க முடியவில்லை. ஆனால் சதம் இவர்கள் இருவருக்குமே எட்டாக் கனியாக மாறியதுதான் பரிதாபம். 159 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில், ஆரம்ப வீரர்கள் இருவருமே காணாமற் போயினர். பெல் ஒரு ஓட்டத்தில் போல்ட்டாக கிரிக்கெட்டின் தாயகம் சோகத்தில் மூழ்கியது. களத்தில் பலன்ஸ். பெயருக்கேற்றவாறே சரிவை திறமையாக பலன்ஸ் செய்தார். பலன்ஸுக்கு பக்கபலமாக நின்ற ரூட் ஒருநாள் பாணியில் ஓட்டங்களைக் குவித்துக் கொண்டிருந்தார். இவர்களின் இணைப்பாட்டத்தில் மேலதிக இலக்குகள் இழப்பின்றி மூன்றே இலக்குகளில் தீவுகளின் முதல் இன்னிங்ஸை சமன் செய்து முன்னிலைபெறத் தொடங்கியது கிரிக்கெட்டின் தாயகம். ஆரம்ப வீரர்களைப் போலவே சதத்தைத் தவறவிட்டு பலன்ஸ் 77 ஓட்டங்களில் ஆட்டமிழந்தாலும், தொடர்ந்தும் சிறப்பாக துடுப்பெடுத்தாடி சதத்தைப் பதிவு செய்தார் ரூட். அலியும் ஸ்ரோக்ஸிம் அவ்வளவாக இல்லை. மொத்தத்தில் மூன்றாம்நாள் ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து 373–6. ரூட் 118 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளார். பந்துவீச்சில் தீவுகள் சார்பாக கபிரியேல், பிஸ்கூ ஆகியோர் தலா இரண்டு இலக்குகளையும் சாமூவேல்ஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

(த–ரி)

**Wheel மாஸ்டர் தேவை**

யாழில் உள்ள பிரபல்யமான சேவிஸ் நிலையத்துக்கு wheel aligment, wheel ballancer, tyre changer பார்ப்பதற்கு அனுபவமுள்ள நபர் தேவை.
கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு: 077 3183723



**ST ANTONY'S COMPUTER SALE**

HP FULL SET HP CORE 2DUO
29750/=
FREE - WEBCAM / 8GB PEN/ HPHONE
(ONE YEAR WARRANTY)
சகல விதமான கணினி சார்பான உதிரிப் பாகங்கள், ரோணர்கள், திருத்தங்கள் அனைத்தும் எம்மிடம் உண்டு.
187, K.K.S ROAD, JAFFNA TOWN
021 222 4865
021 221 7292
075 0698608

# முதன்முதலாக மைதானத்தில் குழந்தை ஷிபாவுடன் டோனி

மகளின் சிரிப்பு எனது வாழ்க்கையை மாற்றியது. நான் எங்கு நின்றாலும் சரி அவளுக்கு என்னைப் பார்க்க வேண்டும். இல்லாவிட்டால் உடனே அழுது விடுவாள்.

மகள் குறித்து – இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார் டோனி. சென்னையணி இறுதியாக பெங்களூர் அணியை எதிர்கொண்டது. இந்த ஆட்டத்துக்கு முதல்முதலாக தனது குழந்தையுடன் வருகை தந்திருந்தார் டோனி. டோனியின் குழந்தையை மைதானத்துக்குக் கொண்டுவருவது அதுவே முதற்தடவை. ஆட்டத்தின்போது டோனியின் மனைவி சாக்ஷி குழந்தையுடன் அமர்ந்து ரசித்துக் கொண்டிருந்தார். டோனி, சாக் ஷி இவர்களின் குழந்தை ஷிபா என்று இந்த மூவரையுமே சிறிதுநேரம் படப்பிடிப்பாளர் காட்டிக்கொண்டிருந்தார். இந்த ஆட்டத்தில் சென்னை இலகு வெற்றியைப் பதிவுசெய்தது. அதன்பின் டோனி குழந்தையை வீரர்களின் அறைக்கு கொண்டு கொஞ்சி மகிழ்ந்தார். சக வீரர்களும் குழந்தையை கொஞ்சி மகிழ்ந்தனர். குறிப்பாக வெளிநாட்டு வீரர்கள் டோனியின் குழந்தையை கொஞ்சுவதில் ஆர்வமாக இருந்தனர்.

இந்த நிலையில் குழந்தை குறித்து டோனி கூறியதாவது: – எனது மகள் பிறந்த போது நான் இந்தியாவில் இல்லை. அவரது முகத்தைப் பார்க்க வில்லை. அது கடினமான நாள்களாக இருந்தது. பெற்றோர் வாழ்க்கையை குழந்தை மாற்றிவிடும். எனது மகளின் சிரிப்பு என் வாழ்க்கையை மாற்றி விட்டது. அவளுக்கு நான் இந்திய அணிக்கோ, சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கோ விளையாடுவது பற்றியெல்லாம் அவளுக்கு கவலை இல்லை. அவளுக்கு என்னைப் பார்க்க வேண்டும். இல்லாவிட்டால் அழவேண்டும். அழுது என்னை வரவழைத்து காரியத்தைச் சாதித்து விடுகிறாள் – என்றார் நகைச் சுவையாக.

(த–ரி)

**Sky Computers System**

அனைத்து விதமான கணினிகளும் (Destop Pc, Laptop) உடனுக்குடன் திருத்திக் கொடுக்கப்படும்.
TP: 21-222-1417
89, கண்டி றோட், யாழ்ப்பாணம். [illegible]

**வெளிநாட்டு வேலைவாய்ப்பு**

இன்றும் நாளையும் மட்டும் 0778668420

மொறீசியஸ், டுபாய், பஹ்ரேன், சவூதிஅரேபியா, கட்டார் ஆகிய நாடுகளில் படித்தவர்கள், மற்றும் திறமையுள்ளவர்களுக்கான வேலைவாய்ப்புக்கள்.

Office secretary, Workshop supervisor, Operation supervisor, Diesel mechanic, Supervisor, Heavy vehicle driver, Bus driver, Call taxi driver, Cook, Electrician, Carpenter, Mason, Tiles layer, Plumper, Pipe fitter, Pipe fitter helper, Construction labourer, Car polisher, Clearner.

சம்பளம் :- 40000 - 100000 வரை.
25 (சனி), 26 (ஞாயிறு) [illegible]
நேரம்:- காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை.
இடம்:- 49, [illegible]
யாழ்ப்பாணம்.
(வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அனுமதியுடன்)
SV International (Kandy) PVT LTD


**குழாய் கிணறு தோண்டும் இயந்திரம் உடனடி விற்பனைக்கு உண்டு**

★ TATA Lorry, DANYO Compressor 550 Drilling Rig & Indian (Andaver)
★ 175 அடி ஆழத்துக்கு தோண்டக் கூடிய Rod உள்ளது.
★ Hammers 3தரப்படும்.
★ Air Hours 200 அடி தரப்படும்.
இயந்திரத்துக்குரிய அனைத்துப் பொருள்களும் தரப்படும் விலை பேசித்தீர்மானிக்கலாம்.



தொடர்புகளுக்கு -
0773868147
0773868156

## மரண அறிவித்தல்



### அம்பலவாணர் கனகசபை

(ஓய்வு பெற்ற பிரதம எழுதுவினைஞர்)

காரைநகர் மணற்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நாவற்கண்டி காரைநகரை வசிப்பிடமாகவும் தற்பொழுது 37/5, 1ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசித்தவருமாகிய அம்பலவாணர் கனகசபை நேற்று (24.04.2015) வெள்ளிக்கிழமை இயற்கையெய்தினார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான விநாயகசிவம்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், சிவஞானவதியின் அன்புக் கணவரும், பஞ்சாட்சரம், கமலாதேவி, காலஞ்சென்ற சோதிநாதன் ஆகியோரின் சகோதரரும், சிவசோதி (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), சிவபாலன் (சுவிஸ்), சிவகாமசுந்தரி, சிவகலை ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேஸ்வரி, சிவதர்சினி, நித்தியானந்தன் (கிராமசேவகர்), குமாரரட்ணம் (பபா கடை) ஆகியோரின் அன்பு மாமனும், பிரணவன், ரஞ்சினி, சாம்பவி, சங்கவி, நித்தியா, செந்தூரான், உமாசுதன், உமாசங்கர், உமாகாந்தன் ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.042015) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37/5, 1ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

தகவல் :- சிவசோதி (மகன்) 077 2177841
க. சிவபாலன் (மகன்) 0041433213563
தி. நித்தியானந்தன் (G.S) 075 7602756
சி. குமாரரட்ணம் (பபா) 077 0711287

**இறைதியான குணமாக்கல் ஆராதனைகள்**
**கொழும்பு உயிர்த்த ஆண்டவர் சமூகத்தினரால்**
**சகோ.லலித் பெரேரா தலைமையில்**
**நடத்தப்படவிருக்கின்ற இறைதியான குணமாக்கல் ஆராதனைகள் பின்வரும் இடங்களில் நடைபெற ஏற்பாடாகியுள்ளன**



மே 1, வெள்ளிக்கிழமை
காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை
யாழ். இறைதியான இல்ல மண்டபம்
மாலை 5.00 மணிமுதல் 08 மணிவரை
செம்பியன்பற்று பிலிப்பு நேரியார் ஆலய முன்றலில்

மே 2, சனிக்கிழமை
காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை
திருமணமான தம்பதியருக்கு
யாழ். இறைதியான இல்ல மண்டபம்
மாலை 5.00 மணிமுதல் 08 மணிவரை
இளவாலை புனித அன்னாள் ஆலய முன்றல்

மே 3, ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை
நாரந்தனை புனித் பேதுரு பாவிலு ஆலயம்
மாலை 5.30 மணிமுதல் 08 மணிவரை
குருநகர் புனித யாகப்பர் ஆலய முன்றல்
மேற்படி இடங்களில் ஞாயிறு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

மே 4, திங்கட்கிழமை
காலை 9.30 மணிமுதல் 11.30 மணிவரை
குருக்கள், கன்னியர், துறவிகளுக்கு
யாழ்.பிரதான வீதி, திருமறைக் கலாமன்ற மண்டபம்.

இறைவார்த்தையைக் கேட்டு, இறை ஆசிர்பெற்று விடுதலை வாழ்வைப் பெற அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

இறைதியானக் குழுவினர். யாழ். மறைமாவட்டம்.

இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.